

கல்கி
குழந்தைகள் சிறப்பிதழ்
KALKI 15-4-79
75 காசு


உங்கள் மழலைச் செல்வம் தீப்பெட்டிக் குச்சிகளை எடுத்து விளையாடுகிறதா?
அனுமதிக்காதீர்கள்



ஏம்பா, மீசைக்கும் `சம்மர்கட்' உண்டா?
சலூன்
சம்மர் கட்
`தர்மசங்கடம்' தம்பு! — நடனம்
அந்த மாமா மாதிரி புடலங்கா இருக்கு பார்த்தியா, அப்பா!
அந்த மாமாகிட்டே-தான் நிழல் அதிகமாயிருக்கு! அங்கே போய் நிக்கறேன்!


Kalki Shopping Page

Kalki Shopping Page

Admired for beauty
Bought for performance

Bharat TV

Urvashi



Available at:


TV TRONICS
7, Sunkurama Chetty St
Madras 600 001 Phone 27427
74/1 Siruvallur Road
Perambur, Madras 600 011
Phone: 666132 (PP)

ACIL BT 18/79

Admired for beauty
Bought for performance

Bharat TV

Urvashi



Available at:

LAKSHMI MUSICALS
(Air-conditioned)
No. 61, Usman Road
Madras-600 017
Phone: 444629/442290

ACIL BT 20/79

Admired for beauty
Bought for performance

Bharat TV

Urvashi



Available at:


VIVEK & CO
Purasawalkam, Madras-600 007
Phone : 662462/663545
Mylapore, Madras 600 004
Phone : 76923 75661.

ACIL BT 17/79

Admired for beauty
Bought for performance

Bharat TV

Urvashi



Available at:

TV TRADERS
2, C.P. Ramaswamy Iyer Road
Madras 600 018 Phone: 71238
AA155, Annanagar
Madras 600 040

ACIL BT 16/79

''கண்ணேல்லியோ – வாம்மா கண்ணு. வந்து ஜடை போட்டுக்கோ, அப்புறம் பவுடர் போட்டுண்டு பொட்டு வைச்சுண்டு சமத்தா பால் குடிச்சுக்கோ.''

''அதுக்கப்புறம் போய் விளையாடம்மா – நீ வெளையாடறதை வேண்டான்னு சொல்லலே – மொதல்லே பாலைக் குடிச்சுடு. வாம்மா.''

''பாரு... இப்பத்தானே புதுச்சட்டை போட்டேன்! அதிலே மண்ணை வாரிப் போட்டா நன்னாயிருக்கா? ஒரு நாளைக்கு எத்தனை தரம் மாத்தறது? வாண்டாம்மா கண்ணு – நீதான் என் கண்ணு. வா... வாம்மா பால் ஆறிப்போயிடும் வாம்மா...''

''வரமாட்டியா? புழுதியிலே படுத்துப் புரளாதே – நான் சொல்றதைக் கேளு – இல்லாட்டி அப்பா ஆபீஸ்லே இருந்து வந்தா அவரிடம் சொல்லி உன்னை நன்னா அடிக்கச் சொல்வேன்... வாம்மா!''

''அப்பா அடிக்க மாட்டாரா? நான்தான் அடிப்பேனா? நான் அடிக்கலே... அப்பா விடவும் சொல்லலே–வாம்மா நீ சமர்த்தோ இல்லையோ! வாம்மா!''

''இப்போ எதுக்குத் தேம்பிண்டு அழறே – நீயும் வரமாட்டாய். கையைப் பிடிச்சு இழுத்தா அதுக்கு அழலாமோ? நான் உன்னை அடிக்கலையே – திட்டவும் இல்லையே – கையைத்தானே பிடிச்சேன்...!''

''அப்பா வந்தா அவரிடம் சொல்லுவியா? என்ன சொல்லுவே? நான் அடிச்சதாச் சொல்லுவியா? நான் அடிக்கலையே! பால் சாப்பிட வான்னுதான் கூப்பிட்டேன். வான்னு கையைப் பிடிச்சா அதுக்கு இப்பிடியெல்லாம் சொல்லலாமோ? வாம்மா...!''

''பாரு பாரு... நீயே பாரு! இது நன்னாயிருக்கா? தலைமேலே மண்ணைப் போட்டுக்கறயே? அப்பறம் பக்கத்தாத்து மாமி உன்னை அசடுன்னு சொல்லுவா! இந்தப் பொண்ணு எதுக்கெடுத்தாலும் அடம் பிடிக்கறதுன்னு சொல்லிச் சிரிப்பா...!''


''எதுத்தாத்துப் பங்கஜம் வர்ரா பாரு – எவ்வளவு சமர்த்தா இருக்கா? அவ உன்னைப் போல் சின்னப் பாப்பாதானே? அவ எப்படி ஜடை போட்டுண்டு ... பொட்டு வச்சுண்டு அழகா வர்ரா பாரு! அவ மண்ணைத் தலையிலே போட்டுக்கலே இல்லே!''

''சமர்த்தா வர்ரா–நீயும் பாலைக் குடிச்சுட்டு அப்புறம் போய் அவளோட விளையாடலாம் வா... வாம்மா கண்ணு!''

''நான் சொன்னாக் கேக்க மாட்டியா? அப்புறம் உனக்கு லாலி மிட்டாய் வாங்கித் தர மாட்டேன். வாம்மா!... பக்கத்தாத்து மாமி உன்னைப் பார்த்துச் சிரிப்பா – நான் சின்ன வயசிலே இப்பிடி அடம் பிடிச்சதே இல்லேன்னு சொல்லுவா! வாம்மா கண்ணு வா... கண்ணேல்லியோ வாம்மா...!''

''அப்பப்பா இவ பண்ற விஷமம் எனக்குச் சகிக்கல்லே மாமி!''

''இவ ஒருத்தி போதும்... எனக்குத் தாங்கவும் முடியல்லே! இவ பால் குடிக்கறதுக்குள்ளே போதும் போதுன்னு ஆயிடறது!''



''அவர் வந்தா — குழந்தை அரும்பா இளைச்சுப் போயிட்டுது. வேளை வேளைக்குச் சரியாப் பாலும் சோறும் நீ கொடுத்தாத் தானே — அப்படின்னு என்னைக் கோவிச்சுக் கறார்!''

''பாலைக் குடின்னு ஆயிரந்தடவை கெஞ்சி னாலும் இது கேட்டாத்தானே மாமி! என்னவோ போங்கோ... என்ன செய்யறதுன்னே எனக்குப் புரியல்லே...!''



''கடைக்குப் போறேளா? அப்படியே இதுக்கு இரண்டு மிட்டாய் வாங்கிண்டு வாங்கோ — காசு அப்பறம் கொடுக்கிறேன். கையிலே சில்லறை இல்லே...''

''வாம்மா கண்ணு, மாமி உனக்கு மிட்டாய் வாங்கி வருவா. மாமி வர்றதுக்குள்ளே சமத்தாப் பாலைக் குடிச்சுக்கோ, வாம்மா — கண்ணு... என் ராசாத்தி... வா இந்தப் பவுடர்எத்தனை வாசனையாஇருக்கு பாத்தியா? ரோஜாப்பூ வாசனை கம்னு அடிக்கறது. வா, மொதல்லே பாலைக் குடிச்சுக்கோ... வாம்மா... கடைக்குப் போன மாமி வந்துடுவா...''

''சுதாக் கண்ணு... சமத்தா விளையாடிண்டிருக்கயா? பாட்டி எங்கே? தூங்கறாளா?'' இப்படிக் கூறிக் கொண்டே தாயார் காய்கறி வாங்கிய பையுடன் வீட்டுக்குள்ளே நுழைந்தாள்.

''அம்மா வந்துட்டியா? எங்கே எனக்கு மிட்டாய்?''

இதுவரை வைத்து விளையாடிய பொம்மையைத் தூக்கி எறிந்துவிட்டு அம்மாவிடம் ஆவலோடு ஓடினாள் சுதா!




எதிர்காலச் செல்வங்கள்

நாங்கள் குடும்பத்துடன் திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியைக் கண் குளிரக் கண்டு, பின்பு திரும்பும் வழியில் திருநெல்வேலியிலிருந்து அம்பாசமுத்திரத்திற்கு வந்து கொண்டிருந்தோம். அப்பொழுது இரவு சுமார் 9 மணிக்கு மேல் இருக்கும். பேருந்து பேட்டையைக் கடந்து ஒரு சிறிய பாலத்தின், அருகில் வந்து கொண்டிருக்கும் பொழுது, எதிரே ஒரு மாட்டு வண்டி பாரங்களுடன் வந்து கொண்டு இருந்தது. அம்மாட்டு வண்டி பேருந்தின் மீது மோதவே பேருந்தின் முன் பக்கத்திலுள்ள சக்கரம் உருண்டோடிப் பக்கத்திலுள்ள ஒரு பள்ளத்தில் விழுந்து விட்டதோடு பேருந்தும் ஒரு பக்கமாகச் சாய்ந்து விட்டது.

பிரயாணிகள் அலறிப் புடைத்துக் கொண்டு பேருந்தின் முன்பகுதி வழியாகக் கண்ணாடியை உடைத்துக் கொண்டு வெளியேற முயற்சி செய்கையில் பேருந்திலுள்ள 'ஏறும் வழி' வாயை நோக்கி இருந்தது. பிரயாணிகளின் கூக்குரலையும் மீறி ஒரு இனிய மழலைக் குரல் எழுந்தது. ''முருகா! எங்களைக் காப்பாத்து!'' என்று. எல்லோரும் குரல் வந்த திக்கினை நோக்கினல் அக்குரல் எனது அருமைத் தங்கை புஷ்பாவின் குரலே. பெரியவர்களே செய்வதறியாது திகைத்துக் கொண்டிருக்கையில் ஐந்து வயது நிரம்பாத சிறுமியாகிய அவள் பக்தியுடன் அவ்வாறு குரல் எழுப்பியது எல்லாருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவளது மழலைக் குரல் திருச்செந்தில் ஆண்டவனின் செவியை எட்டியதோ!, பிரயாணிகளின் தவப்பயனோ, எனது குடும்பத்தவரும் மற்ற பிரயாணிகளும் மாட்டு வண்டிக்காரரும் மாடுகளும் சிறிதும் காயமில்லாமல் அந்த விபத்திலிருந்து தப்பினோம். பின்னர் வேறொரு பேருந்தில் நலமுடனே வந்து சேர்ந்தோம்.

-ந. சந்திரா





புகைப்படம்: உத்ரா

JOY TOY மாமா

குழந்தைகளே! படத்தில் இருப்பவரை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்! அவர் தான் ஜாய்டாய் மாமா!

குழந்தைகளைக் கண்டால் அவருக்கு ரொம்பக் குஷி. குழந்தைகளும் சில நிமிஷங்கள் பழகி விட்டால் அவரிடம் ஒட்டிக் கொண்டு விடுவார்கள். சதா சிரிப்புத்தான். கதை சொல்வார், புதிர் போடுவார், வேடிக்கைக் கணக்குகளும் விளையாட்டும் சொல்லித் தருவார், தாமும் விளையாடுவார் – குழந்தையைப் போல.


இந்தக் குழந்தை உள்ளம்தான் குழந்தைகளுக்காகப் பலவிதமான பொம்மைகளைத் தயாரிக்கும்படி இவரைத் தூண்டியது. ஒரு பொம்மையின் பெயர் லோலா. இவள் மழலையாகப் பேசுவாள். சிரிப்பாள். அழகிய உடை அணிந்து சொக்க வைப்பாள்.

ஒரு யானைப் பொம்மை. அதன் தும்பிக் கையை ஒரு திருகு திருகினால் உள்ளே இருக்கும் டிரான்ஸிஸ்டர் ரேடியோ ஒலிக்கும்! வாலைத் திருகி நிலையங்களை மாற்றிக் கொள்ளலாம்!

ஸ்வீட்டி பொம்மையின் கையைக் காலை அசைத்து டான்ஸ் ஆடப் பண்ணலாம். இருட்டிலே எழுத வசதியாக ஒளி சிந்தும் பேனா; கோடை காலத்துக்கு ஏற்ப பாட்டரி ஃபான் எல்லாம் ஜாய்டாய் தயாரிப்புக்கள்தாம்.

குழந்தைகள் விளையாடும் போதே அறிவும் பெற வேண்டும் என்பது ஜாய்டாய் மாமா கே. வி சீனிவாசனின் ஆசை. உதாரணமாக லோலா பொம்மை ''டிவிங்கிள் டிவிங்கிள் விட்டில் ஸ்டார்'' என்று பாடியது என்றால் உங்களுக்கு என்ன தோன்றும்? 'அடேடே! நம்ப லோலா கூடப் பாடுகிறாள்; நாம் தெரிந்து கொள்ளாமல் இருக்கலாமா'' என்று மனப்பாடப் பகுதிகளை எல்லாம் உருப் போட்டு விடுவீர்கள் அல்லவா?

இப்படி குழந்தைகளுக்காகவே அல்லும் பகலும் சிந்திக்கும் ஜாய்டாய் மாமாவுக்கு இரு குழந்தைகள் பிறந்து பாவம், இரண்டும் இறந்து விட்டன. முதலில் ரொம்பரொம்ப வருத்தப்பட்டார் சீனிவாசன். பிறகு தேசத்திலுள்ள குழந்தைகளையெல்லாம் தமதாகப் பாவித்துக் கொள்ளத் தீர்மானித்தார். அவர்களுக்காப் பொம்மைகள் தயாரித்து அவர்கள் அன்பைப் பெற எண்ணினார். மேனாட்டில் உள்ள பொம்மைத் தயாரிப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு தொழில் நுணுக்கங்களை அறிந்து இங்கே மேனாட்டுத் தயாரிப்புக்களுக்கு இணையான சிறந்த பொம்மைகளை உருவாக்கி வருகிறார். ''உலகிலேயே இத்தாலியர்கள்தாம் சிறந்த பொம்மைத் தயாரிப்பாளர்கள்'' என்கிறார். இன்று ஜாய்டாய் தயாரிப்புக்கள் உலகின் பல நாடுகளுக்கும் ஏற்றுமதியாகிப்





பாரதத்துக்குச் செல்வம் சேர்க்கின்றன. பொம்மைகள் தவிர வேறு சில தொழில்களிலும் வாணிபத்திலும் ஈடுபட்டு வருகிறார் சீனிவாசன். ஆப்பிரிக்கா கண்டத்தில் நைஜீரியா நாட்டில் வர்த்தக நிமித்தம் தங்கியிருந்தார். அங்கு அவருக்குப் பல தலைவர்களையும் பிரமுகர்களையும் தெரியும். இன்றும் வர்த்தகத் தொடர்பு உண்டு. நைஜீரியா இவரைச் சென்னையில் தனது கௌரவப் பிரதிநிதியாக நியமித்தால் அதிசயிப்பதற்கில்லை.

ஜாய்டாய் மாமா வீட்டுக்குப் போனால் நிரந்தரமான கொலு போல் அங்கே பல தேசத்துப் பொம்மைகளும் அலங்காரமாக வைக்கப் பட்டிருப்பதைப் பார்க்கலாம். வீட்டிலே உறவினர் யார், பணியாட்கள் யார்; உறவினர் குழந்தைகள் யார், பணியாட்களின் குழந்தைகள் யார் என்று நமக்குப் புரியாது! எல்லாரும் ஒரே மாதிரி இருப்பார்கள், போவார்கள், பழகுவார்கள்! செல்வச் செழிப்பில் ஏற்றத் தாழ்வு இருக்கலாம், ஆனால் மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வு இல்லை என்று கண்ணுக்கு மெய்யாக நிரூபிக்கிறார் மானுடப்பண்பு மிக்க ஜாய்டாய் மாமா.

இந்தப் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் கல்கி அவர்களிடம் சீனிவாசனுக்கு ரொம்பப் பற்றுதல் உண்டு. தாம் இளைஞராக இருந்த போது கல்கி, "சீனிவாசா! அவசரமாக ஜி. என். பி. படம் ஒன்று தேவைப்படுகிறது" என்று ஒரு நாள் மாலை சொன்னதையும் அதற்காகத் தாம் இங்குமங்கும் அலைந்து இரவு பதினொரு மணிக்குக் கொண்டு வந்து சேர்த்ததையும் இன்றைக்கும் பெருமையோடு சொல்லிக் கொண்டிருக்கிறார்!

ஜாய்டாய் கண்காட்சி ஒன்று அண்மையில் நடத்தினார் சீனிவாசன். கவர்னரை அழைத்தார். பார்த்து மகிழ்ந்த ஆளுநர் திரும்பும் போது அவருக்கு ஒரு பொம்மை பரிசளித்தார் சீனிவாசன். "சரிதான், என் குடும்பத்தில் சண்டை உருவாக வேண்டும் என்பது உங்கள் ஆசையா? எனக்கு இருபேரக் குழந்தை இருக்கிறார்களாக்கும்" என்ற ஆளுநர் காசு கொடுத்து இன்னொரு பொம்மை வாங்கிக் கொண்டு போனார்!

"குழந்தைகள் ஆண்டு என்று அமர்க்களப் படுத்தும் அரசு, உருப்படியாக ஏதாவது செய்வதெனில் குழந்தைகளுக்கான பொம்மைகளுக்கு வரி விலக்கு அளிக்கலாம்" என்கிறார் ஜாய்டாய் மாமா. இதற்காக ஒரு போராட்டமே நடத்தி வருகிறார். குஜராத் மாநிலத்தில் ஏற்கனவே வெற்றி பெற்றும் விட்டார். எனவே குஜராத்தில் பொம்மைகள் மலிவாகக் கிடைக்கும்!

குழந்தைகளுக்காக ஒரு சங்கமும் நடத்துகிறார் ஜாய்டாய் மாமா. சங்கத்தில் சேரும் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்துக்கும் மனப் பக்குவத்துக்கும் பல திட்டங்கள் அமுல்படுத்துகிறார். ஜாய்டாய் பொம்மைகளைத் தவணை முறையில் வாங்கிக் கொள்ளும் அனுகூலமும் சங்க அங்கத்தினர்களுக்கு உண்டு.

இவ்வளவெல்லாம் செய்யும் ஜாய்டாய்மாமாவிடம், "இந்தப் பொம்மையை எப்படித் தயாரிக்கிறீர்கள்?" என்று யாராவது கேட்டுப் பார்க்கட்டும்! கண்கள் நட்சத்திரமாக மின்ன, "ஆ! அது தொழில் ரகசியம்!" என்று கூறி விடுவார்! தொழில் ரகசியத்தைக் காப்பாற்றப் பொம்மைகளின் பல்வேறு பகுதிகளை பல்வேறு ஊர்களில் அமைந்த தொழிலகங்களில் தயாரிக்கிறார்! எவ்வளவு சாமர்த்தியம் பார்த்தீர்களா?

கெட்டிக்காரரான ஜாய்டாய் மாமா கல்கி வாசிக்கும் குடும்பங்களிலுள்ள மணிமணியான குழந்தைகளுக்காக ஒரு போட்டி அறிவிக்கிறார்! அந்த அறிவிப்பு இந்த இதழின் 69ம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது. எங்கே, அந்தப் பக்கத்துக்குத் தாவுங்கள் பார்க்கலாம்!

'முடியாது. ஒவ்வொரு பக்கமாகத்தான் புரட்டுவோம்!' என்கிறீர்களா? அதுவும் சரிதான். ஒவ்வொரு பக்கத்திலும் தான் நீங்கள் ரசிக்கக் கூடிய விஷயங்கள் உள்ளனவே!

இந்த குடுகுடு கிழவி யார் தெரிகிறதா? தெரியவில்லையென்றால் புரட்டுங்கள் 17ம் பக்கம்!





தமிழகப் பள்ளி கல்வி இயக்குநர் டாக்டர் K. வெங்கட சுப்பிரமணிய அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி மீனாட்சிக்கும் நாகர்கோவில் திரு K. V. சிவராமகிருஷ்ணன் குமாரர் திரு. சித்தார்த்தனுக்கும் சென்னையில் 23-3-19[illegible] அன்று மயிலாப்பூர் ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் திருமணம் நடந்தபோது தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆர். வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள்.

செலவில்லாத சமையல்!

'இளையவன்'




செல்லம் தனது அப்பாவிற்குச்
செய்தாள் சாப்பாடு,
எல்லாம் முடிந்து இலையும் போட்டாள்
எத்தனை ஏற்பாடு!

'அப்பா, கொஞ்சம் 'பச்சடி' என்றாள்
அவரோ 'சரி' என்றார்;
'உப்பு போதுமா சொல்லேன்' என்றாள்
உடனே 'உம்' என்றார்.

பொரியல் பொங்கல் என்றாள்
போட்டுக் 'கொள்' என்றாள்!
அறியாக் குழந்தை அளித்ததை எல்லாம்
அப்பா சாப்பிட்டார்!

செல்லம் செய்த சமையலினாலே
செலவே வரவில்லை!
எல்லாப் பொருளும் சொப்புகள்தானே
எனவே செலவில்லை!





புகைவண்டி விளையாட்டு – அழகனர்

சிறுவர் ஒன்று கூடியே
 சேர்ந்து சேர்ந்து வரிசையாய்
ஒருவர் பின்னில் ஒருவராய்
 ஒன்று கூடி நிற்கலாம்!

உயர மான இருவரை
 ஓர மாகப் பாலமாய்
உயர மாகக் கைகளை
 ஒன்று சேர்த்து வைக்கலாம்.

ஒருவர் பின்னர் ஒருவராய்
 ஒன்று கூடி நின்றதும்
குறுகி நீண்டு கூவெனக்
 கூவிக் கொண்டு ஓடலாம்!

குப்குப் என்று முன்னிலே
 கூவிக் கொண்டு ஓடிடும்
கப்பன் பின்னால் யாவரும்
 சுற்றிச் சுற்றி ஓடலாம்.

ஓடி யோடி வேகமாய்
 ஒன்று போலப் பாலமாய்
கூடி நிற்கும் கையினுள்
 குனிந்து கொண்டு ஓடலாம்.

வேகம் வேகம் ஓடியே
 விருப்பம் போல ஆடலாம்
சேகர் கூட வரும்படி
 சேர்த்துக் கொண்டு ஓடலாம்.

குப்குப் என்று கூவியே
 கூடி ஒன்றாய் ஓடலாம்
சுப்புப் பாட்டி வருவதால்
 தூர விலகிச் செல்லலாம்!

சோம்பேறியின் பதில்! – அழ. வள்ளியப்பா

அண்ணன் :

குப்புசாமி, குப்புசாமி
கோடி வீட்டிலே
அப்புசாமி இருந்திடுவார்;
அழைத்து வந்திடு.

தம்பி :

அப்புசாமி வீட்டிலே
அவரைக் காணோம் என்றிடின்...?

அண்ணன் :

தெப்பக் குளத்தங் கரையிலே
தேடிப் பார்த்து அழைத்துவா.

தம்பி :

தெப்பக் குளத்தங் கரையிலே
தேடிப் பார்த்தும் இல்லையேல்...?

அண்ணன் :

சுப்ர மணியர் கோயிலைச்
சுற்றி வருவார்; அழைத்துவா.

தம்பி :

சுப்ர மணியர் கோயிலைச்
சுற்றிப் பார்த்தும் இல்லையேல்...?

அண்ணன் :

கப்பல் காரன் தெருவிலே
கடையில் இருப்பார்; அழைத்துவா.

தம்பி :


கப்பல் காரன் தெருவிலே
கடையில் பார்த்தும் இல்லையேல்...?

அண்ணன் :

சும்மா திரும்பி வந்திடு.
துரித மாகச் சென்றிடு.

தம்பி :

சும்மா திரும்பி வரவா நான்
இம்மாந் தூரம் செல்வது?
அம்மா டியோ! இங்குநான்
நிம்மதி யாய்த் தூங்குவேன்.



சிறப்பிதழாக மலர்ந்த சிரிப்பிதழ்!

● 1.4.79 சிரிப்பிதழ் எதிர் பார்த்தபடியே சிறப்புமிக்க இதழாக இருந்தது. துக்ளக்சோவின் பக்கங்களிலிருந்து மௌனச் சிரிப்பு வரை அனைத்தும் A1. On the whole the issue was superb'
திருச்சி—17 ஜே. ஜே. ஜான்

● சிரிப்புச் சிறப்பிதழ் கண்டேன். மிக அருமையான சிறப்பிதழ் — எந்தப் பகுதியை பாராட்டுவது என்பதே புரியவில்லை. அனைத்து நகைச்சுவைகளும் அருமை.
லோயர் அணைக்கட்டு எல். ர...

● மங்களகரமான மனோரமாவின் புன்னகை அனைவரையும் கவர்ந்து விட்டது. மேலும் வாசகர்கள் எழுதியனுப்பிய 48 துணுக்குகளும். A 1
ஈரோடு—10 மேஜர் தாஸன்

● 'கல்கி'யைக் கையிலெடுத்தது முதல் அதனைக் கீழே வைக்கும் வரை கோடை இடியெனச் சிரித்து மகிழ்ந்தேன்! முதல் பக்கம் முதல் கடைசி வரை பரவலாகச் சிரிப்பை அள்ளித் தெளித்திருக்கிறீர்கள் — சபாஷ். ஆனாலும் ஒரு சிறுகுறை. 'தலையங்கத்திலும் ஏதாவது 'சிரி' இருக்கும் என நினைத்துப் படிக்க ஆரம்பித்தேன். ஆனால் என் முகத்தில் 'கரி!'
திருவாரூர் பா. சந்திரசேகரன்

● சிரிப்பிதழ் விளம்பரம் பார்த்தோர்
சிரிப்பிதழ் படிப்போர்
ஒரு நகைச்சுவைத் துணுக்குக்கூட சிரிப்பை வரவழைக்கவில்லை.
திருவாடானை எம். நாகசுந்தரம்

● ''கோடைச் சிரிப்பிதழ்'' செம்மையாகவே அமைந்துள்ளது. ஆனால் சில ஜோக்குகள் ஏற்கெனவே பிற பத்திரிகைகளில் வந்தவையாக உள்ளன. சிறுசிறு மாற்றங்களுடன் தங்களுக்கு அனுப்பப்பட்டுச் சிரிப்பிதழில் இடம் பெற்றுள்ளன.
சென்னை—5 வெ. சீதாராமன்

● மிகச்சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டிருக்கும் நகைச்சுவை சிறப்பிதழ் கண்டேன். எல்லா அம்சங்களும் 'கவலைகளை' மறந்து சிரிக்கும் படியாக அமைந்திருக்கின்றன. 84ம் பக்கத்தில் 'இது கலர் படம்தானே...?' என்று ஆரம்பமாகும் துணுக்கு ஆனந்த விகடன் இதழில் நான் ஏற்கெனவே எழுதிப் பிரசுரமானது.
மதுரை—1 எஸ். ராமன்

● 'நரிக்கொம்பு' — கதையை எந்த விறுவிறுப்போடு ஆரம்பித்தாரோ, அதே விறுவிறுப்புடன் முடித்திருந்தார் ஆசிரியர். ஆனால் அநிதா கடைசியில் தனிமையாக நின்றது வருத்தமாக இருந்தது.
தஞ்சாவூர் கே. ஆர். ஜனார்த்தனன்

● கிருஷ்ணவேணியின் 'நரிக்கொம்பு' மினி மர்மத் தொடர்கதையில் எந்தவித புதுமையும் இல்லையே. வழக்கமான 'தீம்', வழக்கமான 'ஸஸ்பென்ஸ்', வழக்கமான 'த்ரில்'—கதையை விரைவில் முடித்தமைக்கு மிக்க நன்றி.
திருச்சி—8 எஸ். பி. முருகப்பன்

● 'நரிக்கொம்பு' — மர்மக் கதையில் பின்வருமாறு ஒரு வரி வருகிறது.
''ரமேஷை அவளுக்கு மனைவியாக்கி வைத்ததும் இப்படித்தான்.''
நகைச்சுவை சிறப்பிதழில் தாமும் ஒரு ஜோக் அடிக்க வேண்டும் என்று தீர்மானித்து விட்டாரா, கிருஷ்ணவேணி?
சென்னை—14 ஜி. ஜி. ராம்

● அமரர் கல்கிக்குப் பிறகு அதே பாணியில் உணர்ச்சி மயமாக, விறுவிறுப்புடன் சரித்திரத் தொடர்கதைகளைத் திரு. விக்ரமன் எழுதிச் செல்கிறார். அவர் கல்கியில் ஆரம்பித்திருக்கும் 'தியாக வல்லபன்' பிரமாதமாக அமைந்திருக்கிறது. அதிலே வருகிற ஆற்றையும் கீற்றையும் படிக்கும் பொழுது அமரர் கல்கியின் 'பொன்னியின் செல்வ'னின் ஆரம்பத்தை நினைவூட்டுகிறது.
வில்லிவாக்கம் ராஜி. பரந்தாமன்

● எத்தனையோ குறுநாவல்கள் படித்திருக்கிறேன். ஆனாலும் விரசம் கலக்காமல், ஒரு தந்தையின் பொறுப்புணர்ச்சியையும், தாயின் மனநிலையையும் யதார்த்தமான முறையில் அமைத்து' படித்து முடித்தவுடன் உண்மையிலேயே ஒரு புல்லரிப்பை ஏற்படுத்தும் விதமாக அமைந்திருந்தது ''காவல்'' குறுநாவல். ஆசிரியர் கௌசிகனுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.
சிதம்பரம் சி. பி. ஸ்ரீதர்.

● ''காவல்'' நெடுங்கதை என் இதயத்தில் அழியா இடத்தைப் பிடித்து விட்டது. கருத்து நயத்தோடும், கலை அழகுடனும் அருமையான கதையைத் தந்த கௌசிகனுக்கு என் மனமார்ந்த நன்றி!
செங்கோட்டை ஆர். எம். அரசு

● 'ஓவியர் உமாபதி, கபாடியா ஆகியோர் அளித்துள்ள நகைச் சுவைப் பக்கங்கள், கதை கட்டுரை முதலியவற்றை ரசியுங்கள். எடை போட வேண்டாம்' என்று கூறியதன் மூலம் அனுபவம் வாய்ந்த கலைஞர்களிடம் தாங்கள் கொண்டிருந்த மதிப்பை வெளியிட்டமைக்கு என் பாராட்டுக்கள்.
தஞ்சாவூர் சாந்திபூஷன்.

வட்டமேஜை

அத்தியாயம் 29

சத்யாவைப் போய்ப் பார்க்க வேண்டும். பேச வேண்டும் என்று துடித்த பிரமீளாவுக்கு அவள் பெற்றோர் தடை உத்தரவு பிறப்பித்திருந்தனர். ஃபோன் செய்யக் கூட அனுமதிக்கவில்லை.

''எனக்கு எவ்வளவோ சுதந்திரம் கொடுத்து வளர்த்தீங்க. ஆனா இப்ப நீங்க நடந்துக்கறதுதான் எனக்குப் புரியவேயில்லை'' என்றாள் பிரமீளா, ஏக்கமும் துயரமுமாக.

''உனக்குப் பூரண சுதந்திரம் கொடுத்து வளர்த்தோம் என்கிறதை ஒப்புக் கொள்கிறாயல்லவா? அதை அத்து மீறிப் பிரயோகிக்காதே'' என்றாள் தாயார் லலிதா. ''பெற்றோருக்கு அவமானத்தையும் கெட்ட பெயரையும் தேடித் தராதே!''

''டேக் இட் ஈஸி'' என்றார் தகப்பனார் யோகேஷ்.

''அப்பா! உங்களை மிகவும் முற்போக்கான சிந்தனைகள் உடையவர் என்று இதுநாள்வரை எண்ணியிருந்தேன். இப்போ என் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள வேண்டியதுதான்'' என்றாள் பிங்கி.

''என்னைப் பற்றி அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளும் உரிமையையும் உனக்கு அளிக்கிறேன். அந்த அளவுக்கு நான் நவீன சிந்தனைகள் உள்ளவன்தான்'' என்றார் யோகேஷ். ''ஒரு மாசம் இரண்டு மாசம் அவனைச் சந்தித்துப் பேசாமல் இருந்தால் எல்லாம் சரியாகப் போய் விடும். அப்பா உன் நன்மைக்குத்தான் நடந்து கொண்டார் என்பதும் புரிந்து போகும்.''

''இரண்டு மாசம் பொறுத்திருந்த பிறகும் என் காதலில் எந்த விதமான மாறுதலும் ஏற்படாவிட்டால்?''

''அப்போ யோசிக்கலாமே?''

''அப்படியானால் எனக்கு நம்பிக்கை இருக்கு.''

''எனக்கு நம்பிக்கை இல்லை'' என்றார் யோகேஷ். ''சத்யாவிடமும் நம்பிக்கை இல்லை. உங்கள் காதலிலும் நம்பிக்கை இல்லை. வைத்தியலிங்கத்திடமும் நம்பிக்கை இல்லை. எனக்குப் பெரிய ஏமாற்றம் ஏற்பட்டிருக்கு.''

''ஆனந்த்! அடிக்கடி வந்து போய்க்கிட்டு இருப்பா. பிங்கியை உற்சாகப் படுத்தி வை'' என்றாள் லலிதா.

''ஷ்யூர்'' என்றான் ஆனந்த்.

பிங்கிக்கு எரிச்சல் பற்றிக் கொண்டுவந்தது. எழுந்து தன் அறைக்குள் போய் அழுதாள். ஒரு வாரம் பத்து நாட்கள் என்று அவள் வீட்டை விட்டு எங்கும் போகாமல் இருந்தாள். அவளுடைய இயல்பான உற்சாக சுபாவத்துக்கு இது சிறையில் அடைத்து வைத்தது போலிருந்தது. ஆனந்த் தினம் ஒரு தடவை வருவான். இரண்டு நாட்கள் தலை வலி என்று சொல்லிக் கீழே இறங்கி வராமலேயே இருந்து விட்டாள் பிரமீளா. மூன்றாம் நாள் அம்மாவின் அதட்டலுக்காக மட்டுமின்றி ஒரு மரியாதைக்காகவும் வரவேற்பு அறைக்கு வந்து அவனுடன் பேசி அனுப்பினாள்.

பெற்றோருடைய தடை உத்தரவை மீறி அவர்கள் வீட்டில் இல்லாத போது ஒருநாள் அவள் சத்யாவுக்கு ஃபோன் செய்தாள். ஆஃபீஸில் ஒரு பெண் குரல் ஃபோனில் கேட்டது. ரிஸப்ஷனிஸ்ட் நித்யா என்று புரிந்து கொண்டாள். ''ப்ளீஸ் மே ஐ டாக் வித் சத்யா?''

''ஹி இஸ் பிஸி. மே ஐ நோ ஹூ இஸ் காலிங்?''

''பிரமீளான்னு சொல்லுங்க.''

சற்றுநேர மௌனத்துக்குப் பிறகு நித்யாவின் குரல்தான் மறுபடியும் ஒலித்தது. ''ஐ ஆம் ஸாரி. அவர் உங்களோடு பேச விரும்பலையாம்.''

பலமான அதிர்ச்சியைச் சமாளித்துக் கொண்டு, ''காரியமாக இருக்கிறாரா? கொஞ்ச நேரம் கழித்துக் கூப்பிடவா?'' என்று கேட்டாள்.



''இல்லே, அவர் அப்படிச் சொல்லவில்லே. 'நான் அவளேப் பார்க்கவோ அவளோடு பேசவோ விரும்பலே' என்றுதான் சொன்னுர்.''

பிரமீளா ஃபோனே வைத்து விட்டுக் கலங்கிய கண்களேத் துடைத்துக் கொண்டாள். நித்யா சொல்வதை அவள் முழுமையாக நம்பி விடவில்லே. 'இந்த நித்யா பொய் பேசியிருக்கலாம். அல்லது உண்மை என்றே வைத்துக் கொண்டாலும் சத்யா இங்கே தன் பெற்ருேரிடம் அவமானப் பட்டதால் கோபமடைந்து பேசியிருக்கலாம். நாளடைவில் கோபம் தணியலாம். தான் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்து விடக் கூடாது. அவரைப் பார்க்கக் கூடாது என்று என் பெற்ருேர் எனக்குத் தடை விதித்திருக்கும்போது என்னேப் பார்க்க வேண்டாம் என்று அவர் தனக்குத் தானே ஏன் தடை விதித்துக் கொள்ளக் கூடாது!' என்று சமாதானமடையப் பார்த்தாள்.

இருந்தாலும் அவளுக்கு ஏமாற்றமாகத்தான் இருந்தது. 'தடை உத்தரவை மீறி இப்போது நான் சத்யாவுடன் பேச முயலவில்லேயா? அது போல் அவரும் ஏன் என்னிடம் எந்த விதத்திலாவது தொடர்பு கொள்ள முயலக் கூடாது? அப்பா அம்மாவுடைய வாதத்தை நான் ஏற்கவில்லே என்பதைச் சத்யா முன்னிலேயிலேயே நான் வெளிக் காண்பித்துக் கொண்டிருக்கிறேனே! அவ்விதம் இருக்க என்மீது அவர் ஏன் கோபித்துக் கொண்டு பேசாமலிருக்க வேண்டும்? என் பெற்ருேர் செய்தகாரியத்துக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?' என்றெல்லாம் சிந்தித்து வருத்தமும் கோபமும் ஏக்கமும் அடைந்தாள்.


''பிங்கி! எத்தனே நாளேக்கு இப்படித் துக்கம் கொண்டாடப் போறே? ஒய் நாட் கம் அவுட் வித் மீ?'' என்ருன் ஆனந்த் ஒருநாள். ''மகாபலிபுரத்துக்கு ஒரு பிக்னிக் போய் வரலாமே?''

''போயிட்டு வாயேண்டி'' என்ருள் லலிதா.

பிரமீளாவுக்குச் சிரிப்பு வந்தது. அதன் காரணத்தை ஆனந்த் எதிரே வெளியிட முடியாது என்பதால் மனசுக்குள் நகைத்துக் கொண்டாள். 'சத்யாவைப் பார்க்கவே கூடாது என்று தடை உத்தரவு போட்ட அதே அம்மா ஆனந்துடன் பிக்னிக் போய் வருமாறு மகளே அனுப்புகிருள்! அவளுக்கு உயர் குடியில் பிறந்தவர்கள் எல்லாரும் உத்தமர்கள், பிறவியால் தாழ்ந்தவர்கள் நெருங்கத் தகாதவர்கள். முட்டாள்தனமான இந்தப் போலி கௌரவம் தன் மகளே எங்கே கொண்டு போய் நிறுத்தும் என்பதே அவளுக்குத் தெரியவில்லே. நல்லவேளே மகள் அம்மாவைப் போல் அசடாக இராமல் தன்னேத் தானே காத்துக் கொள்ளும் துணிவு உள்ளவளாக விளங்குகிருள்' என்று பிங்கி தன்னேத் தானே பாராட்டிக் கொண்டாள்.

கி.ராஜேந்திரன்





கிண்டல் கிட்டா!

''அதற்கென்னம்மா போய் விட்டு வந்தால் போகிறது''' என்றாள்.

ஆனந்த் ஒரே உற்சாகத்துடன் நாளும் நேரமும் குறித்தான்.

''ஓகே'' என்றாள் பிங்கி. அவள் உள்ளத்தில் ஒரு வைராக்கியம் உருப்பெற்றது.

'ஆனந்திடம் நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டும்' என்று சத்தியா தன்னிடம் கூறியதை எண்ணிப் பார்த்தாள் அவள். நித்யாவை சத்யாவுக்கு ரிஸப்ஷனிஸ்ட் ஆக்கினர் சிரிக்கும் அளவுக்கு அந்த விவகாரம் வளர்ந்து விட்டது இதே ஆனந்த் காரணமாகத்தான். 'நித்யா – சத்யா பற்றிய வதந்திகளில் உண்மையும் இருக்குமா, எல்லாமே வீண் அபவாதங்கள்தானா?'

இதைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் பிரமீளாவிடம் தலையாட்டியது. ஆனந்த் – தன் காதலனின் நம்பிக்கைக்குரிய நண்பனாகத் திகழும் ஆனந்த் – எப்படிப்பட்டவன் என்பதைப் புரிந்து கொள்ளும் எண்ணமும் எழுந்தது. துக்கம் கொண்டாடியபடி வீட்டிலேயே அடைந்து கிடந்த அவளுக்கு ஒரு மாறுதலும் தேவைப்பட்டது. தைரியமாக அவள் புறப்பட்டு விட்டாள்.

அத்தியாயம் 30

அலைகள் பொங்கி எழுந்து அவள் தலையையும் தோள்களையும் தாக்கி வடிந்தன. உடம்பை யாரோ இதமாகப் பிடித்து விடுவது போலிருந்தது. கவலைகள் கரைவது போல் தோன்றியது. அவளுடைய இயல்பான உற்சாகம் மேலோங்கியது. உடலும் மனமும் இலேசாகக் கடல்நீரில் அவள் நீண்ட நேரம் திளைத்தாள். கண்களை மூடி உடலைப் படகு போல் அலைகள் மீதாக மிதக்க விட்டாள். 'சத்யா தன்னை வெறுத்து ஒதுக்குவதானால் தான் மட்டும் அவனுக்காக எதற்காக ஏங்கித் தவிக்க வேண்டும்?' என்ற எண்ணம் கூட எட்டிப் பார்த்தது. 'ஏன் எதையோ பறிகொடுத்து விட்டது போலத் தன் வாழ்க்கையையே துயர மயமாக்கிப் பாழடித்துக் கொள்ள வேண்டும்? இப்படி சந்தோஷமாக இருப்பதில் என்ன தவறு?'

கரையில் பெரிய டர்க்கி டவலுடன் நின்று கொண்டிருந்தான் ஆனந்த். ''போதும் பிரமீளா! நீ நீரில் இறங்கி அரை மணி நேரத்துக்கு மேலாகிறது! உடம்புக்கு ஏதாவது வந்து விட்டால் அப்புறம் உன் அம்மா உன்னை என்னுடன் எங்குமே அனுப்ப மாட்டாள்.''

அவள் சிரித்தபடியே மெல்லக் கரையேறி வந்தாள். 'மன்மத லோகத் தடாகத்தில் குளித்தெழும் ரதி; கடலிலிருந்து மேலெழும் காதல் கடவுள் வீனஸ்; எல்லாரும் இவளிடம் கைகட்டி நிற்க வேண்டும்' என்று எண்ணினான் ஆனந்த். விளாச்சலைப் புள்ளி போடுவது போல நீச்சலுடை, அவள் மேனிச் செழுமையை, வளர்ச்சியைக் கணிக்குமாறு அவனைத் தூண்டியது. கேசம் நனையாதிருக்கத் தலையில் அணிந்திருந்த ரப்பர் குல்லாயை நீக்கியதும் அருவி கொட்டுவதுபோல் சரிந்தது கேசம்.

பின்புறமாக வந்து டர்க்கி டவலை அவள் முதுகுப் புறமாகப் போர்த்தி விட்டபோது அவள் கடல் நீரின் மணத்துடன் அவளுடைய இயற்கையான மணத்தையும் நுகர்ந்தான். அவன் கரங்கள் அவள் தோள்களில் பதிந்து இலேசாக அழுத்தின. விநாடிப் போதுக்கு மேல் தாமதியாமல் அவன் பிடியிலிருந்து தன்னை அவள் விடுவித்துக் கொண்டு விட்டாள். ஆனால் அந்த ஒரு விநாடியில் அவள்

இது குழந்தைகள் சிறப்பிதழ் என்பதால் வழக்கமான அம்சங்கள் சில, இவ்விதழில் இடம் பெறவில்லை. அவை அடுத்த வாரம் பிரசுரமாகும்.



மேலட்டை:

அன்புத் தெய்வம்!

இன்பக் கதைகளெல்லாம் உன்னைப்போல்
ஏடுகள் சொல்வதுண்டோ?
அன்பு தருவதிலே - உனை நேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ?

— மகாகவி பாரதியார்

வண்ணப்படமெடுத்தவர்: சரஸ்வதி சத்தியமூர்த்தி
தாய்: சுதா: குழந்தை: மது

தெரிவிக்க நினைத்த செய்தி அவனுக்குப் புரியாமல் போகவில்லை.

உடை மாற்றிக் கொள்ள அமைக்கப் பட்டிருந்த சிறு குடில்களுள் ஒன்றில் நுழைந்து சற்று நேரம் பொறுத்து அவள் வெளியே வந்தபோது வன தேவதையாகவே விளங்கினாள். பெரிய பெரிய வண்ண மலர்களைத் தாங்கிய மாக்ஸி உடை அவள் தோள்களிலிருந்து சரிந்து அவள் மேனியைத் தழுவியது. கடல் காற்றில் அவள் கேசம் அலைகளோடு போட்டியிட்டு நெளிந்து பறந்தது.

''உங்களுக்கு எப்படியோ, எனக்கு ஒரேயடியாகப் பசிக்கிறது'' என்றாள்.

கடற்கரையை யொட்டியிருந்த அந்த உயர்தர ஹோட்டலின் தோட்டத்தில் அமர்ந்து டிபன் சாப்பிட்டார்கள்.

''என்னுடன் இப்படித் தனியே வந்திருக்கிறாயே உனக்குப் பயமாயில்லை?'' என்று அவன் தமாஷாகக் கேட்டது போல் கேட்டான். அவளுடைய பதிலுக்கு ஏற்பத் தனது அடுத்த நடவடிக்கையை நிர்ணயித்துக் கொள்ள எண்ணினான்.

ஆனால் அவளுக்கோ அந்தக் கேள்வி சத்யாவை நினைவுக்குக் கொண்டு வந்து சிரிக்க வைத்து விட்டது. முன்பு ஒரு நாள் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றின் நீச்சல் குளம் அருகே சத்யா கேட்ட அதே கேள்வி!

''எதற்குச் சிரிக்கிறாய்?'' என்று அவன் வியந்து வினவினான்.

'ஆண்கள் எல்லோரும் ஒரே மாதிரித்தான் இந்த விஷயத்தில் மமதை கொண்டிருப்பார்களோ' என்று அவளுக்குத் தோன்றியது. அவள் திருப்பிக் கேட்டாள்: ''நீங்கள் என்னுடன் இப்படித் தனியே வந்திருக்கிறீர்களே, உங்களுக்குப் பயமாயில்லை?''

''நான் எதற்குப் பயப்பட வேண்டும்?''

''சொல்கிறேன். ஒரு ஆண் ஒரு பெண்ணைக்கெடுத்து விடுவது என்பது அவ்வளவு சுலபமல்ல. மாறாக, ஒரு பெண் மனம் வைத்து விட்டால் ஓர் ஆணை மிகச் சுலபமாகக் கெடுத்து விடலாம். ஆனால் எதனாலோ தெரியவில்லை, பெண் வர்க்கம்தான் தங்களைக் கண்டு பயப்பட வேண்டும் என்று ஆண்கள் ஆணவத்துடன் எதிர் பார்க்கின்றனர். இந்த உயர்வு மனப்பான்மை ஆண் வர்க்கத்திடமிருந்து என்றுதான் ஒழியப் போகிறதோ!''

அவளுடைய இந்தப் பேச்சை அவன் தப் பர்த்தம் செய்து கொண்டதைப் பளபளத்த அவன் கண்கள் தெரிவித்தன. தன் மேனியெங்கும் அவன் பார்வை படர்ந்து அழகைக் குடித்துப் போதை ஏறிக் கிறங்குவதை அவள் உணர்ந்தாள்.

''இந்த ஓட்டலில் ஒரு அறை போட்டு வைத்திருக்கிறேன். களைப்பாக இருந்தால் நீ சற்றுநேரம் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளலாம். பிறகு சாவகாசமாகப் புறப்படலாம்'' என்று அவன் கூறிய போது அவன் குரலில் தடுமாற்றம் தெரிந்தது. கண்களில் காமமும் புன்னகையில் விரசமும் புலனாயின. அவை அவளுக்கு எச்சரிக்கையாகவும் அமைந்தன.


''ஓகே'' என்று பிரமீளா கள்ளமற்றுச் சிரிப்பது போல் நடித்தாள். 'இது ஆபத்தான விளையாட்டு' என்று அவளுக்குத் தெரிந்திருந்தது என்றாலும் அவளுக்கு இயற்கையாகவே அமைந்திருந்த தன் னம்பிக்கையுடனும் துணிச்சலுடனும் அதில் இறங்கினாள்.

'பிங்கி! ஆணிடம் நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டும்' என்று முன்பு சத்யா கூறியது ஏதோ கனவில் ஒலிக்கும் குரல்போல் அவள் இதயத்தில் கேட்டது.

'ஆகட்டும் ஜாக்கிரதையாகவே இருக்கிறேன்' என்று தன் உள்ளத்துக்கே அவள் பதில் கூறினாள். 'ஏமாறப் போவது நானா இவனா பார்த்து விடுவோம்' என்று கறுவிக் கொண்டாள்.

(தொடரும்)

இந்தப் பாடீதான் அந்தக்கிழவி இப்போதாவது தெரிந்திருக்க வேண்டுமே? தெரியவில்லை என்றால் இருக்கவே இருக்கிறது 24 ம் பக்கம்!



செய்து பாருங்கள்!



(தேவையான பொருள்கள்: தோலுடன் கூடிய நிலக்கடலைகள், கம்பி, டிஷ்யூக் காகிதம், பசை, வாட்டர் கலர்)

கடலையில் கைவேலை

உங்கள் வீட்டில் நிலக்கடலை (தோலுடன் கூடியது) இருக்கிறதா? இல்லாவிட்டால் பரவாயில்லை. மார்க்கெட்டுக்குப் போய் நல்ல விளைந்த நிலக்கடலை (வறுக்காதது) கொஞ்சம் வாங்கிக் கொள்ளுங்கள். அதை உடைத்து உள்ளிருக்கும் பருப்பைச் சுவைக்கக் கையும் வாயும் பரபரக்கும். கொஞ்சம் மனத்தை அடக்கிக் கொள்ளுங்கள். கடலைக் கொட்டையில் உங்கள் கற்பனைக்கும் கைத்திறனுக்கும் வேலை இருக்கிறது.

நிலக்கடலையில் சில கடலைகளுக்கு வளைந்த மூக்கு (கிளி மூக்கு போல) இருக்கும். இப்படிப் பட்ட — நன்கு விளைந்த கடலைகளாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். விரிசலில்லாது இருக்கட்டும். ஆரோக்கியமானதாகவுமிருக்கட்டும். இனி ஒரு குண்டூசியைக் கொண்டு கடலையின் இருபக்கத்திலும் குத்திச் சிறு துவாரம் செய்து கொள்ளுங்கள். இப்படித் துவாரம் செய்யும் போது தோலி உடைந்து விழுகக் கூடாது. அப்படிப் பழுதானால் அதைப் போட்டு விட்டு வேறு கடலையில் முயற்சி செய்யுங்கள். (படம் 1)


பறவையின் காலுக்கு (சற்றே உறுதியான) மெல்லிய கம்பியில் வர்ணம் தீட்டிக் கொள்ளுங்கள். வர்ணம் காய்ந்ததும் கடலையில் செய்துள்ள துவாரத்தினுள் நுழையுங்கள் (படம் 2) நீங்கள் செய்யப் போகும் பறவைகளுக்குப் பாதங்கள் தேவையானால் இன்னும் கொஞ்சம் கம்பிகளுக்கு வர்ணம் பூசிக் காய விடுங்கள்.


இனி பறவைக்கு வர்ணம் தீட்டி அழகு படுத்த வேண்டும். வெளிர் வர்ணத்தை உடலுக்குப் பூசுங்கள். அதாவது நிலக்கடலைக்குக் கண் பகுதி யில் வெள்ளை வர்ணம் பூசி அதன் விழியாக நடுவே கறுப்பு வர்ணத்தினால் பொட்டு வையுங்கள். பறவை யின் அலகுக்கு மஞ்சளோ ஆரஞ்சோ தடவுங்கள். எந்த வண்ணத்தையும் தரலாம். (படம் 3)

டிஷ்யூக் காகிதத்தை இறகு போலக் கூரான முனைகளுடன் வெட்டிக் கொள்ளுங்கள். கொண்டைக்கும் கூட இப்படியே கத்தரித்துக் கொள்ளுங்கள். இதை விசிறி போல ஒன்றோடொன்று இணைத்து ஒட்டிக் கொள்ளுங்கள். பறவையின் வாலாக அதன் உடலில் இப்படி விசிறிபோல ஒட்டிக்கொண்ட காகிதத்தைப் பசையினால் இணைத்துவிடுங்கள். இறகு சுருண்டிருக்க வேண்டுமென்று விரும்பினால் உருளைப் பென்சிலால் இறகுகளாக வெட்டப் பட்ட டிஷ்யூ பேப்பரை இலேசாக அழுத்திக் கொண்டு உருவுவது போல இழுங்கள். காகிதம் சுருண்டு கொள்ளும். (படம் 4)

பறவைக்குப் பாதம் அமைக்க வர்ணம் தடவி வைத்துள்ள அதிகப் படியான கம்பியை இரண்டாக வெட்டிக் கொள்ளுங்கள். அதில் ஒரு கம்பியை, கடலைக்குள் நுழைத்துள்ள கம்பியின் ஒரு முனையில் இணைத்து ஆங்கில எழுத்து 'T' தலைகீழாக இருந்தால் எப்படி இருக்குமோ அப்படி முறுக்குங்கள். (படம் 5) மற்றொரு துண்டுக் கம்பியை 'V' போல மடித்துப் பறவையின் முழங்கால் பகுதியில் கொடுத்துக் காலோடு முறுக்குங்கள். (படம் 6) இவை பறவையின் விரல்களாக உருப்பெறும்.


இனி, இப்படி மடித்த கம்பியைக் கீழே இறக்கி நடு விரலோடு சேர்த்து முறுக்குங்கள்.





மேலே
இருக்கும்
நால்வரில் ரூபாய் நோட்டை
அடையும் அதிர்ஷ்டசாலி யார்
என்று கண்டுபிடியுங்கள்!

ஒன்றிலிருந்து
இரண்டுக்கும் மூன்
றுக்குமாகத்
தொடர்ந்து இங்
குள்ள எண்களை
நேர் கோடுகளால்
இணைத்து கொண்டு
போனால் எமர்
ஜென்ஸியைப் பற்
றிய ஒரு விஷயம்
உருவாகும்.




(படம் 7) விரல்களை அகட்டி விரித்து ஒரே அளவான நீளத்துக்கு வெட்டிச் சீராக்குங்கள். இதே போல மற்றொரு காலையும் உருவாக்கிக் கொள்ளுங்கள்.


இன்னும் கொஞ்சம் கம்பியைக் கொண்டு இனி உட்கார ஊஞ்சல் போல வளைத்து முறுக்கிக் கொள்ளுங்கள். (மேலே முகப்பில் காட்டியுள்ள படத்திலுள்ளது போல) இனி பறவைக்கு வாலும் கொண்டையும் ஒட்ட வைத்து ஊஞ்சலில் உட்கார வைத்து விரல்களை வளைத்து முடுக்கினாலும் சரி — விரல்களைப் பரப்பி வைத்து நிற்கச் செய்தாலும் சரி. உருவாக்கிய பறவை கிளியா—சேவலா? உங்கள் கற்பனையும் கைவண்ணமுமே அதை முடிவு கட்டும்.

— அவிட்டம்

படம் 5




படம் 6



படம் 4



படம் 7




உழவுப்
பெருமக்களுக்கு
ஸ்பிக்
அளிக்கும்
புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்
புத்தாண்டு பிறக்கிறது. பருவமெல்லாம் வளமையும்
செழுமையும் பொங்க நல்வரவு நவில்கிறது ஸ்பிக் ஸ்தாபனம்.
விவசாயத் துறையில் நீங்கள் வளமை காண எங்களாலான
உதவியை ஆண்டு முழுவதும் அளிக்க உறுதி கூறுகிறோம்.
வாழ்க உழவுப் பெருமக்கள். வளர்க அவர்களது செழுமை.
SPIC
சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ்
கார்ப்பொரேஷன் லிமிடெட்.
ஸ்பிக் சென்டர், 97, அண்ணா சாலை, சென்னை 600 032

எங்கே போகிறோம்?



மாநகராட்சிப் பள்ளிகள்

[கேள்விகளுக்குப் பதில் அளிப்பவர் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளின் பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் மிஸ் லீலாவதி.]

கேள்வி: மாநகராட்சிப் பள்ளிகளில் கல்வியின் தரம் மிகவும் மோசமாக உள்ளதே. இதற்கான முக்கிய காரணங்களாக எவற்றைக் கருதுகிறீர்கள்?

லீலாவதி: ஒரு வரியில் பதிலளிக்கக் கூடிய கேள்வி அல்ல இது. ஒரு புத்தகமே எழுத முடியும். சென்னை மாநகராட்சி அதிகாரத்தில் சுமார் 300 ஆரம்ப, மத்திய நிலைப் பள்ளிகளும், 34 உயர்நிலைப் பள்ளிகளும் இயங்குகின்றன. குறைந்தபட்சம் இப் பள்ளிகளில் சுமார் ஒரு லட்சம் மாணவ மாணவியர் ஒவ்வொரு ஆண்டும் பயில்கிறார்கள். இவர்களுக்குக் கல்வி கற்பதற்கான சரியான சூழ்நிலையை அமைத்து, கல்விக் கூடத்தின் அடிப்படைத் தேவைகளை வழங்கினால்தானே அவர்களால் படிப்பில் கவனம் செலுத்தமுடியும்!

கேள்வி: சூழ்நிலை, அடிப்படைத் தேவைகள் என்று எவற்றைக் கருதுகிறீர்கள்?

லீலாவதி: முதலில் ஆரம்ப, மத்திய நிலை பள்ளிகளின் நிலைபற்றி விளக்குகிறேன். ஒரு பெரிய ஹாலில் எவ்வித தடுப்புக்களும் இன்றி வெவ்வேறு வகுப்புகள் நடத்த வேண்டிய நிலை பெரும்பாலான பள்ளிகளில் உள்ளன. ஹாலில் நுழைந்து பார்த்தால் ஒரே சப்தமாக இருக்குமே தவிர வகுப்புக்கள் நடப்பது போலவே இருக்காது. சரியான கரும்பலகைகள் பெரும்பாலான பள்ளிகளில் கிடையவே கிடையாது. சாக்குகள் சரியாக விநியோகிக்கப்படுவதில்லை. மரத்தடியில் புழுதி பறக்கும் மண்தரையில் மாணவர்களை உட்கார்த்தி வகுப்புகள் நடத்த வேண்டிய நிலையும் உள்ளது. ஒரு சில உயர்நிலைப் பள்ளிகளைத் தவிர மீதி எல்லா மாநகராட்சிப் பள்ளிகளிலும் சிறுநீர் மல கழிவிடங்களே கிடையாது குடி தண்ணீர் வசதியும் கிடையாது.

கேள்வி: இதற்கெல்லாம் மாநகராட்சியில் எந்த அதிகாரி பொறுப்பேற்க வேண்டும்?

லீலாவதி: மாநகராட்சியில் இப்பள்ளிகளை நிர்வகிப்பதற்காகக் கல்வி அதிகாரி உள்ளார். அவரிடம்தான் இப்பொறுப்புகள் உள்ளன. நாங்கள் அவரிடம் எவ்வளவோ முறையிட்டும் எவ்விதப் பயனும் இல்லை.

சமுதாயத்தில் பொருளாதார வசதியில் அடித்தள வர்க்கத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர்தாம் பெரும்பாலும் எங்களது பள்ளிகளில் படிக்கின்றனர். மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கும் எல்லா மாணவ மாணவியருக்கும் ஜாதி அடிப்படைவித்தியாசத்தில் அல்லாமல், பொருளாதார வசதி அடிப்படையில் சிலேட், பலப்பம், புத்தகங்கள், நோட்டுக்கள் ஆகியவை ஒவ்வொரு ஆண்டும் வழங்க வேண்டும்.

கேள்வி: மாநகராட்சியும் தன்னால் இயன்றதைச் செய்கிறது என்று நினைக்கிறேன். உதாரணமாக இப்பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியருக்கு மதிய உணவு வழங்குகிறார்களே, அதற்கு ஏராளமாகச் செலவாகுமே!

லீலாவதி: அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறீர்கள்? அது ஒரு சோகக் கதை. ஆரம்ப, மத்திய நிலைப் பள்ளிகளில் மதிய உணவு வழங்கப்படும்போது நீங்கள் நேரில் வந்து பார்க்க வேண்டும். பொருளாதாரத்தில் அடித்தள வர்க்கத்தினரான பெரும்பாலான மாணவ மாணவியர் இந்த மதிய உணவுக்காகவே பள்ளிக்கு வருகிறார்கள். ஆனால் பாவம், அவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் இருக்கிறதே, நினைத்தாலே மனம் வேதனைப்படுகிறது. அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோதுமையை (பல்கர்) வேகவைத்து மதிய உணவாகத் தருகிறார்கள். இவ்வுணவு ஒருவித நாற்றத்துடன் பார்ப்பதற்கே அருவருப்பாக இருக்கும். உணவைக் கொண்டு வரும் வண்டிகள் சவக்கிடங்கு வண்டிகள்போல் இருக்கும். பாத்திரங்களின் தோற்றம் அதைவிட அருவருப்பைத் தரும்படி இருக்கும். கோதுமை உணவைப் பெற்றுக் கொண்டால்தான் வெள்ளிக் கிழமைகளில் தயிர் சாதம் என்ற நிபந்தனை சில பள்ளிகளில் உண்டு!

கேள்வி: கோதுமைக்குப் பதில் அரிசிச் சாதம் வழங்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

லீலாவதி: இது மாநகராட்சி நிர்வாகத்திடம் கேட்க வேண்டிய கேள்வி. முன்பெல்லாம் அரிசிச் சாதம்தான் அளித்து வந்தார்கள். தற்போது இந்த நிலை.

கேள்வி: இம்மாதிரியான அடிப்படைத் தேவைகளை மாநகராட்சி பூர்த்தி செய்து விட்டால், மாணவ, மாணவியரின் கல்வித் தரத்தைக் கணிசமான நிலைக்கு உயர்த்திக் காட்ட முடியும் என்று உங்களால் உறுதியாகக் கூற முடியுமா?

லீலாவதி: இவ்விஷயத்தில் மேலும் சில சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும். ஆரம்ப, மத்திய நிலைப் பள்ளிகளில் கல்வியின் தரத்தைச் சீராக்கினால் உயர்நிலைப் பள்ளி நிலைக்கு மாணவ மாணவியர் வரும்போது தரம் வந்துவிடும்.

இப்பள்ளிகளைக் காலை வேளைகளில் பெருக்கிச் சுத்தம் செய்யச் சரியாக ஆள் கிடையாது. இவ்வேலைகளை மாணவ மாணவியரே செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதனால் வேறு நேரம் வீணாகிறது.

ஆசிரிய, ஆசிரியைகள் லீவு சம்பளம், பிராவிடண்ட் பண்ட் கடன் பெறுதல் போன்று தங்களது பல தேவைகளைப் பெற பல தடவைகள் மாநகராட்சிக்குப் போய் நேரில் பார்த்தால்தான் வேலைகள் நடக்கும் என்கிற சூழ்நிலை நிலவுகிறது. இத்தகைய நேரங்களில் கல்வி தடைப் படுகிறது!

கேள்வி: மாநகராட்சி மீதே எல்லாவிதக் குறைகளையும் சுமத்துகிறீர்கள். மாநகராட்சிப் பள்ளிகளின் ஆசிரிய ஆசிரியைகள் மாணவ மாணவியருக்கு அக்கறையுடன் போதிப்பதில்லை என்றும், சிலர் பள்ளி நேரத்திலேயே மாணவ, மாணவியரை விளையாட அனுப்பி விட்டுத் தூங்குவதாகவும், சொந்த வேலைகளைக் கவனிப்பதாகவும் கூறப்படுகிறதே!

லீலாவதி: இது உண்மைக்குப் புறம்பான விஷயம். மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்க வரும் மாணவரில் பெரும்பகுதியினர், அவரவர் குடும்பத்தில் படிக்கும் முதல் சந்ததியினராக இருப்பதால் கல்விப் பின்னணி இல்லாத நிலையில் உள்ளார்கள். இவர்களுக்குப் போதிப்பது மிகவும் கடினமான காரியம். ஒவ்வொரு ஆசிரிய ஆசிரியையும் தியாகமனப்பான்மையுடனும், சமுதாய நோக்குடனும் இப்பள்ளிகளில் உழைக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்!

கேள்வி: உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியரிடம் ஓரளவு மன முதிர்ச்சி இருக்குமே. அவர்களுக்கு நன்றாகக் கற்பித்து, கல்வித் தரத்தை உயர்த்தலாமே!

லீலாவதி: உயர்மட்டப் பள்ளியில் அனுமதிக்கப் படும்போது தனியார் பள்ளிகளைப் போன்று மாணவரின் தரத்தைப் பரீட்சிக்காமல் அனுமதித்துக் கொள்ளும் கட்டாயத்தில் இருக்கிறோம். ஒன்பதாவதுக்கு வரும் சில மாணவ மாணவியருக்கு ஆங்கில எழுத்துக்களே சரியாகத் தெரியாத நிலை: அவர்களுக்கு நாங்கள் எப்படிச் சொல்லிக் கொடுப்பது?

உயர்மட்டப் பள்ளிகளில் ஸ்பெஷல் ஃபீஸ் என்று ரூ 15 - ஒவ்வொரு மாணவ மாணவியரிடமிருந்தும் வசூலிக்கப்படுகிறது. விளையாட்டு, சினிமா, நூலகம், உல்லாசப் பயணம், பரிசோதனைச் சாலை மருத்துவப் பரிசோதனை, மற்ற வசதிகள், இலக்கியம், ஆசிரியர் பெற்றோர் சங்கம் ஆகிய ஒன்பது காரணங்களுக்காக இப்பணம் வசூலிக்கப்படுகிறது. இப்பணம் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர், தலைமையாசிரியை பொறுப்பில் விடப்பட்டுள்ளது. ஆனால் பெரும்பாலான பள்ளிகளில் விளையாட்டுச் சாதனங்கள் கிடையாது, சினிமா காட்டப் படுவதில்லை, பரிசோதனைச் சாலையில் இருக்கும் காந்தம் இரும்பைப் பிடிக்காது. மருத்துவப் பரிசோதனை என்ற நாமதேயமே கிடையாது. இப்பணத்தில் பெரும்பகுதி எவ்வாறு செலவாகிறது என்பது ஒரு புதிர்.

கல்வித்தரம் உயர நாங்கள் பற்பல யோசனைகளைக் கல்வி அதிகாரியிடமும், மாநகராட்சி ஆணையாளரிடமும் கூறியுள்ளோம். பலன்தான் இல்லை. இந்நிலை நீடிக்குமானால் மாநகராட்சிப் பள்ளி மாணவ மாணவியருக்கு விமோசனமே கிடையாது!

பேட்டி : **ஜாயகன்**


புகைப்படம் : **மன்னை மூர்த்தி**

எதிர்காலச் செல்வங்கள்



என் மகன் பார்த்திபனுக்கு ஒன்றேகால் வயது ஆகிறது. அவன் வயதுக்கு மீறிய அறிவும் ஆசையும் எங்களை வியப்புக்குள்ளாக்குகின்றன. ஒரு நாள் எங்கள் வீட்டு மொட்டை மாடியில் அவனுடன் அமர்ந்து அடுத்த வீட்டிலிருக்கும் 'டிவி'யைப் பார்த்துக் கொண்டிருந்தோம். பார்த்திபன் அவன் தாயின் மடியில் அமர்ந்தபடி 'டிவி'யை ரசித்துக் கொண்டிருந்தான். ஏதோ காரியமாக என் மனைவி கீழே போக வேண்டியிருந்தது. குழந்தையைக் கீழே இறக்கி விட்டு என் மனைவி அவசரமாகப் போனதால் பார்த்திபனால் இப்போது டி.வியைப் பார்க்க முடியவில்லை. கைப்பிடிச் சுவர் மறைத்தது. வேகமாகப் போனான். அருகிலிருந்த குட்டி நாற்காலி ஒன்றைத் தரதரவென்று இழுத்து வந்து கைப்பிடிச் சுவர் அருகே போட்டான். அதில் ஏறி நின்று கொண்டு 'டிவி'யை ரசிக்க ஆரம்பித்துவிட்டான். அவன் சமயோசித அறிவு கண்டு நாங்கள் வியப்படைந்ததுடன் இனி ஜாக்கிரதையாகவும் இருக்கத் தீர்மானித்தோம்.

-சேதுபதி



சேகர்

இரு நம்பிக்கைத் துளிர்கள்

ரமேஷையும் சேர்த்து அவர்கள் குடும்பத்தில் பத்துப் பேர்கள். தந்தைக்குச் சொற்ப சம்பளத்தில் ஜவுளிக் கடையில் வேலை. ஒரு சகோதரன் 'பர்பி' விற்று நாளைக்கு நாலு ரூபாய் சம்பாதிக்கிறான்.

குடும்பத்தில் மூத்த பிள்ளை இத்தனை வறுமையிலும் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு உதவிகள் பெற்று ஜெயின் கல்லூரியில் கடைசி ஆண்டு பி. எஸ் ஸி. படிக்கிறான். அந்தப் பிள்ளை கல்லூரிப் படிப்பை முடித்தால் எங்கேனும் நல்ல வேலை கிடைத்துக் குடும்பத்தின் வறுமைச் சூழ்நிலை மாறுமே! எனவே, தாம்பரம் மார்க்கெட் அருகில் தெருவில் ஒரு சின்ன ஸ்டாண்டு போட்டுக் கொண்டு அப்பளம், வடாம், வத்தல் போன்ற பல பொருள்களை மாலை நாலரை மணி முதல் இரவு ஒன்பதரை மணி வரையிலும் ரமேஷ் விற்பனை செய்கிறான். ஒரு நாளைக்கு சுமார் மூன்று ரூபாய் சம்பாதிக்க முடிகிறதாம்.


தாம்பரத்திலிருந்து நாலு மைலிலுள்ள சாலையூரில் ஓலைக் குடிசையில் வாழ்கிறது ரமேஷின் குடும்பம். காலை வேளையில் நாலு மைல் பள்ளிக்கு நடந்துதான் செல்கிறான்.

பத்து வயது சேகர் ஒரு குடியானவக் குடும்பத்தைச் சேர்ந்தவன். பயிர்த் தொழிலுடன் மாட்டு வண்டி ஓட்டுவதும் சேகரின் தந்தைக்கு வேலை. சேகரின் அண்ணன் சொல்ப சம்பளத்துக்கு எங்கோ வேலைக்கு செல்கிறான். குடும்பத்துக்கு உதவச் சேகர் மாடு மேய்த்துக் கொண்டிருக்கிறான்.

''அஞ்சு மாடு மேய்க்கிறேனுங்க. அதுலே ரெண்டு மாடு எங்க வூட்டுது. ஒரு நாளைக்கு ஒரு மாட்டுக்கு ஒரு ரூபா கூலிக்கு ஒருத்தர் வீட்டு ரெண்டு மாடுகளை மேய்க்கிறேனுங்க. இன்னொரு மாடு என் பிரெண்ட் வூட்டுது. என் பிரெண்டுதான் என்னோடு ஓட்டிக்கினு இருந்தான். திடீர்னு அவன் செத்துட்டானுங்க. அதனாலே நான்தான் ஓட்டுறேன். அவுங்க வூட்டுலே மேய்க்கிறதுக்குக் கூலி தரேனுங்க. நா வாணான்னுட்டேன். கூட இருந்து மாடு மேய்ச்ச பிரெண்ட் திடீர்னு செத்துட்டதை என்னாலே தாங்க முடியலீங்க...'' என்றான் குரல் தழுதழுக்க.

ரமேஷ், சேகர் போன்று நம் சமுதாயத்தில் எத்தனையோ இளம் துளிர்கள் தோல்வியை ஏற்காமல் நம்பிக்கையோடு வறுமையை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றன. குழந்தைகள் ஆண்டு இவர்களைப் பற்றி நாம் சிந்திக்க உதவட்டும் —

பேட்டி: ரங்கா; புகைப்படம்: மன்னை மூர்த்தி.



⌘ தெருவிலே வியாபாரம்
⌘ வீட்டிலே பாடம் — ரமேஷ்

பாட்டிமார்களும் பேத்திமார்களும்

ஜெயகாந்தன்

3. அக்காவுக்குக் கல்யாணம்!

கோதை, தன்னிடம் வருத்தம் கொண்டிருப்பதும், தன்னை அவன் 'இவன் பெரியவர்களிடம் மரியாதையில்லாதவன்' என்று நினைப்பதும், தன் பொருட்டு அவள் கண்ணீர் சிந்தி அழுவதையும் காண்கையில் சிங்காரத்துக்கு மனம் பதறிப் போயிற்று. அதுவும் 'நான் இந்த வீட்டிலே ஒரு வேலைக்காரிதானே!' என்று அவள் சொன்ன வார்த்தைகளை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

''சின்னம்மா... நான் என்ன தப்புப் பண்ணாலும் நீ என்னை அடக்கலாம், கண்டிக்கலாம், திருத்தலாம்... அவன் யாரு என்னை அதிகாரம் பண்றதுக்கு? நீ அவன் கிட்ட என்னைப் பத்திப் புகார் சொன்னதும் அவன் அன்னைக்கி பெரிய வீட்டுக்கு முன்னாலே வந்த வண்டியை வழிமறிச்சி நிறுத்திக்னு பெரிய அப்பா மாதிரி பேசினதும்தான் எனக்குப் பிடிக்கலே... அதனாலே உன்கிட்ட எனக்குக் கொஞ்சம் கோவமா யிருந்துச்சி... அன்னைக்கி நான் அவனைப் பதிலுக்கு நல்லாக் கேட்டேன். அது போச்சு — அவ்வளவுதானே? அதுக்கா நீ என் மேலே கோவிச்சுக்கிட்டு இருக்கே'' என்று மிகவும் கனிவோடும் சொந்தத்தோடும் கோதையின் கையைப் பிடித்துக் கொண்டு சொன்னான் சிங்காரம்.

சிங்காரம் 'அவன் அவன்' என்று குறிப்பிட்டது அவனை விடவும் தன்னை விடவும் பல வயது மூத்தவனை பெரியசாமியை என்று புரிந்து வாய் மீது பொத்திய கையுடன் பிரமித்துக் கேட்டுக் கொண்டிருந்தாள் கோதை.

''உன்னை விடப் பெரியவனை, அண்ணாத்தையை நீ இப்படி மரியாதை இல்லாமல் பேசறது நல்லாயில்லே கண்ணு'' என்று பயந்து பயந்து அவனுக்குப் புத்தி சொன்னாள் கோதை.

கோதை பெரியசாமிக்குப் பரிந்து கொண்டு பேசுவது சிங்காரத்துக்கு எரிச்சல் தந்தது.

''சின்னம்மா! பெரியவன் சின்னவன் எல்லாம் எனக்குத் தெரியாது. மரியாதை, கெட்டப்பறா? [illegible] கிடைக்காது எங்கப்பாவுக்கு [illegible] எனக்கும் எதிரிதான். அப்பாவுக்குப் பிடிக்குமா, இவன் வந்து இந்த வீட்டிலே உக்காந்து இருக்கிறது? நீங்கள் எல்லாரும் சேர்ந்து அப்பாவுக்கு விரோதமா அவனை இந்த வீட்டிலே சேத்து வெச்சிருக்கீங்களே — அது மட்டும் நியாயமா? அது மரியாதைதானா?... சரி சரி... என் பேச்சுக்கு எவனும் வரவேணாம்னு சொல்லி வைங்க — நான் மரியாதையோடே, மரியாதை கெட்டோ அநாவசியமா எவன் கிட்டயும் போயிப் பேசறதில்லே... விடு, சின்னம்மா அதுக்காக நீ ஒண்ணும் வருத்தப்பட வேணாம்...'' என்று தனது குரோதமான அபிப்பிராயங்களைப் பிரகடனம் செய்து கொண்டே தன் சட்டையைக் கழற்றி, சுவரிலிருந்த ஆணியில் மாட்டி விட்டுப் பின் கட்டுக்குப் போனான்.

அப்போது அவனது திறந்த மார்பு வெறிச் சென்று கிடப்பதைப் பார்த்து — அந்தத் தங்கச் சங்கிலி பற்றிக் கேட்க நினைத்தாள் கோதை. ஆனால் இது தருணம் சரியில்லை என்று தன்னை அடக்கிக் கொண்டாள்.

முற்றத்தில் பெரிய அண்டாவில் தண்ணீரும், தாழ்வாரத்தில் சந்தனம் அரைக்கிற கல்லும், கூடத்து அறையில் பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப் பட்டிருந்தன.

முருகேசன், ஐயர் வந்து உட்காருவதற்கும் சேர்த்துப் பெரிய பலகைகளை எடுத்து எதிர் எதிரே போட்டுவிட்டு இடுப்பில் துண்டைக் கட்டிக் கொண்டு ஒரு புறம் ஒதுங்கி நின்றான். ஐயர் வந்தார். சிங்காரத்தை எதிரில் உட்கார வைத்துக் கொண்டு அவர் தம் பணிகளைத் தொடங்கினார். அவரது உதடுகள் இடை விடாமல் ஸ்மரித்துக் கொண்டிருந்ததால் அநாவசியமாக அவனோடு பேச்சு வைத்துக் கொள்ளாமல் சைகையாலேயே சிங்காரத்துக்குக் கிரியைகளைச் சொல்லிக் கொடுத்தார்.

தெருவில் யாரோ — அக்கரையைச் சேர்ந்த சிங்காரத்தின் நண்பர்கள் இவனைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறார்கள் போல் தெரிகிறது. கோதையினால் கூடத்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஏககாலத்தில் ஒரு முறை தலை திருப்பினால், இங்கே கூடத்தில் ஐயரோடு உட்கார்ந்திருக்கிற சிங்காரத்தையும், இன்னொரு பக்கம் தெருவில் [illegible]ராய் நிற்கிற வண்டியையும் அதனருகே வந்து நின்று சிங்காரத்தை எதிர்நோக்குகிற அந்த 'அக்கரைப் பயல்களை'யும் பார்க்க முடிந்தது.

இவன் மரியாதை தர வேண்டியவர்களை அவமரியாதையாக

இந்த மாமிதான் அந்தப் பாமா! இந்த மாமி யார் என்று தெரிய வேண்டுமா? 30ம் பக்கம் பாருங்கள்!



நடத்துவதும். இந்த மாதிரித் தாழ்வான, தரமில்லாத, கீழ்சாதிக் காரர்களை சமத்துவமாக நடத்தி மரியாதை காட்டுவதும் ரொம்ப விபரீதமாக இருந்தது கோதைக்கு...

பெரிய வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து, தெருவில் கைகட்டி நின்றிருக்கும் வெட்டியான், தலையாரி, நாட்டாண்மைக்காரன் ஆகியோரிடம் கிராமத்தில் நடக்க வேண்டிய அறுவடை சம்பந்தமாக ஆக்கினைகள் பிறப்பித்துக் கொண்டிருந்த பெரியசாமி, சற்றுத் தூரத்தில் கோதையின் வீட்டுக்கு முன்னால் வண்டி கட்டித் தயாராக நிற்பது கண்டு, சிங்காரம் வெளியில் புறப்பட்டுக் கொண்டிருக்கிறான் என்று ஊகித்தான்.

சிங்காரத்திடம் பெரியசாமிக்குப் பேச வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருந்தன. ஆனால் அவனை எதிர் கொள்ளவே பெரியசாமிக்குப் பயமாக இருந்தது. அந்தப் பயம் ஒரு சிறுவனைக் கண்டு ஏற்படுவதில் கோழைத்தனம் ஏதுமில்லை. சுயமதிப்பு உடைய எவருக்கும் ஏற்படும் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் உணர்வுதான் அது.

ஆனாலும் பொறுப்பும் கடமையும் உள்ளவர்கள் வீம்பு பிடித்துக் கொண்டும் இருக்க முடியாதே? சிங்காரம் வயதில் சின்னவனாக இருந்தாலும் — ஏதோ சிறு பிள்ளைக் குணத்தில் தன்னிடம் தப்பாக நடந்து கொண்டாலும் — அவனே இந்தக் குடும்பத்தின் இந்தச் சொத்துக்களின் அதிகார பூர்வமான வாரிசு என்பதால் அவனிடம் தனது நிர்வாகக் காரியங்களைத் தெரிவிக்க வேண்டுமென்று நினைத்தான் பெரியசாமி. அதன்மூலம் சிங்காரம் வயதுக்கு வந்து அந்தப் பொறுப்புக்களைத் தானே ஏற்றுக் கொள்ளும் போது அவற்றை நிர்வாகம் செய்கிற பயிற்சியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் நம்பினான் பெரியசாமி. சிங்காரத்தைப் பள்ளியிலிருந்து பேர் நீக்கம் செய்தது





கல்கி

1979 ஏப்ரல் 15
சித்தார்த்தி சித்திரை 2
மலர்: 37 இதழ்: 37

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

பற்றியோ, அவனுக்குப் படிப்பு நின்று அவன் பல வழிகளில் திரிந்தலைந்து கொண்டிருப்பது பற்றியோ யாராவது அவனிடம் வந்து குறைப்பட்டுக்கொள்கிற போது.

''அவனுக்கெதுக்குங்க படிப்பெல்லாம்! ஏழு தலைமுறைக்கு மேல் கால் மேல் கால் போட்டுக்கொண்டு சுகஜீவனம் நடத்தலாம். அந்த அளவு எங்கப்பாரு சேத்து வெச்சிட்டுப் போயிருக்காரே!... அவனுக்குத் தாங்கும்! யார் அவனைக் கட்டுப்பாடு பண்ண முடியும்? கடவுள்தான் அவனுக்கு நல்ல புத்தியைத் தரணும் – படிப்பைத் தராவிட்டாலும்'' என்று பொருமிச் சமாதானமடைவான் பெரியசாமி.

இப்போது ஒரு சமாசாரத்தைத் தெரிவிக்க வேண்டி, கோதையையும் சிங்காரத்தையும் பார்த்துப் பேச எண்ணியிருந்த பெரியசாமி கோதை வீட்டு முன் வண்டி நிற்பதைக் கண்டதும், அவசர அவசரமாகத் திண்ணையிலிருந்து எழுந்தான். தெருவில் நின்றிருந்த தலையாரி முதலானவர்களைப் பார்த்து ''நீங்க போயி வேலையைப் பாருங்க — நான் தோப்புக்கு வந்து மீதியைப் பேசிக்கறேன்... தம்பி எங்கேயோ புறப்பட்டுக்கிட்டு இருக்கான்... ஒரு முக்கிய வேலை இருக்குது'' என்று சொல்லி அனுப்பிவிட்டு விளக்குச்சாமியாரைத் தேடினான் பெரியசாமி.

சிங்காரத்துக்கு நேர் மூத்தவள் ராசாத்திக்கு வரன் கிட்டியிருக்கிறது. 'இந்தப் பெண்ணாவது உலகத்துப் பெண்களைப் போல் புருஷன் வீட்டோடு நிரந்தரமாய் வாழ்ந்து பெருக வேண்டும்' என்று பிரார்த்தனை செய்தான் பெரியசாமி.

இன்று மாலை மாப்பிள்ளை வீட்டு மனிதர்கள் வருகிறார்களாம். அவர்கள் சிதம்பரத்தையடுத்த மடுவின் கரை என்ற கிராமத்தில் ரொம்பவும் செயலோடு வாழ்ந்து வரும் வீரசைவ மரபைச் சேர்ந்தவர்களாம். சோழிய வேளாளர்தானும்... தமது மரப்புப்படி இந்தப் பெண்கள் மாப்பிள்ளை தேர்ந்தெடுப்பதில் ரொம்பத்தான் சீலம் கொழிக்கிறார்கள் — தொடர்ந்து அந்தப் பெருமையையும் சீலத்தையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே' என்ற உள்ளார்ந்த கவலையுமிருந்தது பெரியசாமிக்கு. இந்தக் கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் செய்து அவனுக்குப் பழக்கமில்லை. தன் பொறுப்பில், தானே எல்லாவற்றையும் முடிவு செய்து விட்டதாகப் பின்னால் பழி ஏற்பட்டுவிடக் கூடாதே என்று அவன் பயந்தான். அதனால் இந்த ஏற்பாடு எல்லாரும் சேர்ந்து சம்மதித்து நடத்தியதாக அமைய வேண்டும் என்று விரும்பினான்.

அதோ வருகிறாரே விளக்குச்சாமி!

''சாமி... சாமி... உங்களைத்தான் நெனைச்சிக்கிட்டு இருந்தேன்... காந்தி எங்கே? கூப்பிடுங்க... பொன்னம்மாளையும் அவ மாமியாரையும் கூட வரச் சொல்லிட்டு வாங்க... தம்பி வெளியே புறப்படறதுக்கு முன்னே சின்னம்மா வூட்டு வரைக்கும் போயிட்டு வந்துடுவோம்...'' என்று பாதக் குறடுகளை மாட்டிக் கொண்டு படியிறங்கினான் பெரியசாமி.

நல்லவேளையாக, சிங்காரத்தின் வீட்டிலிருந்து வெளிப்போந்த அந்த ஒற்றைப் பிராமணர் நேர்கொண்டு வராமல், எதிர்த்திசையில் திரும்பி நடந்து கொண்டிருந்தார்.

காந்திமதி, அவ்வையாரம்மாள், சிவகாமி, பொன்னம்மாள் எல்லாரும் கும்பலாக வந்து கோதையின் வீட்டில் புகுந்தார்கள். கலகலப்பும் ஆரவாரமும் கூடத்திலிருந்து ஒலிப்பதை அறைக்குள் மறுபடியும் உடை மாற்றம் செய்து அலங்காரம் பண்ணிக் கொண்டிருக்கும் சிங்காரம் கேட்டான்...

''நல்ல இடம்... பெரிய சொத்து... இப்ப அவங்க அண்ணன் தம்பிக்குள்ளே பாகம் பிரிஞ்சுட்டுது... அதுவும் நல்லதுதான்... அவங்க ஏழுபேரு அண்ணன் தம்பிங்க... இந்த மாப்பிள்ளைப் பையன்தான் கடைசி... ஒரு சௌகரியம் ராசாத்திக்கு... நாத்தனாருங்க கெடையாது... மாமியார் வயசானவங்க... ஒரு காலும் கையும் ஒரு மாசமா விளங்கலியாம்... பொண்ணைப் பாக்க அந்த அம்மா வரலியாம்... மாப்பிள்ளையோட அண்ணிகள் வருவாங்க போல இருக்கு...'' — என்று ஒருத்தியின் குரலை முந்திக் கொண்டு இன்னொருத்தியின் பதிலும், சிரிப்பும், கலகலப்புமாய் எல்லாச் செய்திகளையும் அறைக்குள்ளிருந்தவாறே கேட்டான் சிங்காரம்.

அவன் மனத்தில் அக்காள் ராசாத்தியின் உருவம் தோன்றி அவளுக்குக் கல்யாணம் என்று கேட்டு மகிழ்ச்சி பொங்கியது.

''எங்கே சிங்காரத்தைக் காணோம்? தம்பி... தம்பி...'' என்று பெரிய குரலில் கூவி அவனை அழைத்தவாறே காந்திமதி அறைக் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே வந்தாள்.

அறைக்குள் நிலைக் கண்ணாடியின் முன் நின்று அலங்காரம் செய்து கொண்டிருக்கும் சிங்காரத்தை மோவாயில் கையூன்றிப் பார்த்து அன்பொழுகச் சிரித்தாள்.

(தொடரும்)

விடுமுறைக்குத் தன் அத்தையின் வீட்டுக்கு வந்திருந்தான் பலே பாலு.

பாலுவின் அத்தை பணக்காரி. கணவனை இழந்தவள். அத்தை மட்டும் தனியாக அந்த ஊரில் இருந்தாள். அது பெரிய நகரமல்ல. ஆனால் குக்கிராமமும் அல்ல. இரண்டுங்கெட்டான். பாலுவின் அத்தைக்குப் பெரிய பங்களா ஒன்று சொந்தமாக இருந்தது. ஆற்றோரத்தில் பெரிய தோப்பின் நடுவே கம்பீரமாகக் காட்சி அளித்தது அந்தப் பழங்காலத்து பங்களா. அதைப் பாழடைந்த பங்களா, பேய் உலவும் பங்களா என்று ஊரார் ஒதுக்கினார்கள். அவ்வளவு பெரிய வீட்டில் ஆவிகள் உலவுவதாக ஏற்பட்ட வதந்தி நாளாக ஆக உறுதியாகி நிஜமாகியே விட்டது. அதில் குடிபுக யாரும் முன்வரவில்லை. ஆகவே அவள் ஊருக்குள் ஒரு வாடகை வீட்டில் வாழ்ந்து வந்தாள். அந்தக் கிராமத்தில் அத்தைக்கு நிலபுலன்கள் தோப்பு துரவு இருந்ததால் அதை விட்டு வேறு ஊரில் வாழ விரும்பவில்லை.


இந்த அத்தையிடம்தான் பாலு விடுமுறையைக் கழிக்க வந்திருந்தான். பாலுவுக்கு இந்தப் பேய்ப் பிசாசு இதிலெல்லாம் நம்பிக்கை கிடையாது. ஆனாலும் கிராமத்தார் உறுதியாகக் கூறினார்கள். அவர்களுடைய நம்பிக்கையைப் பொய்யாக்க வேண்டுமென்று உறுதி செய்துகொண்டான். ஒரு நாள் அந்தப் பேய்ப் பங்களாவின் கொத்துச் சாவியை எடுத்துக்கொண்டு, கிளம்பினான் பாலு—அந்தப் பாழடைந்த பங்களாவைப் பார்வையிட.

சவுக்குத் தோப்புக்குள் சோகமே உருவமாகக் காட்சியளித்தது அந்தப் பங்களா. போக்குவரத்து இல்லாததினால் பங்களாவுக்குச் செல்லும் பாதையெல்லாம் புல்லும் புதரும் மண்டிக் கிடந்தன. பாலுவின் நெஞ்சு 'தடக் தடக்' என்று அல்லூர் 'ரைஸ் எஞ்சின்' போலச் சத்தமிட்டது. 'சே என்ன பயம்? பேய் பிசாசெல்லாம் பகல் வேளையில் வராதாக்கும்!' என்று தனக்குள் கூறிக் கொண்டு முன்னேறினான். தத்தியடிக்கத் தொடங்கிவிட்ட பற்களை இறுக்கிக் கடித்துக் கொண்டு 'பயப்படுவானேன், பைத்தியக்காரத்தனம்!' என்று தனக்குள் குமுறிக் கொண்டு, கதவில் தொங்கும் பூட்டின் சாவித் துவாரத்திற்குள் சாவியை நுழைக்க முடியாமல் கைகள் உதற ஒரு வழியாகப் பூட்டைத் திறந்து கதவை தெம்பித் தள்ளித் திறந்த போது அது கிரீச்சிட்டுக் கிலியூட்டிய படி திறந்து கொண்டது.

புழுதிபடிந்து இருள் மண்டிக் கிடந்த விசாலமான கூடத்தில் நின்று கொண்டிருந்தான் பாலு. எங்கிருந்தோ ஒளிக்கீற்று உள்ளேபுகுந்து அந்தக்கூடத்தின் அமைப்பைத் தெரிந்து கொள்ளுமளவுக்கு மங்கலான வெளிச்சத்தைக் கொடுத்தது. உத்தரங்களிலிருந்து தொங்கும் ஒட்டடைகள். வெளியே சவுக்குமரங்களின் பேயாட்டத்தில் 'ஊய்' என்று எழும் ஓசை.

திடீரென்று அந்த மங்கல் வெளிச்சமும் மறைந்து இருள் சூழ்வது மாதிரி — யாரோ, ஏதோ அவனுக்குப் பின்னால் வந்து வாசலை மறைத்துக் கொண்டு நிற்பது போல... சட்டென்று திரும்பினான்... யாருமில்லை எதுவுமில்லை...

நின்றிருந்த மூச்சை நிதானமாக வெளிவிட்டான் பாலு. 'ஓடும் மேகம் சூரியனை மறைத்திருக்கும்... ' என்று தைரியமூட்டிக் கொண்டபோது 'க்கிர்... ரீ... ரீச்' என்ற கமறலுடன் வாசல் கதவு தானாக மூடிக்கொண்டது. பாலு பதறியடித்துக்கொண்டு ஓடிப் போய் நகரும் கதவை இழுத்து நிறுத்த முயன்றபோதுதான் அதைப் பார்த்தான் அதாவது பேயை! — ஆவிகளுக்கே உரிய கோலத்தில் — உயரமாக, மங்கலான வெளிர் நிறத்தில் மாடிப்படிகளின் மீதாக மிதந்தபடி பாலுவை நோக்கி வந்து கொண்டிருந்தது. இதயம் தொண்டைக்குழிக்கு வந்தது போல் பாலுவுக்கு மூச்சுத் திணறியது. — இது கொஞ்ச நேரம்தான். உடனே பயம் போய்க் கோபம் மூண்டது அவனிடம். பூனை போல கூடத்தை விட்டு வெளியேறலானான்.



ஓசைப் படாமல் கதவைப் பூட்டிக்கொண்டு ஓடிவந்து விட வேண்டும் என்றுதான் நினைத்தான். திரும்பிப் பார்த்தான் உள்ளே. மாடியில் ஏறிக்கொண்டிருந்தது ஆவி. ஒருவிதமான நாட்டியத்துடன் ஒவ்வோரடிக்கும் அதன் உடல் இரண்டாக ஒடிந்து மடிந்து... குலுங்கிச் சிரிக்கிறதோ – தன்னைப் பயமுறுத்தியதை எண்ணி? பாலுவுக்கு இப்போது ஆத்திரம் குமுறிக்கொண்டு வந்தது. அது நம்மைப் பயப்படச் செய்தது போல நாம் அதைப் பயமுறுத்தினால் என்ன?

கதவோடு ஒண்டியபடி "பூ ஊ" என்று பெரிதாகத் தன் பலங்கொண்ட மட்டும் கத்தினான் பாலு. ஆடி ஆடி மேலே ஏறிப் போய்க் கொண்டிருந்த ஆவி திடுக்கிட்டுக் கிரீச்சென்று அலறியபடி இரண்டடி துள்ளி மேலே உயர்ந்து பிறகு பொத்தென்று மாடிப் படிகளில் விழுந்தது.

பாலுவுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. அது தன்னைப் பயமுறுத்தியதை விடத் தான் அதை அதிகமாகப் பீதி கொள்ளச் செய்து விட்டோம் என்பதில் ஒரே குஷி அவனுக்கு. இனி அவன் இந்த ஆவியிடம் பீதி கொள்ள வேண்டியதில்லை! அட்டகாசமாக ஹாலுக்குள் போனான். படிகளில் அமர்ந்தபடி மாடிப் படிக் கைப்பிடியைப் பிடித்துக் கொண்டு மூச்சுவாங்கிய அந்த ஆவி–பேய்–

"யப்பாடி ... யம்மா! டேய்... பையா! இந்த மாதிரி என்னைப் பயமுறுத்தாதே இனிமே" என்றது திணறலுடன்.

"பயந்துட்டியா? ... உன்னை நல்லாப் பயமுறுத்திட்டேன்லே? போறும்! இப்போ நீயும் நானும் சமமாயிட்டோம்."

"அதெப்படி சமமாக முடியும்? பையனு லக்ஷணமா என்னைக் கண்டு பயந்து போகாமஅசடு மாதிரி! பேய்கள்தான் மனிதர்களைப் பயமுறுத்தும். மனிதர்கள் எங்காவது பேய்களைப் பயமுறுத்தியதுண்டா?" என்று சொல்லிக் கொண்டே எழுந்திருந்த ஆவி, மெள்ளக் கீழ்ப்படிக்கு வழுக்கியபடி வந்து உட்கார்ந்து கொண்டது.

"தம்பி, நான் உங்கிட்ட பயந்துக்கிட்டது ஜனங்களுக்குத் தெரிஞ்சா ரொம்ப அவமானம். என்ன தெரிஞ்சுதா?"

"அப்போ இதை யார் கிட்டேயும் சொல்லாதேங்கறே, அப்படித்தானே?" என்று கேட்டான் பாலு.

"ஆமாம்... நாம ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளுவோம். இந்த விஷயத்தை நீ யாருகிட்டேயும் சொல்லக் கூடாது. அதுக்குப் பிரதியா நான் வந்து.. நான் உனக்கு" என்று யோசித்தது ஆவி. பிறகு "கண்ணுக்குத் தெரியாமல் மறைஞ்சு போவது எப்படிங்கிறதை உனக்கு நான் கத்துத் தரேன்."

"ம்ஹூம்... இந்த வேலைத்தன மெல்லாம் எனக்கு வேண்டாம். உன்னுடைய பயந்தாங்குளித்தனத்தைப் பத்தி ஊரார் கிட்டே சொல்லாதிருக்கணும்னு நீ செய்ய வேண்டியது என்ன தெரியுமா? இந்தப் பங்களாவை விட்டுப் போயிடணும். கிழக்காலே மதகடி கிட்டே ஒரு பாழடைஞ்ச மண்டபமிருக்கே அங்கே வேணு போய்த் தங்கிக்கோ" என்றான் பாலு.

"அந்த மொட்டையன் மண்டபத்திலேயா?" என்று ஏளனமாகச் சிரித்தது ஆவி. "அதுக்குக் கதவு கிடையாது. ஜன்னல் கிடையாது. மேல் கூரையெல்லாம் விரிசலும் கரையானும். மழை பெய்தால் ஒரேயடியா ஊத்தும். என்னாலே அங்கே வசிக்க முடியாது. ஆவிகள் வசிக்கக் கூடிய இடமா அது?" என்று கேட்டது பேய்.

"உண்மைதான். ஆனா உனக்கு உரிமையில்லாத இந்த வீட்டிலே குடி இருந்துகொண்டு பாவம் எங்க அத்தைக்கு எவ்வளவு கஷ்டமும் நஷ்டமும் உண்டாக்கறே?" என்று கேட்டான் பாலு.

"உன் அத்தை இந்த வீட்டை வாடகைக்கு விடறதை நான் தடுக்கல்லியே. ஜனங்கள் பயந்துக்கிட்டுப் போனா அதுக்கு நான் என்ன செய்யறது?"

"அவங்க பயப்படறதுக்குக் காரணம் நீ தான். இதோ பாரு நான் உன்னோட பேரம் பேசிக் கிட்டிருக்கப் போறதில்லை. நான் உன்னைப் பயப்பட வைச்சதைப் பத்தி எல்லார் கிட்டேயும் சொல்லப் போறேன்."

"ஐயோ, வேண்டாம், வேண்டாம். அப்படிச் செஞ்சுடாதே!" என்று அலறிய ஆவி மாறிமாறி மறைந்தும், தோன்றியும் தவித்தது. "என் பயந்தாங்குளித் தனம் அம்பலமானா எங்கள் ஆவி உலகத்துக்கே பெருத்த அவமானம்."

பாலுவோடு ஆவி ஆலோசனை கலந்தது. மறைந்து தோன்றும் வித்தையைக் கற்றுக் கொண்டு 'பெரும் பொருள்' சேர்க்கலாமென்றது ஆவி. பாலு, "நான் படித்துப் பட்டம் பெற்று உத்தியோகம் செய்து ஊதியம் பெற்று உண்பேனேயொழிய இப்படிக் குறுக்கு வழியிலெல்லாம் பணக்காரனாக மாட்டேன்" என்று கூறி விட்டான்.

"அடே, பையா இது என் வீடப்பா!" என்று அழ மாட்டாமல் ஆதங்கப்பட்டது ஆவி. "முப்பது வருஷமா இங்கே வாழ்ந்து வரேன். யாருக்கும் நான் ஒரு கெடுதலும் செய்ததில்லே. நீ திடீர்னு இங்கிருந்து என்னை விரட்டறே... பாழடைஞ்ச மண்டபத்துக்குப் போங்கறே. எதுக்காக... பிச்சைக்காக... இந்த வீட்டு மேலே கிடைக்கப்



போற வாடகைக்காக'' ஹோவென்று அழுதது — கண்ணீர் விடாமல் — பாலுவின் மனத்தை இளக்குவதற்காக.

பாலு கல்நெஞ்சக் காரனல்ல. இந்த முப்பது ஆண்டுகளில் எவ்வளவு பேரை இந்த ஆவி கிலி கொள்ளச் செய்து விரட்டி இருக்கும்? ஆனாலும் தான் இதைப் பயப்பட வைத்ததைப் பிறரிடம் சொல்வதினால் பலன் ஏதுமில்லை என்பதையும் உணர்ந்தவன் பாலு. இவன் சொன்னாலும் அதை யாரும் நம்ப மாட்டார்கள். நிரூபிப்பது எப்படி? ஆகவே புத்திசாலியான பிலே பாலு ஒரு முடிவுடன், ''ஓகே! நீ எனக்கு மறையும் வித்தையைக் கற்றுக் கொடு. நான் உன்னைப் பற்றி யாரிடமும் சொல்லவில்லை'' என்று அதனுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டான்.

பாலு தன் அத்தையிடம் கூட ஆவியைச் சந்தித்துச் செய்து கொண்ட ஒப்பந்தத்தைப் பற்றிக் கூறவில்லை. ஆனால் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக் கிழமையன்று பேய்ப் பங்களாவுக்குப் போய் அந்த ஆவியிடம் மறையும் கலையைப் பயின்று வந்தான். அதன் பாடங்கள் எளிமையாகவே இருந்தன. நான்கு வாரத்தில் பாலு காற்றோடு கலக்கும் வித்தையை அறிந்து கொண்டு விட்டான். ஆறாவது வாரத்தில் ஆவி அவனுக்குப் பரீட்சை வைத்தது. 'பி—பிளஸ்' வாங்கித் தேறி விட்டான். ஆவியுடன் கைகுலுக்கி விடை பெற்றான்.

அன்றிரவு அத்தை பாலுவைக் கேட்டாள். ''ஏண்டா பாலு, கொஞ்ச நாளா நீ அடிக்கடி எங்கேயோ போயிட்டுப் போயிட்டு வறியே என்ன விசேஷம்?''

''மாயமாக மறைந்து போகும் வித்தையைக் கற்றுக் கொண்டு வருகிறேன் அத்தை.''

அத்தை சிரித்தாள். ''நீ பொல்லாதவன்டா! அந்த மாயத்தைக் கத்துண்டாலும் கத்துப்பே!'' அவள் பாராட்டில் அவநம்பிக்கை தொனித்தது.

''நெசமாத்தான் அத்தை. தமாஷ் இல்லே. உன் முப்பாட்டனார் காலத்துப் பங்களாவிலே வசிக்கிறதே ஆவி, அது கிட்டத்தான் கத்துண்டு வரேன்.''

''பேய், பாலு இதெல்லாம் விளையாட்டில்லே. நீ ஏன் அங்கேயெல்லாம் போறே?..'' அத்தை கேட்டுக் கொண்டிருக்கும் போதே பாலு காணாமல் போய் விட்டான். அத்தை அதிர்ச்சியடைந்த போது பாலு மறுபடி தோன்றினான். அத்தைக்கு ஒரே அதிர்ச்சி. கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள். பாலு விளையாடவில்லை வினைதான் செய்கிறான் என்பதைப் புரிந்து கொண்டதும் அவளுக்குப் பயமாக இருந்தது. பாலு ரொம்ப நேரம் தன் அத்தையுடன் பேசி அவளைச் சமாதானப் படுத்தினான். ஆவிக்குக் கொடுத்த வாக்கைப் பாலு மறக்கவில்லை. தான் அதைப் பயமுறுத்தியதை அவன் கூறவில்லை.


ஒரு நாள் தன் திட்டத்தை அத்தையிடம் விளக்கினான். ஒரு தினுசாக அத்தையும், அவனுடன் ஒத்துழைப்பதாக ஒப்புக் கொண்டாள்.

அதன்படி மறுநாளே அத்தை அந்தப் பேய் பங்களாவுக்குக் குடியேறிப் போனாள். பல வருஷங்களாகப் படிந்து கிடந்த தூசி தும்பு குப்பை கூளங்களைத் தட்டிக் கொட்டிப் பெருக்கி வாரிச் சுத்தம் செய்யலானாள். கதவுகளையும், ஜன்னல்களையும் தடார்படார் என்று திறந்து சாத்தி ஓசையுண்டாக்கினாள். இந்தச் சத்தமும் கூச்சலும் புழுதி கிளப்பிய கமறலும் ஆவியை நடுக்கூடத்தில் தோன்றச் செய்து விட்டன. முதலில் ஆவியைக் கண்டதும் அத்தை நடுங்கித்தான் போனாள். கையிலிருந்த துடைப்பத்தினால் அதை வீசினாள். துடைப்பம் அதன் உடலினுள் புகுந்து புறப்பட்டது. ஆவியோ இருகைகளையும் தூக்கிக் கொண்டு — 'ஓ' என்ற கூச்சலுடன் அத்தை மீது மிதந்தது. அத்தை நடுங்கியபடி ஒதுங்கினாள்.

இத்தனை நேரமும் அதே இடத்தில் உருமாறி நின்று கொண்டிருந்த பாலு திடீரென்று ஆவியின் பின்னால் தோன்றி 'பூ' என்று கூவினான். அவ்வளவுதான். ஆவி பயந்து அலறியபடி கீழே விழுந்து மூர்ச்சையடைந்தது. அத்தைக்கு வியப்பான வியப்பு. பாலுவைப் பெருமையுடன் பார்த்தாள். மூர்ச்சையாகி விழுந்து கிடக்கும் ஆவியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அதற்கு மூர்ச்சை தெளிவிக்க அதன் மூக்குக்கு நேரே கமறும் வாயுவை (ஸ்மெல்லிங் ஸால்ட்) நீட்டினாள். அதன் நெடியினால் நினைவு திரும்பப் பெற்ற ஆவியைத் தூக்கி நாற்காலியில் உட்கார வைக்க முனைந்தாள். ஆனால் அவளால் ஆவியின் உடலைப் பிடிக்க முடியவில்லை. அதன் உடலுக்குள் அவள் கை புகுந்து வெளிப்பட்டது. பிடிமானமில்லை! ஒருவழியாக ஆவி தானேஎழுந்து போய் நாற்காலியில் அமர்ந்து கொண்டது. பாலுவைப் பார்த்து, ''நீ உன் வார்த்தையைக் காப்பாற்றவில்லை'' என்று குற்றம் சாட்டியது.

''நான் உன்னைப் பயமுறுத்தியதை மற்றவர்களிடம் கூறவில்லையென்று வாக்களித்தேனே தவிர உன்னை மறுபடி பயமுறுத்துவதில்லை என்று கூறவில்லையே!'' என்றான் பாலு.

''நிஜமாகவே நீ பேய்தான் இல்லையா? ஊரார் ஜனங்கள் கதைகட்டி விடுகிறார்கள் என்றிருந்தேன்'' என்ற அத்தை 'ம்' என்ற பெருமூச்சுடன் மறுபடி



தன் துப்புரவு வேலையில் ஈடுபடலானாள். முன்னைவிட அதிகத் தூசி, அதிகச் சத்தம்.

ஆவி தன் தலையை இருகைகளாலும் அழுத்திக்கொண்டது. ''என்ன சத்தம் என்ன சத்தம்? பாட்டியம்மா உங்களாலே சத்தமில்லாம காரியம் செய்ய முடியாதா?''

''இது யார் வீடு? உனக்கு இந்தச் சத்தமும் தூசியும் தாராளமா இருந்தாப் போயிடு'' என்றாள் அத்தை.

ஆவி பாவம்! தும்மலோ தும்மல் என்று தும்மித் தீர்த்தது! ''பாட்டியம்மா... உங்களுக்கு ரொம்பப் பாவம்... இத்தினி தூசியையும் கமறலையுமா கிளப்புவாங்க. அந்தப் பையன் எங்கே'' என்று கேட்டது. பாலு மறுபடியும் மறைந்து விட்டிருந்தான்

''எனக்கென்ன தெரியும்... ஒருவேளை உன்னை மறுபடி கிலி கொள்ளச் செய்ய மறைந்து காத்திருப்பான்'' என்றாள் அத்தை.

''அந்தப் பையனை உங்களாலே கண்டிக்க முடியாதா? எனக்கு மட்டும் அனுமதி கொடுத் தீங்கன்னு'' ஆவி தன் பற்களை நறநறத்தது சத்தம் எழாமல்.

''என் அனுமதி அவசியமே இல்லே'' என்ற அத்தை ஆவி அமர்ந்திருந்த நாற்காலியின் தூசியை வேக வேகமாகத் தட்டலானாள்.

''நானும் பாலுவும் இனிமே இந்தவீட்டிலேதான் தங்கப் போறோம். உன் வேலைத் தனத்தைக் காட்ட நினைக்காதே புரிஞ்சதா?'' என்றாள் அத்தை.

''ஓஹோ அப்படியா சேதி?... நீங்கள் இங்கே தங்குவதைப் பார்த்து விடலாம்'' என்று பெரிதாக, பயங்கரமாக ஊளையிட்டபடி மேலும்கீழும் ஆடியது ஆவி.

அத்தை கொஞ்சமும் பயப்படவில்லை. பாலு சொல்லி இருந்தாப்ல — அது சோதா ஆவி என்று. ஆகவே இரண்டு காதிலும் பஞ்சை வைத்து அடைத்துக் கொண்டு அன்றிரவு படுத்தாள் அத்தை. விளக்கையும் பெரிதாக எரிய வைத்திருந்தாள். ஆவி தன் ஆவேசத்தையெல்லாம் காட்டிக் கத்தியது, கூச்சலிட்டது. தன் விழிகளைக் கொள்ளிக் கட்டைகள் போலப் பளபளக்கச் செய்து பயமுறுத்திப் பார்த்தது. ஆனாலும் ஆவிக்கு எந்த நிமிஷத்தில் எங்கிருந்து பாலு திடீரென்று தோன்றித் தன்னைப் பயமுறுத்துவானோ என்ற பீதி மட்டும் போகவில்லை. ஏனென்றால், பாலு அதன் கண்களுக்குத் தட்டுப்படவே இல்லை. தான் கற்றுக் கொடுத்த கலையைக் கொண்டே தன்னைக் கிலிகொள்ளச் செய்கிறானே இந்தப் பயல் என்று ஆவிக்குத் துக்கம்.

அத்தையைப் பீதிகொள்ளச்செய்து விரட்டும் அதன் முயற்சியை விட, எந்த மூலையிலிருந்துஎப்படிப் பாலு திடீரென்று தோன்றிப் பயமுறுத்துவானோ என்று அது பயந்து செத்தது!' கடைசியில் அத்தையிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டது. கெஞ்சியது, அழுதது. தன்னை அங்கேயே வாழ விடும்படி. ஆனால் அத்தை பாலு சொல்லிக் கொடுத்தபடி ஒரே பிடிவாதமாக இருந்தாள். விட்டுக்கொடுக்கவே இல்லை. வேறு வழியில்லை ஆவிக்கு. பாலுவுக்குப் பயந்து செத்துக் கொண்டு — அத்தைப் பாட்டியோடு மல்லுக்கு நின்று கொண்டு இங்கே இனி ஆட்சி நடத்த முடியாதென்று மதகடி மொட்டையன் பாழ் மண்டபத்துக்குக் குடி பெயர்ந்தது. பேய்ப் பங்களா, ஆவியின் ஆளுகையிலிருந்து விடுபட்டது. ஒருநாள் மொட்டையன் மண்டபத்துக்குப் போனான் பாலு, ஆவியைக் குசலம் விசாரிக்க. ''புது இடம் எப்படி இருக்கு?''

''தேவலாம்... திடீரென்று பின்னால் வந்து 'ப்பூ' என்று பயமுறுத்த இங்கு ஒரு பயல் இல்லே'' என்றது ஆவி. ஆவியும் பாலுவும் இப்போது ரொம்ப ரொம்பத் தோஸ்துக்கள். பாலுவைப் பார்க்க ஆவி தன் பழைய இருப்பிடமான பங்களாவுக்கு வரும். பாலு மண்டபத்துக்குப் போவான். ஆவியிடம் இன்னும் பல பேய் வேலைகளையெல்லாம் கற்றுக்கொண்டான்.

அதில் முக்கியமானது இருட்டில் இருவிழிகள் மட்டும் பளிரிடும்படி தோன்றுவது. பின்னால் டாக்டராகும் போது — நோயாளிகளின் வாய்க்குள் டார்ச் கொண்டு டான்ஸிலை ஆராய வேண்டிய சமயத்தில் இந்த 'ட்ரிக்' பயன்படும் என்று இதைக் கற்றுக் கொண்டான் பாலு.

நாளாக ஆக அத்தைக்கும் அந்தப் பயந்தாங்குளி ஆவியிடம் பாசம் ஏற்பட்டது. பாதுகாப்பில்லாத மொட்டையன் மண்டபத்தில் மாரிக் காலத்தின் குளிரும், பனியும் ஆவியைப் பாடாகப் படுத்துமே என்று அதற்கு ஒரு கம்பளி ஸ்வெட்டரைப் பின்னிக் கொடுத்தாள் அத்தை. அத்தையின் பாசத்திலும் பாலுவின் அன்பிலும் ஆவி உருகிப் போய் ஹோவென்று விக்கி விக்கி அழுதது. அதன் அழுகை அத்தையின் கண்களிலும் கண்ணீரை வழிய வைத்து விட்டது. அதிக ஆனந்தம் ஏற்படும் போது அத்தைக்கு அழுகை வந்து விடும். பாலு அடிக்கடி தன் ஆவி நண்பனைச் சந்திக்க இப்போதெல்லாம் அத்தையின் ஊருக்குப் போய்விடுகிறான்.

இந்த டீன் ஏஜ் காலேஜ் கன்னிதான் அந்த மாமி! இப்போதாவது புரிந்து கொண்டீர்களா இல்லையா? இல்லையெனில்

49ம் பக்கம் பார்க்கவும்.



புத்தாண்டு உணர்த்தும் பொது உண்மை

அருள்வாக்கு

ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்




புத்தாண்டு பிறக்கப் போவதற்கு முன்னறிகுறியாக, சில நாட்கள் முன்பே இயற்கையன்னை தனது மரவர்க்கங்களில் அரசிளங் குழந்தைகளான அரசையும் வேம்பையும் அடியோடு இலையுதிரச் செய்கிறாள்; பிறகு, இப்போது, பச்சைத் துளிர்களைத் தழைக்க வைக்கிறாள்.

அரசுக்கும் வேம்புக்கும் கல்யாணம் செய்து அதனடியே விநாயகரையும் நாகராஜனையும் பிரதிஷ்டை செய்வது தொன்று தொட்ட வழக்கு. பனிக் காலத்துக்குப் பின் இலை உதிரும் போது பிள்ளையாரும் நாகராஜனும் மரத்தின் நிழற்குடை இல்லாமல் ஸூரிய வெளிச்சம் தங்கள் மேல் படுகிற மாதிரி இருப்பார்கள். இது இம்மாதிரி ஆகாசம் பார்க்க ஸுக உஷ்ணமான ஸூரிய வெளிச்சத்தை ஆனந்தமாக அநுபவிக்கிற பருவகாலமாகவே இருக்கிறது. மழை காலத்திலே குடை வேண்டும். கோடையில் கொளுத்துகிற வெய்யிலில் குடை வேண்டும்; இராப் போதில் மட்டுமே வானம் பார்க்க இருக்கலாம். கடும் பனிக் காலத்தில் பகலில் குடை வேண்டாமாயினும், இரா வேளையில் ஆகாசம் பார்க்க இருக்க முடியாது. ஆனால் அத்தனை பனியில்லாத இலையுதிர் காலத்தில் (சிவராத்ரியோடு குளிர் 'சிவசிவா' என்று போய் விடும் என்பார்கள்), ஸுக உஷ்ணமாக ஸூரியன் இருக்கிற காலத்தில் மட்டும் பகல், இரா இரண்டிலும் ஆகாசம் பார்க்க இருக்கலாம். இதற்குச் சரியாகவே இந்தப் பருவத்தில் இயற்கையன்னை விக்நேச்வரருக்கும் நாகராஜனுக்கும் ஸூரிய பூஜை நடக்கிற மாதிரி மேலே இருக்கிற இலைகளை உதிர்த்து விட்டிருக்கிறாள். நாகராஜனை ஸுப்ரம்மண்ய ஸ்வாமி என்றே சொல்லலாம். தெலுங்கர்கள் ஸுப்ரம்மண்யர், பாம்பு இரண்டையும் 'ஸுப்பராயுடு' என்கிறார்கள். ஷஷ்டியில் நாகராஜ பூஜை செய்கிற வழக்கம் நம் தமிழ்த் தேசத்திலும் பிராசீனமாக இருந்து வந்திருக்கிறது. ஆதி தம்பதிகளின் குழந்தைகள் என்று தங்கள் பெயராலேயே தெரிவிக்கிற பிள்ளையார், குமார ஸ்வாமி இருவருக்கும் இயற்கையன்னை காட்டும் பரிவு, பார்வதீ பரமேச்வரர்களின் குழந்தைகளான நம் அத்தனை பேருக்கும் காட்டுகிற அன்புக்கு அடையாளமாயிருக்கிறது.

அது நிறைந்த பரிவாக இருக்கிறது. மித வெப்பமாக இருந்தபோது இவர்களை ஸூரிய ஒளியில் உட்கார்த்தியிருந்தாலும், வஸந்த காலம் வந்து, ஸூரியன் கொஞ்சம் உக்ரமானவுடனே இயற்கையன்னை துளிர்கள் தழைத்துப் பசுங்குடை பிடிக்கிறாள்!

இலையுதிர்ப்பது, துளிர்ப்பது எல்லாம் இயற்கை; லோக நியதி; இவை யுகாந்தரங்களாக மாறாமல் நடப்பவை. ''இப்படித்தான் நடக்க வேண்டும்'' என்று பிரபஞ்சத்தில் ஒவ்வொன்றுக்கும் நியதி இருக்கிறது. அப்படி அவை நடப்பதால்தான் உலக வாழ்க்கை நடக்க முடிகிறது. இல்லா விட்டால் எல்லாம் தெறி கெட்டுப் போகும். லோகத்திலுள்ள ஸமஸ்த ஜீவராசிகளும் ஸௌக்யமாக வாழ வேண்டும் என்கிற அன்பான எண்ணத்திலேயே அவை ஒன்றோடொன்று ஒத்துப் போவதற்காக இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒரு நியதி (Law) ஈச்வரனால் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. 'தன் குழந்தைகளை வெயில் படாமல் மழைபடாமல் காப்பாற்ற வேண்டும்; அவர்களுக்கு இளவெய்யில் தேவையாயிருக்கிறபோது அதைத் தந்து அரவணைக்க வேண்டும்' என்கிற அன்பு ஈச்வரனுக்கு இருப்பதால், அதற்கு அநுஸரணையாக இயற்கையை நடத்தி வைத்து மரங்களுக்கு ஒரு நியதியைத் தந்திருக்கிறார்.

மரத்துக்கும் மட்டைக்கும் இருக்கிற நியதி நமக்கும் உண்டு. மனிதனுக்காக உள்ள இந்த நியதிக்கே தர்மம் என்று பெயர். மனிதனுக்கு மட்டும் இந்த நியதியை மீறவும் மூளையைத் தந்து ஸ்வாமி விளையாட்டுப் பார்க்கிறார். அந்த மூளையை வைத்துக் கொண்டு இவனும் எதையெதையோ ஸௌக்யமாக நினைத்துக் கொண்டு அவற்றுக்காக அலைகிறான். இதில் சாச்வத ஸௌக்யமும் பெறாமல் தனக்கான தர்மத்தையும் மீறுகிறான். இறுதியில் ஸௌக்யத்தைத் தருவது தர்மமே.



வருக! வருக!!
வெள்ளிவிழா
கைத்தறிக் கண்காட்சி
ாந்தியன் சாலை, எழும்பூர்,
0-4-79 முதல் 5-5-79 வரை
கண்ணைக கவரும கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண படடுச சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும்
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
குறைந்த விலையுடன்
சிறப்புத் தள்ளுபடியும்
உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
சிறப்புத்
தள்ளுபடி
20%



32. ஸ்ரீரங்கநாதம்

அரைதான் கர்ஜனையே போதும்...

ராஜத் துரோகிகளின் சாரமற்ற கூச்சல்கள் ஒடுங்கிப் போயின.

சர்வ வல்லமை பொருந்திய நவாப் திப்பு சுல்தான் முன்பாகச் சிறைப்பிடிக்கப்பட்ட தம்பி — சின்னசுல்தான் அப்துல் கரீமை அழைத்து வருகிறார்கள்.

வெட்கித் தலை குனிந்து கொண்டிருக்கிறான் அப்துல் கரீம். அவனை ஓர் அருவருப்பைக் கவனிப்பது போலக் கவனித்த திப்புசுல்தான், "இந்தத் துரோகியை அவிழ்த்து விடுங்கள். இவனுக்கு ஒரு கட்டு தேவையா? பெரிய வீராதி வீரன்!... பேடிப்பயல்! தூ!" என்று கூறிக் காரியுமிழ்ந்து, தனது வேதனை நிரம்பிய வெறுப்பினை வெளிக்காட்டி முகத்தைச் சுளித்துக் கொள்கிறான். அங்கங்கள் பதறு கின்றன.

கட்டவிழ்த்து விடப்பட்ட அப்துல் கரீம், மனத்தளவில் கறுவிக் கொண்டு தலைகுனிந்து நிற்கிறான்.

"ஏன் நிற்கிறாய்? என்முன் சில காலம் [illegible] தலை காட்டாதே! இப்படியான ராஜத் துரோகிகள் என் பக்கத்திலேயே இருந்தாலும் எனது வல்லமையைச் சோதித்துப் பார்த்து விட முடியாது!" என்று இரைந்து பக்கத்தே நின்றிருந்த திவான் சாகிப் மீர்சாதிக்கை ஓரக் கண்களால் கவனிக்கிறான். அவனது அந்தக் கணிப்பை இப்புறமாக இருந்த திவான் பூரணய்யா முதல் ராஜாக்கான் வரை உணராமலில்லை. ஆயினும் அவர்கள் எப்போதும் போலவே எந்தவித மெய்ப்பாடுகளையும் காட்டிக் கொள்ளாது நின்றனர்.

"திவான் பூரணய்யா! தப்பியோடிய அந்த நன்றி கெட்ட அயாஸ்கானைச் சிறைப் பிடித்துக் கொண்டு வர முயற்சி எடுத்துக் கொள்ளுங்கள். அவனைக் கடுமையாகத் தண்டிப்பதன் மூலம், இங்குள்ள பல சொறி நாய்களுக்குப் புத்தி வரவேண்டும்" என்றான் திப்பு சுல்தான்.

சுற்றுமுற்றும் கவனிக்கிறான் திப்புசுல்தான். அங்கே தனது ஆருயிர் நண்பனில்லாதது கண்டு திகைக்கிறான்.

"திவானய்யா! பசவராஜ் எங்கே? அவன் மட்டும் முன்கூட்டியே வந்து உதவி விரா விட்டால் அப்துல் கரீமின் இந்த ராஜத் துரோகச் செயலால் நாம் கொஞ்ச காலம்



தலைமறைந்து வாழநேரிட்டிருக்கும். இந்நேரம் கும்பினி பட்டாளம் ஸ்ரீரங்கப் பட்டினத்துள் நுழைந்திருக்கும். பிறகு, நாம் போராடி இதனைப் பிடிக்கிறோம் என்பது வேறு விஷயம். ஆனால் அதன் கால தாமதம் எங்கு கொண்டு போய் நிறுத்துமோ என்பதுதான் பயங்கரமான விஷயம்! சென்னைப் பட்டணத்திலிருந்து புறப்பட்ட கும்பினி ராணுவம் ராயவேலூரிலேயே தங்கி விட்ட...''

திப்பு சுல்தான் நாவு தடைப்படுகிறது. கண்கள் எதையோ கவனித்து நிலைக் குத்தி நிற்கின்றன. அவற்றில் வேதனையின் வெடிப்பு தெரிகிறது, சோகத்தின் புழுதி கிளம்புகிறது...

''பசவராஜ்...''

அந்தப் பிராந்தியமே அதிருகிற மாதிரி அலறுகிறான், நவாப் திப்புசுல்தான்.

எதிரே பலர் பசவராஜைப் பரிதாபமாகச் சுமந்து வருகிறார்கள்...

உடல் முழுதும் ரத்தத்தால் அபிஷேகம் செய்த மாதிரி, காணப்பட்ட பசவராஜின், மார்பில், பல விழுப்புண் துவாரங்கள், அவற்றில் பீறிட்ட ரத்தப் பெருக்கு...

பசவராஜைக் கீழே கிடத்துகிறார்கள். போரில் ஏற்பட்ட படுகாயங்கள், வீரத்தில் மலர்ந்த பன்னீர் மலர்கள், அக்னிப் பூக்கள்!...

இன்னும் உயிர் இருக்கிறது.

''உடனடியாக லால் மகாலுக்குக் கொண்டு சென்று மருத்துவம் பாருங்கள்.''



இந்த உலகமே பிரளயத்தால் மூழ்குண்டது போலக் கதறுகிறான் திப்புசுல்தான்.

பசவராஜை லால்மகாலுக்குக் கொண்டு போய்க் கூடத்தில் கிடத்துகிறார்கள்.

அரண்மனை மருத்துவர் இமாம் பக்ஷி குலாம் அகமது, நிரம்பவும் சிரத்தை எடுத்துக் கவனிக்கிறார்.

பசவராஜ் மூர்ச்சை தெளிந்து, பிரகாசமாக முறுவலிக்கிறான். தனது நண்பன் திப்புசுல்தான் முகத்தில் அல்லாஹ்வின் கருணை மிக்க பிரகாசம் பிரவையிட்டிருப்பது அவனுக்கு மட்டும் புலனாகிறது போலும்! அருகே அழைக்கிறான்.

''குமார சுல்தான்! எனது சகோதரி ரங்கநாயகியை நான் ரொம்பவும் பாதுகாவலுடன் ஸ்ரீரங்க நாதரிடம் ஒப்படைத்திருக்கிறேன்! இப்போது நான் உடனடியாக எனது அன்னையாரையும், மஞ்சுளாவையும் பார்க்க வேண்டும். ஏற்பாடு செய்வீர்களா?''

பசவராஜின் குரலில் பலவீனம் பரவுகிறது. பசவராஜின் அன்னை கங்கம்மாளை உடனடியாக அழைத்து வருமாறு ஆளையனுப்பி வைக்கிறான் திப்புசுல்தான்.

''நண்பா! என்னை விட்டுப் பிரிந்து போய் விடாதே! எனக்கு மீளாத சோகத்தையுண்டு பண்ணி விடாதே! நீ எப்படியும் பிழைப்பாய்! என் பொருட்டு — இந்த மண்பொருட்டு — தேசிய உணர்வின் கண் பொருட்டு— நீ செய்த உதவியைச் சரித்திரம் மறக்காது. உனக்கும் எனது காதலுக்கும் முடிச்சிட்டுத் துரோகம் விளைவித்தவர்கள் யார்? இதுவரை எங்கிருந்தீர்கள்?''

திப்புவின் இந்தப் பதைப்பை நோக்கிய பசவராஜ், வெறுமையுடன் சிரித்து, ''எல்லா விஷயங்களையும் எனது சகோதரியைக் கேளுங்கள், குமார சுல்தான்! இப்போது எனக்குத் தேவை மஞ்சுளா தேவி!'' என்றான்.

அடுத்து கொஞ்சமும் தாமதியாத திப்புசுல்தான், எழுந்து, ஜனானாவை நோக்கி ஓடுகிறான்.

ஜனானாவின் வாசலில் கவலையுடன் வந்து கொண்டிருந்த அன்னை பெரிய சுல்தானா பேகத்தையும், மற்றும் சுல்தானாக்களையும் கூடக் கவனியாத திப்புசுல்தான், விரைந்து சென்று கொண்டிருக்கிறான்.

எந்த நிமிஷத்திலும் தன்னைத் திப்பு சுல்தான் வந்து அழைத்துச் செல்வார் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்த மஞ்சுளா தேவி, திப்புவைக் கண்டதும், முறுவலித்த முகத்துடன்,'' எனது வாழ்த்துக்கள் அன்பரே!'' என்றாள்.

ஓ... தனது வெற்றியைக் குறித்து இவள் வாழ்த்துகிறாள்; இவளது சோகத்தைக் குறித்து நான் என்ன சமாதானம் கூறப் போகிறேன்?

''மஞ்சு! என்னுடன் புறப்படம்மா! பசவராஜ் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறான்!''

இதற்கு மேல் வேறு விதமாகச் சொல்ல அவனால் முடியவில்லை; தெரியவில்லை.

மஞ்சுளா தேவி, பெரிதான மகிழ்ச்சியுடன் திப்புசுல்தானைப் பின்தொடர்ந்தாள்.

இருவரும் ஓட்டமும் நடையுமாக லால் மகால் கூடத்தை அடைகின்றனர்.

அங்கே...

பசவராஜ் என்கிற ஒரு மகாத்மா — மகோன்னத நண்பன், தனது உடலை லால் மகாலில் விட்டுவிட்டு, வீரசொர்க்கம் நோக்கிப் பயணமாகிப் பல நிமிஷங்கள் பறந்து விட்டன.

''ஓ... பசவராஜ்!''

லால்மகாலே கிடுகிடுக்கிறது.

மீண்டும் மீண்டும் ஆவேசம் கண்ட வெறியுணர்வுடன் கத்துகிறான் திப்புசுல்தான். அவனது கண்கள் இரண்டாம் முறையாகக் குளமாகி வழிகின்றன...

மஞ்சுளா தேவி தலையில் ஓங்கி ஓங்கி அறைந்து கொள்கிறாள். ''உயிருடன் அழைத்து வருவேன் என்று சொல்லிச் சென்று பிணமாக எடுத்து வந்திருக்கிறீர்களே!'' என்று கூறித் தலையைத் தரையில் இடித்துக் கொள்கிறாள். அவளுக்கு யாரே சமாதானம் கூற முடியும்?

இதற்குள் வந்த அன்னை கங்கம்மாள் மகனை இழந்த மாளாத் துயரில் இதயம் வெடிக்கக் கதறுகிறாள்...


ஒருபுறம்...

அங்கே ஹைதர் அலி...

மறுபுறம்...



எதிர்காலச் செல்வங்கள்



என் மூன்றாவது பிள்ளை நல்ல புத்திசாலி. ஆனால் ஒருமுறை ஒரு பாடத்தில் 90 சதவிகித மார்க் வாங்குவான். இன்னொரு முறை 10 சதவிகித மார்க் வாங்குவான். எனக்குத் தெரிந்த முறைகளையெல்லாம் நான் கையாண்டு பார்த்தேன் பலன் ஒன்றும் இல்லை! அப்போது கோகுலம் வந்து கொண்டிருந்தது. அதை மட்டும் அவன்தான் முதலில் படிப்பான். எனக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. "யார் நம் வீட்டில் இனிமேல் எல்லாப் பாடங்களிலும் — பஸ்ட் மார்க் வாங்குகிறார்களோ அவர்கள்தான் முதலில் கோகுலம் படிக்கலாம்" என்று நிபந்தனை விதித்தேன். முதலில் கொஞ்சநாள் அழுது பார்த்தான். நான் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டேன். கொஞ்ச நாளில் என் முயற்சி பயனளித்தது. அதிலும் சிறப்பாகத் தமிழில் நல்ல தேர்ச்சி பெற்று விட்டான். ஆனால் கோகுலம் நின்று விட்டதில் அவனுக்கு ரொம்ப வருத்தம்.

- எஸ். சீதாலக்ஷ்மி

புடன் தன்னை உணர்ந்து, பிறகு தன்னையே மறந்து விட்ட மஞ்சுளாதேவி ஓடோடிச்சென்று ஓங்கிச் சுடர்விட்டெரியும் சிதையில் தாவிக் குதித்து நெருப்புடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்ட காட்சி...

ஓ... எல்லோரையுமே மெய் சிலிர்க்கச் செய்து, 'கோ' வென்று கூச்சலிட வைத்து விடுகிறது!

பின் தொடர்ந்து ஓடிய இப்புவால் அவளைத் தடுத்து நிறுத்த முடியாது போய் விட்ட அவலநிலை...

இங்கே ஒரு சோகப் படலம்...

மூன்றாவதாக இன்னுமொன்று காத்திருக்கிறதே...

அன்றைய மாலைப்பொழுதில்...

பசவராஜின் சடலத்தை ராஜ மரியாதையுடன் ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு எடுத்துச் செல்கிறார்கள்...

ஸ்ரீரங்கப் பட்டினமே திரண்டு வந்து பார்வையிட்டுக் கண்ணீர்க் கடலில் ஆழ்ந்து தவிக்கிறது...

பக்கத்திலிருந்த திவான் பூரணய்யாவை நோக்கிய இப்புகல்தான், "திவானய்யா! பசவராஜைக் கடைசி முறையாகப் பார்க்க ரங்கநாயகியை அழைத்து வரச் சொன்னேனே... ஏற்பாடு செய்தீர்களா?" என்று குரல் தழுதழுக்கக் கேட்கிறான்...

திவான் பூரணய்யா என்ன சொல்வது என்று புரியாது விழித்தாலும், நடந்ததைச் சொல்லக் கடமைப் பட்டவரே போன்று, பதில் சொன்னார்: "மகா கல்தான்! நானே சென்று ரங்கநாயகியை அழைத்தேன்: பசவராஜ் வந்து அழைக்காமல் கோயிலை விட்டுத் தாண்ட முடியாது என்று ரங்கநாதர் பேரில் சத்தியம் செய்திருக்கிறார்களாம்!"

முதல் முறையாக அர்த்த புஷ்டியுடன் திவான் பூரணய்யா, 'மகாகல்தான்' என்றழைத்ததுகூடத் இப்புவின் காதுகளில் ஏறவில்லை. சத்தியம் செய்தாளா? பசவராஜ் தான் இறந்து விட்டானே! அவன் எப்படிப் போய் அழைக்க முடியும்!

சிதைக்குத் தீ மூட்டுகிறார்கள்...

கூடியிருந்த மக்கள் தங்கள் வருத்தம் தாளாது, ஓர் உண்மையான தியாகியின் மறைவு நினைத்து அழுகின்றனர். இப்புகல்தான் அந்த நெருப்பு ஜுவாலையை நோக்கிக் குழந்தை போலக் கேவிக் கேவி அழுகிறான்...

கங்கம்மாள் தரையில் புரண்டு "மகனே! மகனே!" என்று கதறுகிறாள்.

இந்த நேரத்தில்...

யாருமே கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை...

வாழ்வின் முடிவை உணர்ச்சிகளில் கரைய விட்டவளே போன்ற தீர்க்கமான சிலிர்ப்

ஆ! இப்படியும் ஒரு காதலா?

இப்படியும் ஒரு காவியமா?

அவன் இப்போது அழவில்லை, கேவவில்லை, மலைத்துச் சிலிர்த்து விடை புரியாத புதிருள் புகுந்து வெளிவர முடியாது தவிக்கிறான்...

பசவராஜ் எரிகிற நெருப்பினூடே தானும் எரிந்து காதலின் பரிசுத்தமான அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து சென்று விட்டாள், காதலின் மகத்துவத்துக்காகவே என்றோ, எங்கோ, ஒருமுறை பிறக்கும் அமரகாதலி — மஞ்சுளாதேவி!...

நண்பனை இழந்த இதய நடுக்கத்துடன் காணப்பட்ட இப்புகல்தானைத் திவான் பூரணய்யா தம்மாலான மட்டும் தேற்றுகிறார். மகா தந்தையை இழந்தவன். மகா நண்பனை இழந்தவன். அவனைத் தேற்ற யாரால் முடியும்? ரங்க நாயகியால் தான் முடியும்!

ஸ்ரீரங்கநாதர் கோயிலில் ரங்கநாயகியைப் பார்ப்பதற்கென்றே பலரும் சூழ்ந்து காணப்படுகிறார்கள். இப்போது அவள் பலருக்கு மகத்துவம் வாய்ந்த ஸ்ரீரங்கப்பட்டினத்துக் கதாநாயகி!

சேனைப் பரிவாரங்களுடன் ராஜ மரியாதையுடன் ரங்கநாயகியை லால்மகாலுக்கு அழைத்துச் செல்லத் இப்புகல்தான் வருகிறான் என்கின்ற செய்தியைக் கேள்விப் பட்டுப் புன்முறுவல் பூக்கிறாள் ரங்கநாயகி. அந்த முறுவலில் பசவராஜின் மறைவு வேதனையோடு நெளிகிறது...அவனது தியாகம் சாதனையோடு ஒளிர்கிறது...

அவன் எடுத்துக் கொண்ட முயற்சி, அவளைப் பாதுகாத்த விதங்கள், அவனது கரங்கள் சகோதரப் பாசமுடன் என்றாலும் சபதத்துக்கு மீறித் தன் மீது பட்டுவிட்ட — படும்படியாக நேரிட்ட சந்தர்ப்பங்கள்...

எல்லாமே அவளது தீட்சண்யமான கண்களில் பிரதிபலிக்கின்றன...

அவள் கோயில் வாசலில் ஒரு சிலை போல் நிற்கிறாள்...

அருகே வந்த நவாப் இப்புகல்தான், நண்பனை இழந்த சோகத்தை ஒரு கண்ணிலும், காதலியைப் பெறமுடிந்த சொர்க்கத்தை

மறு கண்ணீருமாகத் தேக்கி, முகமலராது, முறுவல் அலராது, நேர்ந்து விட்ட மூல காரணம் எதுவென்ற கேள்விக் குதிரையை நெற்றியிலே ஓட்டிக் கொண்டு, ''ரங்கநாயகி...!'' என்று அழைக்கிறான். ஸ்ரீரங்கப் பட்டினத்து மகாகல்தான் — நவாப் திப்புகல்தான்!

அவள் — ரங்கநாயகி, மோகனமாக மென்னகை புரிந்தாலும், அதில் முற்றும் துறந்து விட்ட சோகத்தின் கனம் தெரிகிறது.

எல்லாவற்றுக்குமே யாரும் காரணமல்ல, தானே காரணமாகத் தெரிகிறது...

''ரங்கநாயகி!''

''ம்ம்!''

''பசவராஜ் அமரத்துவம் அடைந்து விட்டான்!''

''தெரியும்.''

''ஆம் அவனுடைய அந்த வீரக்கதை உனக்குத் தானே முழுமையாகத் தெரியும்; நானும் அறியலாமா?''

''அவசியமில்லை.''

''அவசியமில்லையா? உங்கள் இருவருக்கும் இந்த நிலை வர யார் காரணம்? என்ன காரணம் என்பதையறிய நான் துடிக்கிறேன்.''

''யாருமே காரணமில்லை. எனது விதி! இதற்குமேல் எதையும் கேட்க வேண்டாம்.''

''ரங்கநாயகி! எல்லாவற்றையும் பிறகு பேசிக் கொள்ளலாம். புறப்படு.''

''எங்கே கல்தான்?''

''எனது அரண்மனைக்கு!''

''எனக்கு இந்த ஸ்ரீரங்கநாதர் ஆலயந் தான் அரண்மனை!''

''ரங்கநாயகி!''

அதிர்ந்து போகிறான் திப்புகல்தான்.

''நான் சொல்வது அதிர்ச்சிதரத் தக்கது தான்! எனது சத்தியம் அப்படி; சபதம் அப்படி!''

''சத்தியமாவது! சபதமாவது! புறப்படு ரங்கநாயகி!''

''மன்னிக்கவும் மகாகல்தான்! உங்கள் மீதுள்ள அபார அன்பின் காரணமாகவும், தனது விதியின் ரகசியத்தை உணராமலும், 'நான் வந்து அழைக்காமல் வேறு யார் வந்து அழைத்தாலும் இந்த ஆலயத்துக் கோபுர வாசலைத் தாண்டக் கூடாது' என்று ஸ்ரீரங்கநாதர் பேரில் சத்தியம் வாங்கிக் கொண்டார் உங்கள் நண்பர். காரணம் என்னை அவ்வாறு பாதுகாத்து உங்களிடம் ஒப்படைப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார். பாவம், தாமே திரும்ப மாட்டோம் என்கிற விதியின் உடன்படிக்கையை உணராமல் போய் விட்டார்! உணர முடியாதே! உணர்ந்திருந்தால் நான்தான் உங்களைக் காதலித்து இருப்பேனா? இந்த மாதிரி அசிங்கமான அவலங்களை அனுபவித்திருப்பேனா?''

ரங்கநாயகியின் குரலில் சோகத்தின் சாயல் படிந்திருக்கிறது. அவள் விக்கினாள். பின்னர் விசும்பிக் கொண்டே இவ்வாறு சொல்லி முடித்தாள்.

சுற்றியிருந்த அனைவருமே சிலையனைய நிற்கிறார்கள்...

நவாப் திப்புகல்தான் என்ன சொல்வதென்றே புரியாது விழிக்கிறான்...

''பசவராஜ் இறந்து விட்டதால் நீ செய்த சத்தியம் இப்போது உன்னைக் கட்டுப் படுத்தாது. புறப்படு ரங்கநாயகி!''

எதிர்காலச் செல்வங்கள்

என் தமக்கைக்கு இரட்டைக் குழந்தைகள். ஓர் ஆணும், ஒரு பெண்ணும். தற்போது அவர்கள் வயது ஐந்து. சுமார் ஒன்றரை வயதிலிருந்தே இருவரும் தெளிவாகவும் திருத்தமாகவும் பேசுவார்கள். இரண்டு வயதிலிருந்து சிறுசிறு சுலோகங்களும், பாடல்களும் அறிந்திருந்தார்கள்.

இரண்டு வருடங்களுக்கு முன் ஒருநாள் ஒரு கோவிலில் என் தாயாரும், மற்றும் சில பெண்களும் காமாக்ஷி ஸ்தோத்திரம் பாடச் சென்றிருந்தனர். தாயாருடன் என் அக்காவின் மகனும் சென்றிருந்தான். அவர்களுக்கு நடுவில் ஒரு வரி மறந்து விட்டதனால் ஓரிரு நிமிடம் பாடுவது தடைப்பட்டது. கண்ணை மூடிக் கொண்டு பாடிக் கொண்டிருந்த காரணத்தால் அக்காவின் மகனுக்குப் பாட்டு தடைப்பட்ட காரணம் தெரியாது. அவர்கள் நிறுத்திய போதும் அவன் மட்டும் அடி பிறழாமல் தொடர்ந்து பாடிக் கொண்டிருந்தான். இதைக் கேட்ட அனைவருக்கும் வியப்புத் தோன்றியதில் புதுமை ஏதும் இல்லையே! என் தாயாருக்கே அவன் கோவிலில் பாடிய பொழுதுதான், நான் ஸ்தோத்திரம் சொல்லும் போது கூர்ந்து கவனித்திருக்கிறான் என்று தெரிய வந்தது.



இதே போல் என் அக்காவின் மகள், எங்கள் வீட்டிற்கு வந்திருந்த போது, என் தாயார் 'சௌந்தர்யலஹரி' கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அம்மா திரும்பத் திரும்ப ஒரே அடியையே பாடுவதைக் கேள்வியுற்ற அவள், என் தாயாரிடம், ''ஏன் அம்மா, மறந்து விட்டீர்களா?'' என்று கேட்டுக் கொண்டே அடுத்த அடியை நினைவு படுத்தினாள். அதைக்கேட்ட எங்கள் எல்லோருக்கும் ஒரே வியப்பு. ஒரு மூன்று வயதுக் குழந்தை கேள்வி ஞானத்திலேயே இவ்வளவு அழகாக ஸ்தோத்திரம் பாடுகிறதே என்று.

இவ்விரு சம்பவங்களிலும் வியப்பிற்குரிய விஷயம் என்னவென்றால், எங்கள் வீட்டிற்கு அக்காவோடு அவர்களிருவரும் வரும்பொழுது ஓரிருமுறை என் தாயார் பாடுவதைக் கேள்வியுற்றது மட்டுமே; அதை நினைவில் வைத்துக் கொண்டு மறந்த அடியை நினைவு படுத்தி அடி பிறழாமல் பாடியது எங்கள் அனைவரையும் வியப்படையச் செய்தது.

விஜயா இலக்குமி.

எதிர்காலச் செல்வங்கள்



ப்ரியாவிற்கு இரண்டு வயதாகிறது. சொல்வதைப் புரிந்து கொள்ளும் கட்டிப் பெண்.

பொங்கலுக்குப் புதியதாக வாங்கிய கவுனைப் போட்டுக் கொண்டு என்னிடம் காட்டினாள். அப்போது நான் அவளிடம் ''எந்தப் புதுப் பொருளையும் ஸ்வாமி முன் வைத்து விட்டுப் பிறகு எடுத்து அணிய வேண்டும்'' என்று சொன்னேன்.

குழந்தை பலமாகத் தலை ஆட்டினாள்.

மறுநாள் ஸ்வாமி மேடையில் தாம்பூலத் தட்டில் வைக்கப் பட்டிருந்த பொருளைப் பார்த்ததும் திடுக்கிட்டேன்.

''சித்தி, நீதானே சொன்னே... முதல்லே உம் மாச்சிக்குப் புதுசு எல்லாம் காட்டணும்னு'' என்றாள் அருகில் வந்த என் அக்கா மகள் ப்ரியாக்குட்டி.

என்னைப் பார்த்துக் கேலியாய்ச் சிரித்தது தட்டில் இருந்த அந்த ஒரு ஜோடி செருப்பு! எஸ். கீதா.

''கல்தான்! பசவராஜ் அண்ணன் இறந்து விட்டார்! ஆனால் ஸ்ரீரங்கநாத அண்ணல் நித்திரை தான் செய்கிறார், இறக்கவில்லை; இறக்கவும் மாட்டார்! நான் அளித்த சத்தியம் மட்டும் காரணமில்லை. என்னுள், ஒரு சபதமும் எடுத்துக் கொண்டேன். அதனால்தான் அந்தச் சத்தியத்துக்கே இணங்கினேன் என்பதையும் இப்போது தான் எண்ணிப் பார்க்க முடிகிறது. நீங்கள் எப்படியும் சூழ்ச்சிக்காரர்களை அடக்க வேலையோடு வந்து சேர வேண்டும். இந்த மண்ணின் தேசிய கீதம் மடிந்துவிடக் கூடாது! மகாகல்தான் ஹைதர் அலியின் சுதந்திர ராஜ கர்ஜனை இந்தத் தேசம் முழுவதும் பரவி, ஜயப்பதாகை நிறுவி, அந்நியன் ஒழிந்து, அடிமைத் தளை நீங்கி, அவலம் மறைந்து, எங்கும் சுபிட்சம், எதிலும் சுபிட்சமாக வேண்டும்! எனவே இந்த உள்நாட்டுக் குழப்பம் நீங்கி, உங்கள் தம்பி வீழ்ந்து, நீங்கள் அரியணையில் எந்தவிதப் பயங்கரத் தாக்குதல்களுக்கும் ஆளாகாமல் அமருவீர்களேயானால் நான் எனது காதலைத் தியாகம் செய்துவிடுவதாக ஸ்ரீரங்கநாதரிடம் சபதப் பிரார்த்தனை விடுத்துக் கொண்டேன். எனது பிரார்த்தனை வீண் போகவில்லை! மகாகல்தான் இப்புகல்தான் என்கிற ராஜப் பிரகடனம் இன்றிரவு பிறக்கப் போகிறதே... அதைவிடப் பெருமை எனது காதலில் இருப்பதாகத் தெரியவில்லை. தயவு செய்து மேலும் வற்புறுத்தாமல் சென்று வாருங்கள்! இந்த ரங்கநாயகியை என்றுமே நீங்கள் தரிசிக்கலாம், இந்த ரங்கநாயகியும் என்றுமே தங்களைத் தரிசிப்பாள். நாமிருவருமே பரிசுத்தத்தைத் தரிசிப்போம்! சென்று வாருங்கள்...''

''ரங்கநாயகி! நான் சொல்வதைக் கேள்! நீ இதனை...''

''தயவுசெய்து மன்னியுங்கள் மகாகல்தான் நவாப் பகதூர்... நமது காதல் அடுத்த ஜன்மத்தில் நிறைவேறுமாக! போய் வாருங்கள்.''

சில நிமிஷங்கள் வரை தரையைப் பார்ப்பதும், ரங்கநாயகியை நோக்குவதுமாக இருந்த இப்புகல்தானின் கண்களில் நீர் எவ்வளவு நேரம்தான் தாரையிடுமோ...

அவன் ஒன்றையும் அதற்குமேல் பேசிக் கொள்ளாது திரும்புகிறான்.

அவனது மனத்தே வேதனைகள் எல்லையற்றுப் பொங்கிப் பிரவகிக்கின்றன.

பரிவாரங்கள் பின்தொடரக் குதிரை மீது ஆரோகணித்து வால்மகால் நோக்கி ஒரு துன்பியலின் சித்திரமாய்ச் செல்கிறான் நவாப் இப்புகல்தான்...

டாங், டாங், டாங், டாங்...

ஸ்ரீரங்கநாதம் சுநாதமாக ஒலிக்கிறது...

பெருமானுக்கு அந்தி காலப்பூஜை நடைபெறுகிறது...

கோயில் மணியை அசைத்து அடிப்பவள் ரங்கநாயகிதான்....

அவளது கண்களில் நீர் தாரை தாரையாகக் கொட்டுகிறது...

ஸ்ரீரங்கநாதத்தைச் செவிமடுத்து ஒரு கணம் நின்று திரும்பிப் பார்க்கிறான், மகாகல்தான் இப்புகல்தான் நவாப்கான்...

ஓ... பழைய நினைவுகள்...


இந்த மணியோசை என்றைக்கும் கேட்கும்...

இந்த மணியோசையை அவள் என்றைக்கும் எழுப்புவாள்...


இதன் மூலம் இப்புகல்தானின் வருங்காலத்தையே நாத மயமாக்க வைராக்கியம் பூண்டுவிடுகிறாள், ரங்கநாயகி...

பின்னாளில் பரந்து விரிந்து ஒரு மாமாங்க காலத்துக்குச் செல்லவிருக்கிற மாவீர திலகம் இப்புகல்தானுடைய வீரமும் சோகமும் நிறைந்த சரித்திரத்துக்கு, இந்தக் கோவில் மணி ஒருசேகரம் போல் — ஒரு மகுடம் போல் ஒலித்து எண் திசையிலும் புகழ் மணம் பரப்பப் போகிறது!

டாங், டாங், டாங், டாங், டாங்... !



கூடைப்பந்தாட்டத்தில் கூடைப்புகழ்



வேலூர் கோட்டைக்கு வெளியே அழகிய குழந்தைகள் பூங்கா. வ. வெ. ரா. தாத்தா பெயரைத் தாங்கிய பூங்காவில் இளம் கூடைப் பந்தாட்டக் கலைஞர்கள் 'மினி' ரயிலில் வந்திறங்கினார்கள்! அவர்களைப் போலீஸ் பாண்ட் 'மினி' கூடைப் பந்தாட்ட மைதானத்துக்கு இசையுடன் அழைத்து வருகிறது. சர்வதேசக் குழந்தைகள் ஆண்டில் முதல் தடவையாகத் தமிழகக் கூடைப் பந்தாட்டக் கழகம் மினி கூடைப் பந்தாட்டப் போட்டியைச் சிறுவர்களுக்காக நடத்தியது! பல்வேறு மாவட்டங்களிலிருந்து சிறார்கள் பெருமிதத்தோடு வந்து ஆடினர்.

சின்னஞ்சிறுவர்கள் ஓடிப் பாய்ந்து பந்தைக் கூடையில் போடும் அழகைத் திரளான மக்கள் கண்டு ரசித்தனர். வட ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் பழனூர் இவ்விளையும் பயிர்களுக்கு உற்சாகமூட்டும் விதத்தில் தம் மாளிகையில் விருந்து கொடுத்து உபசரித்தார்!

இறுதி ஆட்டத்தில் சென்னை மாவட்ட சிறுவர்களும் சேலம் மாவட்டச் சிறுவர்களும் ஆடினர். சென்னைக் குழுவில் எல்லோருமே 'குள்ளமானவர்கள். சேலம் ஆட்டக்காரர்கள் உயரமானவர்கள். இச்சிறுவர்கள் பன்னிரண்டு வயதுக்கு உட்பட்டவர்கள்தானா என்பதை உறுதிப் படுத்திக்கொள்ள வேலூர் கிறிஸ்துவ வைத்தியக் கல்லூரி ஆஸ்பத்திரி டாக்டர் புளிமூட் 'கடுமையான பரீட்சை' நடத்தியிருக்கிறார்! இவரது பரீட்சையில் ஒன்றிரண்டு உயரமான ஆட்டக்காரர்கள் எப்படியோ தேறி விட்டார்கள்! இதைப் பற்றிச் 'சலசலப்பு' எழுந்தாலும், சென்னை மாவட்டக் கூடைப் பந்தாட்டக் குழுக் 'குள்ளர்கள்' பாய்ந்தோடி வெற்றியைச் சேலத்திடமிருந்து பறித்துக் கொண்டார்கள்! அசகாய சூரர்கள் தான்! வெற்றி பெற்ற சென்னை மாவட்டக் குழு 36–28 ஸ்கோரில் சாம்பியன் பட்டத்தைப் பெற்றது!

வெற்றிவாகை சூடிய சென்னை மாவட்ட காப்டன் ஸ்ரீதர், ''எங்க 'கோச்' சுப்பராமன் எங்களுக்குச் சிறப்பாகப் பயிற்சி அளித்தார். நாங்க இதுவரை கூடைப் பந்தாட்ட மைதானத்திலே ஆடிப் பயிற்சி பெற்றவங்க. 'மினி' கூடைப் பந்தாட்ட மைதானத்திலே ஆடறது. இதுதான் முதல் தடவை. நாங்க அதிக எடையுள்ள பந்தை வைத்து ஆடப் பயிற்சி செய்தவங்க. இந்த மினி பந்து எடை குறைவு! அதனாலே கூடைக்கு ஷூட் பண்ணறது கஷ்டமாயிருந்தது! ஆனாலும் சமாளிச்சுட்டோம்'' என்று பெருமிதத்துடன் சொன்னான்!

சென்னை மாவட்டக் குழுவில் ரசிகர்களைக் கவர்ந்த பாஸ்கர், சுரேஷ் இருவரும் கோரஸாக, ''நாங்க குள்ளக் கத்தரிக்காயா ஓடறதைப் பார்த்துக் கூடியிருந்த அத்தனை பேரும் எங்களைக் கைதட்டி உற்சாகமூட்டினது எங்களுக்குத் தெம்பு கொடுத்தது!'' என்றனர்!

ரன்னர் பதவி பெற்ற சேலம் குழு காப்டன் பி. கிருஷ்ணன், பாரதி வித்யாலயா ஹையர் செகண்டரி ஸ்கூலில் ஏழாம் வகுப்பு படிக்கிறான்.

வேலூரில் வெற்றி பெற்ற இளம் சாம்பியன்கள் - சென்னை மாவட்டக் குழு தன் கோச், நிர்வாகிகளுடன்.



தமிழகக் கூடைப் பந்தாட்டக் கழக உதவித் தலைவர் ஸ்ரீ[illegible]னும், காரியதரிசி வெங்கடராமனும் இந்த 'மினி' கூடைப் பந்தாட்டப் போட்டி வேலூரில் சிறப்பாக நிகழ்வதற்கு வட ஆர்க்காடு மாவட்ட கூடைப் பந்தாட்டக் கழக நிர்வாகிகளோடு பாடுபட்டார்கள். கூடை கூடையாகப் புகழ் சேர்த்துக் கொண்டார்கள்.

— குண்டுமணி



டி.ஜி. எல்லின் போஷாக் வனஸ்பதியும்
சஞ்சீவ் சுத்திகரிக்கப்பட்ட கடலை
எண்ணெயும் உணவுப் பண்டங்களை
மிக்கச் சுவையுள்ளனவாகச் செய்கின்றன.

மற்றும் டி.ஜி.எல். தயாரிக்கும் விகாஸ்,
சாம்ராட் சோப்புகள் உங்கள் துணி
மணிகளை பிரகாசமாய்ப் பளிச்சிடும்
வெண்மையாக்குகின்றன.

மேலும் டி.ஜி.எல் கால்நடைத் தீவனம்
கூடுதல் பால் கொடுக்க கறவை
மாடுகளுக்குச் சிறந்த உணவு.

நுகர்வோர்க்குத் தரமான பொருள்களைத்

தயாரித்துத் தந்து 70 ஆண்டுகளாக
அவர்கள் வாழ்க்கையில் இணைந்து
சேவை செய்து வருகிறது டி.ஜி.எல்.

TGL

டி.ஜி. லக்ஷ்மய்ய செட்டி & ஸன்ஸ்

டி.ஜி.எல். ரோடு, ஆதோனி. 518301


mas H TGL 37

உங்கள் தேவைகளை எங்களது டீலர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்

டீலர்கள் இல்லாத ஊர்களில் டீலர்கள் வரவேற்கப்படுகிறார்கள்



குழந்தைகள் மகாநாடு



அகில இந்தியக் குழந்தைகள் மகாநாடு ஒன்று நடைபெறப் போவதாக நான் முதலில் கேள்விப் பட்டபோது, அதை அவ்வளவாக நம்பவில்லை. இருப்பினும், அது உண்மையாயிருந்தால், அம்மகா நாட்டுக்குக் கட்டாயம் போக வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டேன். ஏனென்றால், குழந்தைகள் என்றால் எனக்கு அதிகப் பிரியம். (எங்களுக்கு அடுத்த வீட்டுக் குழந்தை மட்டும் இதற்கு விலக்கு என்பதை ஒப்புக் கொண்டு விடுகிறேன். தினந்தோறும் சரியாக இரவு ஒரு மணிக்கு இந்தக் குழந்தை கண் விழித்து, தனக்குப் பசியாயிருக்கிற தென்ற விசேஷ சமாசாரத்தை "பா ஆ ஆ ஆ" என்ற சத்தத்தின் மூலம் தெரிவிக்கத் தொடங்கும். அப்போது எங்கள் வீதியில் ஓர் ஈ காக்கை பாக்கியில்லாமல் எல்லாரும் விழித்துக் கொள்வார்கள். அந்த நேரத்தில் ஒரு பெண்ணரசி மட்டும்தான் ஆழ்ந்த நித்திரையில் இருப்பாள். அவள், குழந்தைக் கருகில் படுத்திருக்கும் அதன் தாயார் தான்.) ஆகவே, மகாநாடு உண்மையிலேயே நடைபெறுகிற தென்று அறிந்ததும் குறிப்பிட்ட நேரத்தில் மகாநாட்டுப் பந்தலுக்குச் சென்றேன்.

தலைமைப் பேருரை

மகாநாடு கூடியதும், ஏழு வயதுள்ள ஸ்ரீமான் பி. ஏ. ராகவன் அவர்கள், அக்கிராசன பதவிக்குப் பிரேரேபிக்கப் பட்டு, ஆமோதிக்கப்பட்டு அக்கிராசன பீடத்தில் அமர்ந்தார். சுமார் ஐந்து நிமிஷ நேரம் காது செவிடு படும்படியான கரகோஷம் நடந்தது. ஆரவாரம் அடங்கிய பின்னர், அக்கிராசனர் செய்த தலைமைப் பிரசங்கத்தின் சாராம்சமாவது:

"சகோதரிகளே! சகோதரர்களே! இன்றைய தினம் பாரத நாட்டின் குழந்தைகளாகிய நமக்கு ஒரு புதிய யுகம் பிறந்திருக்கிறது. இத்தகைய குழந்தைகளின் மகாநாடு கூடியிருப்பது இதுதான் முதல் தடவையென்று உங்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. பெரியவர்களுடைய மகாநாடுகளைப் போல நான் என்னுடைய தலைமைப் பேச்சை அதிகமாக வளர்க்கப் போவதில்லை. பேச்சிலே என்ன இருக்கிறது? ஒரு பெப்பர் மிண்டில் உள்ள ருசி பேச்சில் இருக்கிறதா? (சிரிப்பு) ஒரு வெல்லச் சீடையின் ருசியாவது அதில் உண்டா? (சிலர் நாவைச் சப்புக் கொட்டுகின்றனர்.) ஒன்றுமே கிடையாது. மேலும், மகாநாடு முடிந்ததும், நமக்கு முக்கியமான ஒரு காரியம் இருக்கிறது. எல்லாரும் கடற்கரையிலே போய் அங்குள்ள கிளிஞ்சல்களைப் பொறுக்கிக் கடலில் எறிந்து யார் தான் அதிக தூரம் எறிகிறார்களென்று பார்க்க வேண்டும். அவ்வளவு முக்கியமான காரியமிருக்கும் போது நான் நமது மூத்தோர்களைப் போல வெறுமே பேசிக் கொண்டிருக்க விரும்பவில்லை. ("கேளுங்கள், கேளுங்கள்") ஆனால் ஒன்று மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். நாம் இனிமேல் ஒரு நிமிஷ நேரமேனும் இந்தப் பெரியவர்களின் கொடுங்கோன்மையின் கீழ் உயிர் வாழ முடியாது. (கரகோஷம்) நமக்கு விடுதலை வேண்டும்; பூரண சுதந்திரம் வேண்டும். (கரகோஷம்) வேறெதுவும் நமக்கு வேண்டாம். இக்காலத்திலே சில பெரியவர்கள் "பேபி வீக்" என்றும், "சிசு சம்ரக்ஷணை வாரம்" என்றும் ஏற்பாடு செய்கிறார்கள். ("மோசம் மோசம்" என்ற கூக்குரல்) ஆம்; அவையெல்லாம் பெரும் மோசந்தான். நம்மை அடிமைகளாக வைத்து நம் உடம்பை மட்டும் கொழுக்க வைப்பதால், நாம் திருப்தியடைந்து விடுவோமோ? (மாட்டோம், மாட்டோம்) சந்தோஷம். இன்னும் குழந்தைகளாகிய நமக்கு இருக்கும் குறைகள் பல. அவையெல்லாம் இம்மகாநாட்டில் வரப்போகும் தீர்மானங்கள் மூலம் தெரியவரும். ஆகையால், உங்களுக்கெல்லாம் என் மனமார்ந்த வந்தனம் அளித்து, இத்துடன் என் முகவுரையை முடித்துக் கொள்கிறேன்."

முதல் தீர்மானம்

பின்னர், ஐந்து வயதுள்ள ஸ்ரீமதி அலமு அம்மாள் பின் வரும் தீர்மானத்தைப் பிரேரேபணை செய்தாள்.

"பெற்றோர்களுக்குக் குழந்தைகள் நன்றி பாராட்ட வேண்டுமென்னும் கொள்கை முற்றும் நியாய விரோதமான தென்றும், அதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாதென்றும் இந்த மகாநாடு பலமாக வலியுறுத்துகிறது."

மேற்படி தீர்மானத்தின் மீது, ஸ்ரீமதி அலமு அம்மாள் வீரமும் உற்சாகமும் ததும்ப ஆவேசத்துடன் பேசியதன் சாரமாவது: —"சகோதரிகளே! இத் தீர்மானத்தைப் பற்றி உண்மையில் எதுவும் பேசுவதற்கு அவசியமில்லை. அது அவ்வளவு தெளிவாயிருக்கிறது. ஆனால்,

எதிர்காலச் செல்வங்கள்

எங்கள் பெண் குழந்தை பெயர் புஷ்பா. வயது நான்கு ஆகிறது. கடந்த வாரம் எங்கள் உறவினருக்கு, நானும் என் மனைவியும் எங்கள் திருமணப் போட்டோக்களைக் காண்பித்துக் கொண்டு இருந்தோம். அதில் உள்ள உறவினர்களையெல்லாம் சுட்டிக் காட்டிக் கொண்டே வந்தோம். பக்கத்தில் அமர்ந்திருந்த எங்கள் பெண் "எனக்குத் தெரியாமல் திருமணம் போட்டோக்களை உறவினர்களுடன் சேர்ந்து எடுத்துக் கொண்டீர்கள். என்னையும் அழைத்திருந்தால் இந்தத் திருமணத்துக்கு நானும் வந்திருப்பேன் அல்லவா!" என்னை ஏன் அழைத்துச் செல்லவில்லை. இனிமேல் நான் உங்களுடன் பேச மாட்டேன். உங்களுடன் டூ" என்றாள். சிரித்துச் சிரித்து எங்களுக்கு வயிறு புண்ணாகி விட்டது.

- நாகசுப்பிரமணியன்.



இந்த உலகம் தோன்றிய காலந்தொட்டு, பெற்றோர்களுக்குக் குழந்தைகள் நன்றி பாராட்ட வேண்டுமென்னும் பொய்க் கொள்கையைப் பெற்றோர்கள் பரப்பி வந்திருக்கிறார்கள். இதை நம்பி நம்பி நமது உள்ளங்களெல்லாம் ஒருவகை மாயையில் கட்டுப்பட்டுக் கிடக்கின்றன. இந்த மாயையை நாம் உடைத்துத் தகர்த்து எறிய வேண்டும். (கரகோஷம்) அன்பர்களே! யோசித்துப் பாருங்கள். இரக்கம், அனுதாபம் முதலிய வற்றைச் சிறிது நேரம் தூர ஒதுக்கி விட்டு, அறிவை மட்டும் உபயோகித்து ஆலோசனை செய்யுங்கள். நாம் எதற்காகப் பெற்றோர்களிடம் நன்றி பாராட்ட வேண்டும்? எந்த விதத்திலே நாம் அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம்? சாதாரணமாக, தாய் தந்தையர்கள் என்ன சொல்கிறார்களென்றால், "நாங்கள் உன்னைப் பெற்றோம், வளர்த்தோம், பால் புகட்டினோம். நல்ல ஆடையாபரணங்கள் அணிவித்தோம். அறுசுவையுண்டி அளித்தோம். ஆகையால் நீ எங்களிடம் நன்றி பாராட்ட வேண்டும். அதற்குப் பதிலாக நீ விஷமம் செய்கிறாய். கொஞ்சமாவது உனக்கு நன்றி கிடையாது" என்று இப்படிச் சொல்கிறார்கள். இதில் ஓர் அணுவளவாவது நிஜக் கலப்பு இருக்கிறதா, பாருங்கள். முதலில், என் பெற்றோர் என்னை எதற்காகப் பெற்றார்கள்? (கரகோஷம்) என்னைப் பெறுவதற்கு முன் என்னைக் கலந்து கொண்டார்களா? என் சம்மதத்தைக் கேட்டார்களா? "சபாஷ் சபாஷ்") என்னை எப்படியாவது உங்கள் குழந்தையாக ஏற்றுக் கொள்ளத் திருவுளம் பற்றுங்கள் என்று நான் அவர்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டேனா? (சிரிப்பு) அன்பர்களே! நீங்கள் சிரிக்கிறீர்கள். இந்த அநீதியை எண்ணும்போது என் நெஞ்சம் கொதிக்கிறது. உண்மையில் என் தாய் தந்தையர் என்னைப் பெற்ற போது என் விருப்பத்தைச் சிறிதாவது கேட்கவில்லை. என்னைக் கேட்டிருந்தால், குழந்தைகளை அடிமையாக வைத்திருக்கும் இந்தப் பாழும் உலகத்தில் பிறக்க, நான் ஒருநாளும் சம்மதித்திருக்க மாட்டேன். பிறகு, என் பெற்றோர் எனக்குச் சாப்பாடு போடுவதற்காக நன்றி பாராட்ட வேண்டுமாம். இதைவிட அக்கிரமம் வேறில்லை. என்னுடைய சம்மதத்தைக் கேளாமல் என்னைப் பெற்றவர்கள் எனக்குச் சாப்பாடு போடக் கடமைப் பட்டிருக்கிறார்கள். நான் எதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்? உண்மையில், இதுகூட அவர்கள் சுயநலத்துடனேதான் செய்கிறார்கள். நான் வேண்டாமென்றாலும் கேளாமல் தினம் நாலு வேளை சோறு திணித்து ஊட்டுகிறார்களே, அது எதற்காக? சீக்கிரத்தில் நான் வளர்ந்து அம்மாவுக்கு உபகாரமாக வேலை செய்வதற்குத்தான்! ("கேளுங்கள், கேளுங்கள்") நமக்கு ஆடையாபரணங்கள் அணிவிக்கிறார்களாம்! எதற்காக என்று நான் கேட்கிறேன். நம்மைத் திருப்தி செய்வதற்காகவா, தங்களுடைய பணப்பெருமையை வெளிக் காட்டுவதற்காகவா? சகோதரிகளே! சகோதரர்களே! எல்லாம் மோசம், வேஷம். வெகுநாட்களாக நாம் மயக்கத்திலாழ்ந்திருந்தோம். இப்போது விழித்துக் கொண்டு விட்டோம். இனிமேல் ஒரு பெரிய புரட்சி நடத்தி நமது பரிபூரண சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டும். நமது முயற்சிகள் எல்லாவற்றிற்கும் இந்தத் தீர்மானமே அஸ்திவாரம். ஆகையால், இதை ஏக மனத்துடன் நிறைவேற்றி வைக்கும்படி உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்." (பலத்த கரகோஷம்).



இரண்டாவது தீர்மானம்

"பள்ளிக் கூடங்கள் என்பவை குழந்தைக் குலத்தின் பரம விரோதிகளால் ஏற்படுத்தப் பட்ட ஸ்தாபனங்கள் என்றும், அவை குழந்தைகளை மயக்கி ஏமாற்றி அவர்களுடைய சுதந்திரங்கள் எல்லாவற்றையும் பறிப்பதற்காகவே ஏற்பட்டவை என்றும் இந்த மகா நாடு கண்டிப்பாக அபிப்பிராயப்படுகிறது. ஆகையால் மேற்படி பள்ளிக்கூடங்களை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்று இம் மகாநாடு பலமாக வற்புறுத்துகிறது."

மேற்படி தீர்மானத்தை ஆறு வயதுள்ள ஸ்ரீமதி பாலாம்பாள் பிரேரணை செய்து பேசியதாவது: — "ஓ! என் அருமைச் சகோதரிகளே! சகோதரர்களே! தாய் தந்தையர்களின் நன்றி கெட்ட தன்மையை நான் என்னவென்று சொல்வேன்? அதை நினைக்கும் போதே எனக்கு அளவிறந்த துக்கம் உண்டாகிறது. பெற்றோர்களுக்கு நாம் செய்யும் உபகாரங்களைப் பற்றி நான் பெருமையடித்துக் கொள்ளப் போவதில்லை. அவர்கள் மார்பில் கையை வைத்து யோசித்துப் பார்த்தார்களானால் யாருக்கு யாரால் நன்மையென்று தாங்களே தெரிந்து கொள்வார்கள். ஒன்றிரண்டு மட்டும் இங்கே சொல்கிறேன். நான் பிறந்திரா விட்டால், அப்பாவுக்கும் அம்மாவுக்கும் முதலில் பொழுது எப்படிப் போகும்? சமைப்பதும், சாப்பிடுவதும், சண்டை போடுவதும் தவிர வேறு அவர்களுக்கு வேலையிராது. இன்னும் பாருங்கள். அம்மாவுக்காக நான் நாலு வேளை சாப்பிடுகிறேன். அம்மாவுக்காகத் தலைவாரிப் பின்னிக் கொள்கிறேன். அம்மாவுக்காகக் குளிக்கிறேன். அம்மாவுக்காகச் சட்டை போட்டுக் கொள்கிறேன். நகை அணிந்து கொள்கிறேன். அப்புறம் அம்மாவுக்காக விளக்கெண்ணெய் கூடக் குடித்துத் தொலைக்கிறேன். இவ்வளவு உபகாரம் நான் செய்வதற்கு அவர்கள் பிரதி உபகாரம் என்ன செய்கிறார்கள்? பள்ளிக்கூடம் என்னும் சிறைக்கூடத்துக்கு என்னை அனுப்புவதுதான். ("வெட்கம், வெட்கம்") ஆம்: இதைப் போன்ற வெட்கக்கேடு உலகிலே ஒன்றுங் கிடையாது. பள்ளிக் கூடங்களிலே என்ன செய்கிறார்கள்? நம்மையெல்லாம் ஏமாற்றுகிறார்கள். புத்தகத்திலே யானை போட்டு நமக்குக் காட்டுகிறார்கள். புத்தகத்து யானை இங்கே யாருக்கு வேண்டும்? அது நடக்கிறதா? தும்பிக்கையை ஆட்டுகிறதா? வாழைப்பழம் கொடுத்தால் வாங்கித் தின்கிறதா? ஒன்றுமேயில்லை. இது ஏமாற்றமல்லவா? மோசமல்லவா? ("ஆம், ஆம்") ஏன் நமக்கு நிஜ யானையைக் காட்டக் கூடாது? இப்படித்தான் எல்லாம். இது மட்டுமா? புத்தகத்தில் வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் இவை இருந்தன. பார்த்ததும் வாயில் ஜலம் ஊறிற்று. ஆனால், என்ன ஏமாற்றம்? என்ன மோசம் பாருங்கள்! புத்தகத்தில் உள்ள ஒரு கூடை வாழைப்பழம் நிஜவாழைப்பழம் ஒன்றுக்குச் சமானமாகுமா? (கரகோஷம்) அன்பர்களே! இத்தீர்மானத்தைப் பற்றி நான் அதிகம் பேச வேண்டியதில்லை. ஏனென்றால் உங்கள் இயற்கை உணர்வே இதைப் பற்றி உங்களுக்குச் சொல்லும். பள்ளிக் கூடம் என்ற பெயரைக் கேட்டாலே உங்களுக்கு வெறுப்பாயிருக்கிறது. பள்ளிக் கூடத்து அருகில் போனவுடனேயே நடுக்கம் உண்டாகிறது. ஆகையால் இத்தீர்மானத்தை ஏற்றுக் கொள்வீர்களென்று நம்பி என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்."

மூன்றாவது தீர்மானம்

சாப்பிடவும், சாப்பிடாமலிருக்கவும், தூங்கவும், தூங்காமலிருக்கவும், பள்ளிக் கூடம் போகவும், போகாமலிருக்கவும், குளிக்கவும், குளிக்காமலிருக்கவும், இன்னும் இது போன்ற எல்லாக் காரியங்களிலும் குழந்தைக் குலத்துக்குப் பரிபூரண சுதந்திரம் உண்டென்று இந்த மகாநாடு வலியுறுத்துகிறது. சாத்வீகச் சட்டமறுப்பு உள்பட எல்லா முறைகளையும் கையாண்டு மேற்படி சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டுமென்று இம் மாநாடு தீர்மானிக்கிறது.

இத்தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது. வந்தனோபசாரங்கள் கூறியான பின்னர் மிகுந்த உற்சாகத்துக்கிடையே மாநாடு கலைந்தது. சிறுவர்களும், சிறுமியர்களும் கூட்டம் கூட்டமாகக் கடற்கரைக்கு வந்து கிளிஞ்சல் ஓடுகளைப் பொறுக்கி வீசி எறிந்து விளையாடி மகிழ்ந்தார்கள். நானும் கடற்கரையில் அமர்ந்து பகற்கனவு காண்பதை நிறுத்தி, வீடு நோக்கிச் சென்றேன்.

[சுட்டிக்குப் போட்டி என்ற நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரையின் சுருக்கம்: வானதி பதிப்பகம், சென்னை-17]


எதிர்காலச் செல்வங்கள்

எர்ணாகுளத்திலிருக்கிறாள் என தங்கை ஹேமா. அவள் பெண், மைதிலி, வயது மூன்றாகிறது. நல்ல அழகி. பேச்சிலும் படுசுட்டி. மைதிலியை அழைத்துக் கொண்டு சென்னையிலுள்ள தன் தாய் வீட்டுக்கு வந்திருந்தாள் ஹேமா. நாங்கள் எல்லோரும் எக்ஸார்ஸிஸ்ட் படம் பார்க்கச் சென்றோம். கிளம்பும் பொழுது தானும் கூட வருவேன் என ஒரே அடம் பிடித்ததால் வேறு வழியில்லாமல், மைதிலி அங்கு தூங்கி விடுவாள் என நம்பி அழைத்துச் சென்றோம். அவளோ தூங்க மறுத்து விட்டாள். படத்தில் வரும் சத்தம் கேட்டுப் பயப்படப் போகிறாளோ என்று அவள் காதில் பஞ்சு வைத்தோம். பேசாமல் படம் முழுதும் பார்த்து விட்டாள். வீடு திரும்பிய பின் என்னும் தன் குழந்தை மைதிலியுடன் தனியாகப் படுக்கும் என் தங்கை அன்று தனக்குத் தனியாகப் படுக்கப் பயமாக உள்ளது என்றாள். உடனே மைதிலி, "அம்மா! இனிமேல் நீயும் சினிமா பார்க்கும் பொழுது எனக்குக் காதில் பஞ்சு வைத்தது போலவே நீயும் வைத்துக் கொண்டு விடு. அப்பொழுது உனக்கும் பயமே வராது" என்று தைரியம் கூறியதைக் கேட்டு எங்களுக்கெல்லாம் சிரிப்பு வந்து விட்டது.

- வசந்தி ஸ்ரீனிவாசன்.



தியாக வல்லபன்



விக்கிரமன்

அத்தியாயம்

ராஜராஜன் கூறிய ரகசியம்

படைத்தலைவர் பெருமான் நம்பி பல்லவரையர், தான் இரகசியம் என்று கருதியவற்றை அறிந்திருக்கிறார் என்பதறிந்த சோழ சக்கரவர்த்தி இராஜராஜர் முகத்தில் வியப்பின் பிரதிபலிப்பு நிழலாடியது. அவர், நம்பியின் முகத்தையே உற்று நோக்கினார்.

நம்பியின் இதழ்களில் புன்முறுவல் நெளிந்தது. ''ஆம், அரசே! எனக்குத் தெரியும். சோழ நாட்டின் வாரிசு உருவாகி விட்ட செய்தி. ஆனால், அந்தச் செய்தி பரம இரகசியமாகக் கடந்த இரண்டாண்டுகளாகப் பாதுகாக்கப் பட்டிருக்கிறது என்பதுதான் வியப்புக்குரியது. சோழ மன்னருக்குக் குழந்தை பிறந்தது என்றால், நாடே குதூகலமடையும். பட்டி தொட்டி எங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்படும். அதிலும், சோழநாட்டுக்கு வாரிசு ஏற்பட்டு விட்டதால் நாட்டு மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்காமல் என்ன செய்வர். இனிய செய்தியை ஏன், இரகசியமாக்கினீர்கள்?''—நம்பி கேட்டார்.

இராஜராஜன் உடனே மறுமொழி கூறவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தார்.

''ஒருவருமில்லை, அரசே. மனம் விட்டுப் பேசுவதற்காகத்தான் பணிப் பெண்களைக் கூட வெளியே அனுப்பி விட்டேனே. தேவைப்படும் போது திருமந்திர ஓலை நாயகத்தை மட்டும் அழைக்கலாம்'' என்று நம்பி கூறியவுடன் மன்னர் நிமிர்ந்து உட்கார்ந்து ''நம்பி! நல்ல செய்தியை இரகசியமாக வைக்க வேண்டும் என்ற எண்ணமே எனக்குத் தோன்றவில்லை. எனது நான்கு மனைவியருள் ஒருத்தி கருத்தரிக்கிறாள் என்றால் அதைவிட ஆனந்தம் வேறு உண்டா? இரகசியமாக அந்தச் செய்தியைக் காப்பாற்றுவதும் முறையில்லை'' என்று கூறும்போது நம்பி குறுக்கிட்டார்:

''பட்டத்தரசி கருத்தரிக்காமல் மலையமான் மகள் அவனி முழுதுடையாளுக்கு அந்தப் பேறு கிடைத்துவிட்டது தங்களுக்குப் பிடிக்காமல் இருந்திருக்கலாம்... அதனால்...''

இராஜராஜன் பரபரப்புடன், ''அதெல்லாம் தவறான செய்தி, நம்பி. உனக்குத் தெரியாமல் எனக்குப் பிடித்தவர் — பிடிக்காதவர் என்ற பேத உணர்ச்சி இருக்க முடியுமா? மலையமானுக்கும் எனக்கும் சிறிது காலமாக மனவருத்தம் உண்டு. ஆனால் அது மலையமான் மகளிடம் பிரதிபலிக்கவில்லை என்பது உனக்குத் தெரியாதா?'' என்று கூறினார்.

நம்பி குறும்புப் புன்னகை மிளிர, ''அரசே! எனக்கு நன்றாகத் தெரியும். பட்டத்தரசியை விட மலையமான் மகளிடம் தங்களுக்கு அந்தரங்க அன்பு உண்டென்று தெரியும். திருத்தலங்களுக்குச் செல்லும் போது மலையமான் மகளைத்தானே அழைத்துச் செல்வீர்கள். அவர்களிடம் தங்களுக்கு அன்பு அதிகமென்பதும் நானறிவேன்... ஆனால் அவர்கள் சூலுற்ற செய்தியைத் தாங்கள் பரம இரகசியமாக வைத்திருந்ததுதான் அனைவருக்கும் ஆச்சரியமாக இருந்தது....'' என்றார்.

''நம்பி, இதிலென்ன இரகசியம்? பகிரங்கமாக எல்லோரும் அறியவில்லையே தவிர பரவலாக மக்கள் அறிவர். எனக்குக் குழந்தை பிறக்கப் போகிறது என்ற நல்ல செய்தி கிடைத்த உடனேயே எனக்கு இந்த அவனியே அஸ்தமித்தது போலாகி விட்டது. ஒருவருடன் பேசவும் பிடிக்கவில்லை. நான் பழையாறை மாளிகையை விட்டு வெளியே எங்கும் செல்லவில்லை. கங்கை கொண்ட சோழபுரம் சென்று மூன்றாண்டுகள் ஆகி விட்டன. நம்பி, உன் சொந்த ஊருக்கு நீ சென்று மீனாட்சி அம்மனுக்குக் கோயில் கட்டும் பணியில் ஈடுபட்டு விட்டாய். நான் அந்தரங்கத்தை யாரிடம் பகிர்ந்து கொள்வேன்? 'வாரிசு ஏற்பட்டு விட்டது' என்ற இனிய செய்தி எனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. அதுதான் இரகசியம். அது உனக்குத் தெரியுமா நம்பி?'' என்று இராஜராஜன் கேட்டார்.

நம்பியின் எண்ணங்கள் எங்கோ பறந்து சென்று கொண்டிருந்தன. இரண்டாண்டுகள் அரசரின் மௌனம், கங்கை கொண்ட சோழபுரம் பக்கமே செல்லாத நிலை நாட்டில் எத்தகைய மறைமுகக் கிளர்ச்சியை ஏற்படுத்திவிட்டன என்று எண்ணினார்.

மலையமானுடன் இராஜராஜனுக்கு உள்ள மனத்தாங்கல் பெரிதாக வளர்ந்துகொண்டே வந்தது. ஆனால், மலையமானுக்கு ஒரே திருப்தி, கங்கை கொண்ட சோழபுரத்தில் வளரும் தன் பெண் வயிற்றுக் குழந்தைகள் தானே சோழ நாட்டு அரியணை ஏறப் போகின்றன என்பதே. அதனால் பெருமான் நம்பியும், மலையமான் கோபத்தையும் பிணக்கையும் தவிர்க்கவே முயன்று வந்தார்.

ஆனால், கோவிந்தனையும் சிற்றரசர்களையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டு மல்லப்ப தேவன்

சோழ நாட்டின் இளவரசுப் பட்டத்தைத் தனக்கே சூட்டவேண்டும் என்று திட்டமிடு வதுதான் பெருமான் நம்பிக்கு ஏற்றுக்கொள் ளக்கூடியதாக இல்லை. அவனது திட்டங் களை முறியடிக்க நம்பி முயன்று கொண் டிருந்தார். அரசரிடமும் உடனே அச் செய்தியைக் கூறத் துடித்தார். அதைப் பற்றிய சிந்தனையில் இருந்நதால், ''நம்பி, அந்த இரகசியம் என்னவென்று கேட்காமல், ஏதோ சிந்தனையில் இருக்கிறுயே'' என்று இராஜ ராஜன் நம்பியைப் பார்த்துக் கேட்ட பிறகுதான் நம்பி தம் நிலை உணர்ந்தார்.

''உம்...உம்... சோழ நாட்டின் வாரிசாக ஒரே ஒரு குழந்தை பிறக்கக் கூடாதா என்று தவம் செய்து கொண்டிருந்த தங்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தும் தாங்கள் மகிழ்ச்சி அடையவில்லையே ஏன்? அதை என்னல் புரிந்து கொள்ள முடிய வில்லை. தாங்கள்தான் சொல்ல வேண்டும்'' என் ருர் நம்பி. அரசர் நடந்த வற்றைக் கூறக் கூற நம் பிக்கு வியப்பு கூடியது.

தன் அன்புக்கினிய அரசி, மலையமான் மகள் கருத்தரித்திருக்கிறுள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைக் கேசவ சுவாமி யிடம் தெரிவிக்க இராஜ ராஜன் விரைந் தோடினுர். கேசவ சுவாமிகளிடம் இராஜ ராஜன் மதிப்பும் மரியாதையும் மிக்கவர். வட மொழியில் பெரும் புலமை வாய்ந்த கேசவ ஸ்வாமி முக்காலும் உணர்ந்தவர். சோதிடக் கலையில் வல்லவர்.

கேசவ சுவாமி சிறிது நேரம் இராஜ ராஜனை உற்று நோக்கியவாறிருந்தார், பிறகு, ''இராஜ ராஜா, நாம் உடனே ஆயிரத்தளி அரண்மனைக்குச் செல்வோம். அங்கே நான் மாளிகைத் தெய்வமான காளியை வேண்டித் துதிக்கிறேன். காளியின் கருணை எவ்வாறு உள்ளது என்று அறிந்து சொல்கிறேன்'' என்ருர்.

மகிழ்ச்சி என்னும் புரவியில் ஏறிப் பறந்து வந்த இராஜராஜனுக்கு, ஒரு கணம் இக



யத்தை யாரோ பிடித்து அழுத்துவது போல் தோன்றியது. நல்ல செய்தியைச் சொன்னவுடன் கேசவ சுவாமி, ஆனந்தம் மிக அடைந்து ஆசி கூறுவார் என்று எண்ணப் போக, கேசவ சுவாமியின் முகத்தில் சந்தோஷத்தின் அறிகுறியைக் காணவில்லை என்பதைக் கவனித்தார். ஆயிரத்தளி அரண்மனையின் தெற்கு வாயிலில் குடிகொண்டிருக்கும் துர்க்கையின் சந்நிதானத்துக்குக் கேசவ சுவாமியும் இராஜ ராஜனும் வந்து சேர்ந்தனர்.

கேசவ சுவாமி துர்க்கையின் எதிரே தியானத்தில் அமர்ந்தார். நெடு நேரம் நிஷ்டையிலிருந்து தெளிந்த கேசவ சுவாமி, இராஜ ராஜனிடம் குங்குமப் பிரசாதத்தை அளித்து. "இராஜ ராஜா! உனது மகிழ்ச்சியை மாற்றக் கூடிய செய்தியை நான் சொல்ல வேண்டியுள்ளது. நாளை முதல் குழந்தை பிறக்கும் வரையில் அருமை அரசி அவனிமுழுதுடையாளைச் சந்திக்கக் கூடாது. குழந்தை பிறந்த பிறகு மீண்டும் அதன் நட்சத்திரத்தைப் பார்த்து, பின் விளைவுகளைக் கூறுகிறேன்" என்றார்.

இராஜ ராஜன் திடுக்கிட்டான். "அவனி முழுதுடையாளை நான் சந்திக்கக் கூடாதா? அதெப்படி முடியும் சுவாமி? என் அன்புக் கிளியாளை நான் பார்க்காது எப்படி இருப்பது? சோழர் குலத்தை விளங்க வைக்கப் போகும் மாமணியைத் திருவயிறு கொண்டவளை நான் எப்படிப் பார்க்காது இருக்க முடியும்?" என்று கதறினார்.

கேசவசுவாமி அவரைத் தேற்றி, "இராஜ ராஜா, இதெற்கெல்லாம் கலங்கலாமா? ஓராண்டு காலம் ஓடி மறைந்து விடும். இப்போது உன் கால பலன் சரியில்லை. உன் அன்புக்கிளிய அரசியின் நன்மைக்காகத்தான் சொல்கிறேன். அவள் பெற்றுப் பிழைத்து நலமுடன் காலமெல்லாம் வாழ வேண்டுமானால், நீ அவளைப் பார்க்காது தான் இருக்க வேண்டும். இது காளியின் கட்டளை" என்றார்.

கேசவ சுவாமியின் சொற்களைச் சிரமேற் கொண்டு



எதிர்காலச் செல்வங்கள்

இன்று ஒன்பது வயதாகும் எனது மூத்த மகன் மாதவன் மிகவும் வெகுளியாகவும் அதேசமயம் தைரியமாகவும் இருப்பான். நாம் ஏதும் மனக் கஷ்டமாகவோ உடல் கஷ்டமாகவோ இருக்கும் போது, அவன் வெகுளியாகப் பேசும் பேச்சு நமக்கு இருக்கும் கஷ்டத்தையே மறக்க வைத்து விடும். ஒரு சமயம் அவனுக்கு மூன்றரை வயதாயிருக்கும் போது, இரண்டு வீடு தள்ளி உள்ள வீட்டிற்குப் போய் அங்குள்ள பிள்ளையோடு விளையாடி அவர்கள் வீட்டுப் பெரிய கிணற்றில் விழுந்து விட்டான். பக்கத்து வீட்டுப் பெண் மூலம் செய்தி அறிந்து அந்த வீட்டிற்கு ஓடிச்சென்று பார்க்கிறோம். கிணற்றில் மிதந்தாற்போல் தெரிந்தான். நான் என் நிலை இழந்து விட்டேன். ஒருவர் கிணற்றில் இறங்கி அவனைத் தூக்கிக் கொண்டு மேலே வந்தார். அதிக ஆழமாகவும் நிறையத் தண்ணீரும் உள்ள கிணறு. குழந்தை எப்படி இருக்கிறதோ என்று கவலையோடு எல்லோரும் குழந்தையைப் பார்த்தால் "அம்மா! எனது தொப்பி விழுந்து விட்டது (அன்று தொப்பி வைத்திருந்தான்) அதனால் எடுக்கப் போனேன். இது என்னம்மா இப்படித் தண்ணீராய் இருக்கிறது. நான் அம்மா அம்மா என்று கூப்பிட்டேனே" என்று கணீரென்று போட்டானே ஒரு போடு. அதுவரை அவனுக்குக் கிணற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாமல் போய் விட்டது ஒரு குறை. மிகவும் துக்கமான நேரத்தில் அவன் அப்படி வெகுளியாகக் கேட்டது அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது.



செல்வம் இளங்கோவன்.

நடக்கும், இராஜ ராஜன் அவர் கட்டளையை ஏற்று அவ்வாறே செய்தார்.

கங்கை கொண்ட சோழபுரத்து அந்தப்புரத்தை அரசி அவனிமுழுதுடையாள் அடைந்தாள். கங்கை கொண்ட சோழபுரத்தில், பெரிய பிராட்டி அம்மங்கை தேவி, தமது வாழ்நாளை மிக அமைதியுடன் கழித்துக் கொண்டிருந்தாள். எண்பது பிராயத்துக்கு மேல் கடந்த பெரிய பிராட்டியின் பராமரிப்பில், அவனி முழுதுடையாளை ஒப்படைத்து விட்டு, பழையாறை அரண்மனையை வந்தடைந்தார் இராஜராஜன்.

இதுவரையில் இராஜ ராஜன் கூறியவற்றை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த பெருமான் நம்பி, "அரசே! கேசவ சுவாமியின் வாக்குப் பொய்க்காதே. தாங்கள் அரசியாரைச் சந்திக்காமல் மிகக் கட்டுப்பாடுடன் இருந்தும், எவ்வாறு, அரசியாருக்கு மரணம் சம்பவித்தது?" என்று கேட்டார்.

இராஜ ராஜன் தமது விழி நீரை மெல்லத் துடைத்துக் கொண்டு, "விதியை யாரால் மாற்ற முடியும் நம்பி; உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு மிகுந்த கட்டுப்பாட்டுடன் தான் நான் இருந்தேன். ஆளுண்ட அரசியைச் சந்திக்க முடியாத வாழ்வு ஒரு வாழ்வா என்று நான் விரக்தியடைவதுண்டு. அப்படியொரு சோர்வும் பிரிவாற்றாமையும் என்னை வாட்டும்போது பழையாறையை விட்டுப் புறப்பட்டு விடுவேன். நினைவிருக்கலாம், உனது ஊருக்கு வந்து மீனாட்சியம்மனைத் தரிசித்துச் சில நாட்களைக் கழித்தேன். அப்போதும் உன்னிடம் கூறவில்லை. இரகசியமாக என் ஆருயிர்த் தேவியைச் சந்திக்க வேண்டும் என்ற துடிப்பு எனக்கு அதிகரித்தது. ஐயிரண்டு திங்கள் ஓடி மறைந்தன. குழந்தை பிறக்கும் நாள் நெருங்கும்போது நான் கேசவ சுவாமியை அழைத்துக்கொண்டு கங்கை கொண்ட சோழபுரம் சென்றேன். ஓராண்டு காலமாகத் தலைநகருக்குச் செல்லாத என் வருகையை அறிந்த மக்கள் ஆனந்தக் கூத்தாடினர்.

"கேசவ சுவாமி கலகலப்புடன் காணப்படவில்லை. ஆண் குழந்தை பிறந்தது என்ற செய்தியைத் திருமந்திர ஓலை நாயகம் விரைந்து வந்து தெரிவித்தான். நான் தோறும் வானத்தையும் கையில் உள்ள பஞ்சாங்கச் சுவடியைப் பார்ப்பதும் ஏதோ மனத்துக்குள்ளேயே கணக்கிடுவதுமாக இருந்தார் கேசவ சுவாமி.

"சுவாமி! ஆண் குழந்தை பிறந்துவிட்டான். வாருங்கள், போய் தாயையும், சேயையும் பார்க்கலாம்" என்று மகிழ்ச்சியால் பரபரப்படைந்து கூறினேன்.

"கேசவ சுவாமி கையசைத்தார். கூடாது என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தார். "இராஜராஜா, நீ குழந்தையையும், தாயையும் காணும் தருணம் இன்னும் வரவில்லை" என்று மட்டுமே கூறினார்.

"பாசம் என் மதியை மறைத்தது. பற்றுதல் என் உணர்ச்சியைக் கட்டுக்கடங்காமல் செய்தது. ஒரு கணம் ஜோதிட சாத்திரத்தையே வெறுக்கத் தோன்றியது. பத்து நாட்கள், இருபது நாட்கள் என்று நான் கேசவ சுவாமியின் அருகேயே கட்டுப்பாடுடன் இருந்தேன். என் மனத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. சோழர் குலவிளக்கை மிக அருகே வைத்துக் கொண்டு அதைப் பாராமல் தடுக்கும் எந்தச் சக்தியையும் மீறிவிட முடிவு செய்தேன். என் அருமை அரசி என்னைக் காணாமல் எப்படித் துடித்துக் கொண்டிருப்பாள் என்று எண்ணினேன்... நம்பி, உன்னிடம் மனம் விட்டுச் சொல்வதில் என்ன வெட்கம்?" என்று கூறி இராஜ ராஜன் சற்றுப் பேச்சை நிறுத்தினார்.

நம்பி மெல்ல நகைத்து, "கட்டுப்பாட்டையும், தடையையும் மீறியதால்தான் மற்றொரு குழந்தையும் தங்களுக்குப் பிறந்தது என்பதும் எனக்குத் தெரியும். கேசவ சுவாமியின் சோதிடம் பொய்த்து விட்டது என்று கை கொட்டி முழங்கினீர்கள். கேசவ சுவாமி கோபித்துக் கொண்டு சோழ நாட்டை விட்டே போய்விட்டார். இதெல்லாம் நான் அறிவேன்" என்றார்

நம்பியின் மெல்லிய சிரிப்பொலியுடன் இராஜ ராஜனும் சேர்ந்து கொண்டார்..

"கேசவ சுவாமி கோபத்துடன் வெளியேறு முன்பு என்னிடம் வந்து, இராஜ ராஜா, விதிப் பயனை வெல்ல இந்தக் கேசவனால் கூட யோசனை கூற முடியாது. ஆனால் விதியை மதியால் வெல்லலாம். உன் மதியைக் கட்டுக்கடங்கி வைத்துக் கொள். மற்றொரு முறையும் எச்சரிக்கிறேன்: உனக்கு

மற்றொரு குழந்தையும் பிறக்கப் போகிறது'' என்று கூறினார்.

''என் செய்கையைக் கண்டு நானே பிறகு வெட்கிப் போனேன். என் அன்புக்கினியவள் மீண்டும் கருத் தரித்தாள். கேசவ சுவாமி புறப்படும் முன்பு கூறினார்: ''இராஜ ராஜா! அடுத்துப் பிறப்பதும் ஆண் குழந்தைதான். உனக்கு ஏனோ சோதிடத்தின் மீது நம்பிக்கை குறைந்து விட்டது. இருந்தாலும் நான் சொல்லுகிறேன்: சில ஆண்டுகள் வரையிலாவது இந்தக் குழந்தைகள் மறைந்தே வாழட்டும். குழந்தை பிறந்ததைப் பற்றிப் பிரபலப்படுத்தாதே. இரண்டாண்டுகள் கழிந்த பிறகு மீண்டும் குழந்தையின் பிறந்த 'கோளைப் பார்த்து அதன் பலன் கூறுகிறேன்'' என்று கூறிப் புறப்பட்டார். அவரை நான் எவ்வளவோ தடுத்தும் கேசவ சுவாமி கேட்கவில்லை. புறப்பட்டுவிட்டார். ''மீண்டும் இரண்டு ஆண்டுகள். கழித்து வருகிறேன்'' என்று கூறிச் சென்றார். அவர் சென்ற பிறகு ஏனோ என் உள்ளத்தில் ஒரு விதப் பயம் பிடித்துக் கொண்டது. அவர் சொல்லைமீறி நான் அரசியைச் சந்தித்திருந்தது தவறு என்றும் நினைத்தேன்.. அதன் பலன் ஓராண்டுக்குள் மற்றொரு குழந்தையையும் அரசி ஈன்றெடுத்தாள். ஆனால், ஆனால்.... நம்பி—'' என்று மேலே பேசுவதற்குள் மன்னரின் நாத் தழுதழுத்தது. குழந்தை போல் விம்மினார்.

நம்பி அவரைத் தேற்றி, ''அரசே! நடந்ததை நினைத்து வருத்தப்படாதீர்கள். ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்தறியாத, தங்களுக்கு இத்தகைய சோதனை வந்திருக்கக் கூடாதுதான். இறைவன் செயல். முதல் குழந்தை பெற்ற உடல்நிலை தேறு முன்னர் மற்றொரு குழந்தைக்கு அரசி தாயாகியதால் உடல் பலவீனப்பட்டு விட்டது. குழந்தையைப் பெறுவதற்கு அரசியார் மிகவும் துன்பப்பட்டார் என்றும் பழுஊரினின்று மருத்துவர் வந்து மிகவும் பிரயாசையின் மீது அந்தக் குழந்தையைப் பூவுலகுக்குக் கொண்டு வந்தார் என்றும் நான் அறிவேன். சேய் பிழைத்தது. தாயைக் காப்பாற்ற முடியவில்லை. சோழ குலத்துக்கு வாரிசு கிடைத்தது. ஆனால் இரு குழந்தைகளுக்கும் தாயாகிய அரசி அவனி முழுதுடையாளைக் காப்பாற்றித் தர முடியவில்லை. மலையமான் மகள் இறையடி சேர்ந்த செய்தியைத் தங்களால் தாங்க முடியவில்லை என்பதை நான் அறிவேன். ஆனால், தாயற்ற அந்தக் குழந்தைகளை இன்னும் அனாதைக் குழந்தைகளைப் போல் கங்கை கொண்ட சோழபுரத்திலேயே இரகசியமாக வளர்க்கும் இரகசியம் என்ன....?'' என்று நம்பி கேட்டார்.

விம்மல் ஒலி தணிந்து இதய வேதனையைக் கண்ணீரால் கரைத்து, மெல்லத் தன்னைத் தானே தேற்றிக் கொண்ட பரகேசரி எனும் பட்டமுடைய இராஜராஜசோழன், ''நம்பி! அந்த இரகசியத்தை உன்னிடம் சொல்லாமல் எப்படி இருக்க முடியும்? இதுவரை படைத் தலைவராக மட்டும், என் நண்பனாக மட்டுமிருந்த நீ இன்று முதல் அமைச்சராகவும் ஆகப் போகிறாயே — உன்னிடம் அதைச் சொல்லாமல் இருக்க முடியுமா? சொல்லி வைத்தாற்போல் கேசவ சுவாமி துக்க நிகழ்ச்சிக்குப் பிறகு என்னைத் தேடி வந்தார்.'' என்று கூறிய அரசர், சிறிது களைப்பாறினார்.

கேசவ சுவாமி பாதங்களில் வீழ்ந்து இராஜ ராஜன் கதறினார். அவர் அரசனைத் தேற்றி, ''இராஜ ராஜா! நடக்க வேண்டியதைத் தடுக்க நம்மால் முடியாது. அலகிலா விளையாட்டுடைய ஆண்டவனின் திருவுளப்படியே எல்லாம் நடக்கும். இனியும் நீ துயரத்தில் ஆழ்ந்திருக்கக் கூடாது. இதுவரை விரோதிகளே இல்லாது வாழ்நாளைக் கழித்த உனது காலம் இப்படியே செல்லப் போவதில்லை. உடனே சோழ நாட்டின் அரசுரிமையை அடுத்து ஏற்க வாரிசு ஒருவனைத் தேடு. அவனுக்குத் தாமதமின்றி இளவரசுப் பட்டம் சூட்டிவிடு'' என்றார்.

இராஜ ராஜன் திடுக்கிட்டார். ''சோழ நாட்டுக்கு வாரிசா? நான் தேடுவதா? தேடி அவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டுவதா? சுவாமி புதிர் போடுகிறீர்களே. கங்கை கொண்ட சோழபுரத்தில் வளர்கிறார்களே, எனது இரு செல்வங்கள், அவர்கள் நினைவு தங்களுக்கு வரவில்லையா?'' என்று இராஜ ராஜன் கேட்டான்.

''நினைவு இல்லாமலா நான் இங்கு வந்தேன்? இரண்டாண்டுகள் கழித்து வருவதாகச் சொன்னேன். சொன்ன வாக்குத் தவறாமல் கங்கை கொண்ட சோழபுரம் சென்றேன். குழந்தைகள் சரியான பராமரிப்பு இன்றி வாடுகின்றன. வாழப் பிறந்த குழந்தைகள் தாயற்ற அனாதையாய்த் தவிக்கின்றன'' என்று கேசவ சுவாமி கூறிவரும் போது பரபரப்புடன் குறுக்கிட்ட இராஜ ராஜன், ''சுவாமி, கங்காபுரியில் அவை

காலேஜ் கன்னியாகவும், மாமியாகவும், பாட்டியாகவும், குடுகுடு கிழவியாகவும் உங்களுக்காக வேஷம் போட்டது, 'வருவான் வடிவேலன்' படத்தில் நடித்த பேபி சுதா தான்!

சுதாவுக்கு ஒரு வருத்தம். ''நான் பெண்ணாக இருந்தும் எனக்கு வரும் வேடங்கள் எல்லாம் ஆண் வேடங்களாக இருக்கின்றனவே; சின்னப் பையனாக நடிக்க வேண்டியிருக்கிறதே'' என்று குறைப்படுகிறாள். புத்தாண்டில் அவள் குறை நீங்கும் என்று வாழ்த்துங்களேன்!

பேட்டி, புகைப்படங்கள்: சலன்



ஏன் வாடவேண்டும்? இங்கே கொண்டு வந்துவிடுகிறேன். இரு குழந்தைகளுள் மூத்தவன் இருக்கும்போது இளவரசுப் பட்டத்துக்கு *மண்டை கவிழ்க்க வேறு ஒருவனை ஏன் தேட வேண்டும்?'' என்று கேட்டார்.

கேசவ சுவாமி நகைத்தார். ''என்ன செய்வது. அந்தக் குழந்தைகளின் அதிர்ஷ்டம் அப்படி. இராஜ ராஜா, மீண்டும் சொல்கிறேன். அந்தக் குழந்தைகள் பிறந்த வேளை சரியில்லை. பதினெட்டு ஆண்டுகள் வரையில் அந்தக் குழந்தைகள் உன்னிடமிருந்து பிரிந்துதான் இருக்க வேண்டும். அதுவரை அந்தக் குழந்தைகளுக்கு அரியணை ஏறும் யோகம் இடையாது. பிறகு எப்படி நடக்கும் என்று இப்போது சொல்ல முடியாது. அது போகட்டும். இப்போது இன்னும் நான்கு ஆண்டுகள் வரை அந்தக் குழந்தைகளுக்குப் பெரும் ஆபத்து காத்திருக்கிறது. அதனால்தான் இளவரசுப் பட்டத்துக்கு ஏற்ற வேறு ஒருவரைத் தேடி அழைத்து வாஎன்கிறேன்'' என்றார்....

---

*இளவரசருக்குச் சூட்டும் முடி

எதிர்காலச் செல்வங்கள்

எங்கள் தொழிலக மானேஜர் திரு ரமணன் அவர்களின் நான்கு வயதுப் பையன் ரதீஷ். அபாரமான ஞாபக சக்தி அவனுக்கு.

எங்கள் தொழிலகம் இரயில்வே நிலையத்திற்கு மிகமிக அருகில் அமைந்துள்ளது.

ஒருநாள் எனது மராட்டிய நண்பர் திரு. ஏர்ப்புடே தமது பெண் குழந்தையை அழைத்துக் கொண்டு எனது அறைக்கு வந்திருந்தார். மஞ்சளும் சிவப்பும் கலந்த 'பட்டை பட்டையான' கோடுகளைக் கொண்ட கவுனை அணிந்திருந்தாள் அந்தப் பெண்.

''டேய் ரதீஷ்! யார்ரா இது?'' என்று கேட்டேன்.

''தோஞ்சலி எக்ஸ்பிரஸ்'' — 'டக்'கென்று வந்தது பதில். அனைவரும் 'கொல்'லென்று சிரித்து விட்டோம். 'தோஞ்சலி எக்ஸ்பிரஸ்' ரயில் பெட்டிகளின் வண்ணமும் மஞ்சளும் சிவப்புமே!

என். சுப்பிரமணியன்



கேசவ சுவாமி கூறியது கேட்டு நானே அதிர்ச்சி அடைந்தேன். கேசவ சுவாமி சொல்வதை இன்னும் அலட்சியம் செய்வது மிகத் தவறு என்ற முடிவுக்கு வந்து விட்டேன். என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை. உன்னை உடனே அழைத்து வர மெய்க் காவலரை அனுப்பினேன். நம்பி, இளவரசுப் பட்டத்துக்கு வாரிசு தேடுவது இருக்கட்டும்: எனது இரு கண்மணிகளுக்கு ஆபத்தான காலம் என்று சுவாமி சொன்னாரே. நீதான் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும். சோழ நாட்டின் பிரதம மந்திரியாக இன்றே பொறுப்பேற்று உடனே குழந்தைகளைக் காப்பாற்ற வழி செய்'' என்று கூறி இராஜ ராஜன் பெருமான் நம்பியின் இரு கரங்களையும் பலமாகப் பற்றினார்.

பெருமான் நம்பியும் உணர்ச்சி வசப்பட்டார். ''சோழ சாம்ராஜ்யத்து மாமன்னரே! கேசவ சுவாமியின் ஆருடத்தைப் பற்றி அறியா முன்பே நான் இரு குழந்தைகளையும் காப்பாற்ற நடவடிக்கை எடுத்து விட்டேன். யார் யார் சோழ நாட்டின் வாரிசு உரிமைக்காகச் சதித் திட்டங்கள் தீட்டுகிறார்கள் என்பதை அறிந்த நான் தாங்கள் கட்டளையிடு முன்பே கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து இரு குழந்தைகளையும் காப்பாற்ற ஏற்பாடு செய்து விட்டேன். கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள இரு குழந்தைகளையும் சில நாட்களில் கொன்றுவிடத் திட்டமிட்டிருக்கும் செய்தியும் எனக்குக் கிடைத்தது. அதற்குள் குழந்தைகள் காப்பாற்றப்பட்டு விடும். இது சத்தியம்'' என்றார்.

இராஜ ராஜன் முகத்தில் புத்தொளி பரவியது. அவர் உடலை விட்டு நோயெல்லாம் பறந்து விட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

''நம்பி, யார் யார் சதித் திட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்? அதில் மலையமானுக்கும் பங்கு உண்டா? வேண்டியவர் வேண்டாதவர் என்று பாராமல் சதியில் ஈடுபட்டவர்களைச் சிறையில் அடைத்துவிடு. குழந்தைகளுக்கு ஒருவித ஆபத்தும் ஏற்படாமல் காப்பாற்று'' என்று அரசர் கூறி நம்பியின் தோள்களைத் தொட்டார்.

அப்போது கங்கை கொண்ட சோழபுரத்தை நோக்கிச் செல்லும் கூண்டு வண்டியில் அல்லி சென்று கொண்டிருந்தாள். புதிய அனுபவத்தால் ஒருவிதப் பரபரப்பும், தன் கணவனின் சதிச் செயலால் ஒருவிதக் கலக்கமும் அவள் உள்ளத்தில் எழுந்து கொண்டிருந்தன.

மற்றொரு புறம் இரு குழந்தைகளையும் கவர்ந்து எடுத்துச் செல்வதற்குச் சிலர் கங்கை கொண்ட சோழபுரம் நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தனர் என்பதும், அந்தக் கூட்டத்தில் அல்லியின் கணவனும் இருந்தான் என்பதும் அல்லி அறிய நியாயமில்லை.

(தொடரும்)

கனவா-நிஜமா? 16

கதை: வாண்டுமாமா

சித்திரம்: செல்லம்




மயங்கிக் கிடந்த அந்த உருவம் மன்னர் வஜ்ரபாகுவேதான். கொள்ளையரின் தாக்குதலால் நினைவிழந்து கிடந்தார்.
இவன் நம் விராத நாட்டான். மாயாபுரிக் காரன் என்பதை இவன் உடையே கூறுகிறது!
ஏய், உன் பெயர் என்ன? ம்...பேசடா, மிருகமே...
நான்... நான்...
கண் விழித்த மன்னர் வஜ்ரபாகு விற்குத் தான் யார் என்பது நினைவிற்கு வரவில்லை. கொள்ளைக்காரர்களின் கொடூரமான தாக்குதல் அவர் நினைவைக் கொள்ளை கொண்டு போய்விட்டது.
நான் யார் என்பதும் எனக்கே தெரியவில்லை. என் பெயர்... என்ன...?
தான் யார் என்பதை மறந்து போன மன்னர் வஜ்ரபாகுவைக் கைதியாக்கிக் கைகளைக் கட்டித் தங்கள் குதிரையோடு பிணைத்து இழுத்துக் கொண்டு போகிறார்கள் விராத நாட்டு வியாபாரிகள்.
தான் யார், தன்னைக் கைதியாக்கி இழுத்துப் போகிறவர்கள் யார் என்பது ஏதும் அறியாத மாயாபுரியின் மாமன்னரைத் தார்த்தாரியத் தலைநகரின் சந்தையில் கட்டி நிற்க வைத்திருக்கிறார்கள் காட்சிப் பொருளாக.
யார் இவன்?
மாயாபுரியைச் சேர்ந்த முடையன். வழியில் நினைவிழந்து கிடந்தான். அடிமைச் சந்தையில் கொழுத்த விலைக்குப் போகுமென்று கொண்டு வந்தோம்.
இழுத்துச் செல்லுங்கள் இவனை. தப்பி விட முடியாதபடிக்கு இவன் கண்களைக் குருடாக்கி விடுங்கள்!
தொடரும்

அப்பாவாம் அப்பா! அப்பா — குப்பா தப்பா — கப்பா!

அந்த மனுஷனைக் கண்டாலே எனக்கு எப்பவும் பிடிக்கறதில்லே. தான்தான் ரொம்பப் பெரிய இதுன்னு அந்த மனுஷனுக்கு ஒரு நினைப்பு. மதிப்பா மூஞ்சியை வச்சுக்கிறதும் என்னமோ ஒரு மாதிரிப் பாக்கறதும்... அடேயப்பா! அதிலேயும் என்னைப் பார்க்கிற விதம் வேறே — அம்மாவைப் பார்க்கிறதுக வேறே... பெரிய்ய ஸ்டைலு! எனக்கு அப்ப என்னமா இருக்கும், தெரியுமா?

இந்த அம்மாவுக்கு அதெல்லாம் எங்கே தெரியறது? அந்த மனுஷனைக் கண்டாலே அவளுக்கு மூஞ்சியெல்லாம் மலர்ந்து போயிடறது. என்னமோ ஒரேயடியாத் துவண்டு போய் நிக்கறா. குழைஞ்சு குழைஞ்சுண்டு போய்ப் பேசறா. நான் நினைக்கிறேன், அம்மாவுக்கு அந்த மனுஷங்கிட்டே என்னமோ ஒரு பயம் போலிருக்கு. அதான் என்னுங்கிறதுக்கு முன்னாடி எண்ணெயா ஓடறா... நடந்துக்கறா. என்னத்துக்காகப் பயப்படணும்னுதான் எனக்குத் தெரியல்லே! நானும் பார்த்துண்டே வரேன், வரவர நிலைமை ரொம்ப மோசமாகப் போயிண்டு இருக்கு. எல்லாம் தலைகீழா மாறிண்டு வரது. இந்தமாதிரி ஆகும்னு தெரிஞ்சிருந்தா தான் அம்மாகூடச் சேர்ந்து பிள்ளையார் கோயிலைச் சுத்தியிருக்க மாட்டேன். அம்மா சொன்னாளேன்னு கூடவே நானும் சுத்தினேன். பிள்ளையாரை அப்படி வேண்டிக்கிண்டா அப்பாவுக்கு இந்த ஊருக்கே மாத்தல் ஆயிடுமாம். மாத்தல் ஆனா குடும்பம் சேர்ந்தாப்பலே இருக்குமாம். எல்லாருக்குமே சௌகரியமாம். அம்மா வருத்தப்பட்டுண்டு இருக்காளேன்னு அவ கோயிலைச் சுத்தறப்பல்லாம் போனால் போறதுன்னு நானும் சுத்தினேன். அது தப்பாப் போச்சு.

அந்த அப்பா இந்த அம்மா

— ஆர்வி —



இந்த மனுஷன மாத்தலாயி டில்லியிலிருந்து இங்கே வந்த அன்னிக்கே எனக்கு அது பட்டுப்போச்சு. டில்லியை விட்டுப் புறப்பட்டுட்டதா இந்த மனுஷன் முன்னாடியே தந்தி கொடுத்திருந்தார். அது கிடைச்சதிலேருந்து பாக்கணுமே இந்த அம்மாவை. ஒரே பரபரப்பு. தவியாத் தவிச்சுத் தன்னையா உருகிப்போனா. திடீர்னு என்னை வாரி எடுத்து அணைச்சிண்டு குதிச்சா.

"அப்பா வரப் போறாடா, அஸ்வின். தந்தி கொடுத்திருக்கார்டா. உனக்கு எல்லாம் வாங்கிண்டு வருவாடா, உங்க அப்பா. அப்பா வரணும்னு பிள்ளையார் கோயிலைச் சுத்தினியோ, இல்லியோ? அதிலே பிள்ளையார் மனசு இரங்கிப் போச்சுடா. அப்பா வரப் போறாடா!" அப்படின்னு ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு முத்தமா என் கன்னத்திலே மாத்தி மாத்திக் கொடுத்தா அம்மா.


எப்பவுமே அம்மா முத்தம் கொடுத்தா எனக்குப் பிடிக்கும். ஆனா அன்னிக்கு அப்படி வெறி பிடிச்சாப்பலே கொடுத்தது எனக்கு வேடிக்கையாயிருந்தது. அந்த மாதிரி அம்மா முத்தம் கொடுக்கறச்சே வேறே யாராவது இருந்தா வெக்கமா இருக்காதா எனக்கு? ஆனா நல்ல வேளையா அப்ப யாரும் இல்லே.

அந்த மனுஷன் வந்தப்ப நான் பாட்டில் பாலை உறிஞ்சிக் குடிச்சிண்டிருந்தேன். காலம்பரத்திலிருந்தே அம்மாவுக்கு இந்த அப்பா ஜபம்தான். வண்டியிலேருந்து வந்து இறங்கி, அந்த மனுஷன் ஜம்முனு அம்மாவுக்கு எதிர்த்தாப்பலே நின்னதும் அம்மாவுக்குக் காலும் ஓடலே, கையும் ஓடல்லே. அப்புறம் திடீர்னு இந்த அம்மாவுக்கு என்ன வந்துதோ, தெரியல்லே. அப்படியே துள்ளிண்டு போய் அந்த மனுஷன் மார்புலே சாஞ்சி கட்டிண்டுட்டா. கண்ணை மூடிண்டுட்டா. நான் இருக்கிறதுகூட அவளுக்குத் தெரியல்லே. ஆனா அந்த மனுஷர் என்னைப் பார்த்துட்டார்.

"அடே! அஸ்வின் குட்டி. என்னடா பேசாமே பார்த்துண்டிருக்கே! என்னடா பண்ணிண்டிருக்கே. நான் உன்னைக் கவனிக்கவேயில்லையே!"ன்னு அம்மாவை விட்டுட்டு, என்னை ஆசையாத் தூக்கிக்க வந்தார்.

இந்த அம்மா படற பாட்டைப் பாத்ததிலே எனக்கா ஒரே ஆத்திரம். அதனாலே, 'உம், என்னைத் தொடாதே' என்கிற மாதிரி உறுமிண்டே பெரிசாச் சிணுங்கினேன். வாயை விட்டு பாட்டில் ரப்பரை எடுக்கல்லே.

"அப்பாடா அஸ்வின். நம்ம அப்பாடா! அப்பாகிட்டே மாட்டேன்னு சொல்லலாமா?"ன்னு அம்மா சிபாரிசுக்கு வந்தாள். அது வேறே எனக்கு ஆத்திரம்.



''நாளாச்சுப் பாரு. என்னை மறந்துட்டான் போலிருக்கு!''

''மறக்கிறதாவது? அத்தனையும் வெக்கம்னு அதுக்கு? கொஞ்ச நாழி போகவிட்டுப் பாத்தான்னு தெரியும். அவன் அடிக்கிற லூட்டியை!''

அப்புறம் ரெண்டு பேருமாச் சேர்ந்து எங்கிட்டே தரை ரயில் வண்டி, ஹெலிகாப்டர், போயிங் எல்லாத்தையும் எடுத்துக் கொடுத்துட்டு, என்னமோ அவா பாட்டுக்குக் கூடிக் கூடிப் பேசிண்டே இருந்தா. மொச்சு மொச்சுன்னு பேசறதுக்கு அப்படி என்ன தான் இருந்துதோ, தெரியல்லே. என்னை அடியோட கவனிக்கிறதை விட்டுட்டு. அம்மா அந்த மனுஷன் பின்னாடியே சுத்திண்டிருந்தா. நானும் ரொம்ப நேரம் பொறுத்துப் பொறுத்துப் பார்த்திண்டிருந்தேன். இதை இப்படியே விட்டிண்டிருந்தா சரியா வராதுன்னு, சாப்பிடற சமயமாப் பாத்துத் தகராறு பண்ணிப்பிட்டேன்.

அந்த மனுஷனுக்குப் போட்டிருந்த நுனி இலை முன்னாலே நான் போய் உக்காந்துண்டுட்டேன்.

''அது அப்பாவுக்குடா. உனக்கு இல்லே. உனக்குக் கிண்ணியிலே சாதம் பிசைஞ்சு ஊட்டிவிடறேன். சமர்த்தாச்சே நீ. சொன்னதைக் கேக்கணும்'' ன்னா அம்மா.

''ஊஹூம். மாட்டேன்.''

''உனக்கு இலையைப் போட்டுட்டா, அப்பா எங்கே உக்காந்துக்குவா?''

''சேரிலே உட்கார்ந்துக்கட்டும்.''

''சேரிலேயோ?'' அம்மா சிரிச்சா. பொய்ச் சிரிப்பு.

''சேரிலே போய் உட்கார்ந்தா அப்பா சாப்பிட வேண்டாமா? அப்பாவுக்குப் பசிக்காதா?''

பேச்சுக்குப் பேச்சு அப்பாவா? அப்பா — குப்பா — தப்பா — சுப்பா!

''எனக்கு மட்டும் பசிக்காதா?''

''உனக்குத்தான் கிண்ணியிலே பிசைஞ்சு ஊட்டி விடப் போறேனே!''

''வாண்டாம். அப்பாவுக்கு ஊட்டி விடு.'' அம்மாவுக்கு நான் சொன்னதைக் கேட்டதும் சிரிப்பு வந்துட்டுது.

''கேட்டேளா — இவன் சொல்றதை!'' ன்னு அந்த மனுஷன்கிட்டேயே போய்ச் சொன்னாள்.

''சரிசரி, குழந்தை கிட்டே என்ன? எனக்கு வேற இலை இருந்தாப் போட்டுடேன்!'' ன்னார் அவர்.

மனுஷனுக்கு உள்ளூற எங்கிட்டே பயம் வந்துட்டுது போலிருக்கு. அன்னிக்கு அத்தோட போகட்டும்னு விட்டுட்டேன். இருந்தாலும் இந்த மனுஷன் நல்லதுக்கு இங்கே வரலேன்னு எனக்கு அப்பவே புரிஞ்சு போச்சு.

நான் நினைச்சாப்பலேயே வரவர அம்மாவுக்குப் புத்தியே மழுங்கிப் போயிட்டிருந்தது. எதுக்கு எடுத்தாலும் அப்பா பேரையே சொல்ல ஆரம்பிச்சுட்டா.

''அப்பா டிராயரைத் தொறக்காதே. அப்பா பேனாவை எடுக்காதே. அப்பா வரட்-

டும். சொல்றேன். அப்பா போகட்டும் பொறுத்துக்கோ. அப்பா தூங்கறு — சத்தம் போடாதே.''

இதே பேச்சுத்தான் இந்த அசட்டு அம்மாவுக்கு. எங்கிட்டேன்னு இல்லே, வேறே யார் கிட்டே பேசினாலும் அவளுக்கு 'அவர்'தான். 'அவர்' போடாமல் பேசவே அவளுக்கு மறந்து போயிட்டுது. 'அவர் கேட்டார் — சொன்னார்: அவருக்கு அது பிடிக்கும் — இது பிடிக்காது; அவரைக் கேக்கணும் — கேட்டுத் தான் சொல்லணும்' — இதே பல்லவிதான்!

இந்த அம்மா இதுக்கு முந்தியெல்லாம் இப்படியா பேசிண்டிருந்தா? எப்பப் பேசினாலும் என்னைப் பத்திப் பேசாமலேயே இருக்க மாட்டா. எங்கே போனாலும் நான் இல்லாமெ போக மாட்டா. இப்ப என்னடான்னு எதுக்குப் போனாலும் அப்பா வரணுமாம். அப்பா — சூப்பா!

இந்த மாதிரியெல்லாம் ஆகும்னு தெரிஞ்சிருந்தா நான் பிள்ளையார் கோயிலைச் சுத்திச் சுத்தி வந்து, 'அப்பா உடம்பு நன்னா இருக்கணும்; அவருக்கு உள்ளூரோட டிரான்ஸ்ஃபர் ஆகணும் — சீக்கிரமா எங்களோட வந்து இருக்கணும்'னு வேண்டிண்டிருந்துருக்கவே மாட்டேன். அம்மா பேச்சைக் கேட்டது பெரிய தப்பாப் போச்சு. அம்மாவுக்காகப் பரிதாபப்பட்டது எனக்கே ஆபத்தாப் போயிடுத்து.

ஒரு நாளைக்கு எனக்கு ரொம்பக் கோவம் வந்துடுத்து. என்னைத் தனியா ஒரு சின்னக் கட்டில்லே போட்டுட்டு, பெரிய கட்டில்லே அம்மாவுக்குப் பக்கத்துலே அந்த மனுஷனுக்கு என்ன படுக்கைன்னு எனக்குக் கோபம். முந்தியெல்லாம் அந்தக் கட்டில்லே அம்மா கூட நான்தான் படுத்துக்குவேன். அம்மா என்னைக் கட்டிண்டு படுத்துண்டாத்தான் எனக்குத் தூக்கம் வரும். இப்பத்தான் எல்லாம் தலைகீழா மாறிப் போச்சே. அன்னிக்குத் திடீர்னு நான் எதுக்காகத் தனியா, தாயில்லாப் பிள்ளையாட்டமாப் படுத்துக்கணும்னு நினைச்சுண்டேன். கட்டிலே அடச்சிண்டு அந்த மனுஷன் படுத்திண்டிருந்தார். இருந்தா எனக்கு என்ன வந்ததுன்னு நான் அவர் மேலேயே ஏறித் தாண்டி, அம்மாவுக்குப் பக்கத்திலே போய்ப் படுத்துண்டுட்டேன். இடம் ரொம்ப நெருக்கடியாய்த்தான் இருந்தது. எப்படியோ முண்டியடிச்சிண்டு போய்ப் படுத்துண்டா, அம்மா முழிச்சுண்டுட்டா.

''அஸ்வின், இதென்ன சங்கடம், இடமில்லாத இடத்திலே? அப்பா நிம்மதியாத் தூங்க வேண்டாமா? போய், உன் கட்டில்லே படுத்துக்கோ!''ன்னு சொன்னா.

''மாட்டேன். நான் இங்கதான், உங்கிட்டேதான் படுத்துக்குவேன்.''

''இதிலே இடமில்லேயே. எப்படிப் படுத்துக்குவே?''

''இடமில்லேன்னா அப்பாவைப் போய்ப் படுத்துக்கச் சொல்லு!''

''அப்பா களைச்சுப் போய்த் தூங்கறுடா. அவராலே உன் கட்டிலிலே எப்படிடா படுத்துக்க முடியும்?''

''எல்லாம் முடியும். நீ சொல்லு.''

''அது சின்ன கட்டிலாச்சே. அப்பாவுக்கு ?ாம் போறுதுடா.''

''எல்லாம் போறும். போச் சொல்லு.''

''பிடிவாதம் பிடிக்கப் படாது. அப்பா முழிச்சிண்டா கோவிச்சுக்குவா உன்னை.''

''முழிச்சுக்கட்டுமே. எனக்கு ஒண்ணும் பயமில்லே.''

''சொன்னாக் கேக்க மாட்டே?''

''மாட்டேன் - மாட்டேன் - மாட்டேன்!''

நான் போட்ட சத்தத்திலே அந்த முசுடு முழிச்சுண்டுடுத்து.

''என்ன இந்தப் பயல் சொன்னதைக் கேக்காமே பிடிவாதம் பிடிக்கிறான்! டேய்... பயலே!''ன்னு சத்தம் போட்டுது.

''நான் ஒண்ணும் பயல் இல்லே. நீதான் பயல்!''

''என்ன சொன்னே? ம்...'' என்று அந்த முசுடு என் கையை வலிக்கறாப்பலே பிடிச்சது.

என்னாலே பொறுக்க முடியல்லே. இந்த மனுஷன் கொஞ்சம்கூட இது இல்லாமே என் கையைப் பிடிக்கிறதாவது! எங்கம்மா கிட்டே வந்து படுத்திண்டதும் இல்லாமே என்னையே மிரட்டறதாவது? எனக்கு அதான் ஆத்திரம். அதனாலே நான் பெரிசாச் சத்தம் போட்டேன்:


''விடு என் கையை! கையை விடு! நீதான் பயல். நான் பயல் இல்லே... ஙாவ்... ஙாவ்...''

''சத்தம் போட்டேயோ தூக்கி வெளியிலே கொண்டு போய் விட்டுடுவேன்!''

''விடேன் பார்க்கலாம்'' என்று கையையும் காலையும் உதைத்துக் கொண்டேன்.

எதிர்காலச் செல்வங்கள்

எனக்கு மூன்று வயதில் ஒரு பையன் இருக்கிறான். அவன் பெயர் பால முருகன். அவனைப் பாபு எனச் செல்லமாக அழைப்போம். இந்த வயதிலேயே இவனுக்கு ரொம்ப இரக்க குணம் உண்டு. டேப் ரிக்கார்டரில் பாட்டுக் கேட்பதில் பிரீதி அவனுக்கு. பாபுவின் அப்பா தினமும் மதியம் சாப்பிட வந்தவுடன் டேப் ரிகார்டரை ஆன் செய்து விடுவார். பாபு, உடனே ''ஓ வென'' அழுவான். அவனைச் சமாதானம் பண்ணிய என்னவர், ''நீ சாப்பிடுவது போல், பாட்டு சாப்பிட வேண்டாமா! பாவம், அது சாப்பிடப் போயிருக்கிறது'' என்பார். அவனும் 'பாவம்' எனக் கூறிப் பேசாமல் சாப்பிடுவான்.



ஒரு நாள் மதியம் அப்பாவும் பிள்ளையும் சாப்பிட அமர்ந்திருந்தார்கள். டேப் ரிக்கார்டரில் என் கணவருக்குப் பிடித்தமான ''நித்தம், நித்தம் நெல்லுச் சோறு'' என்ற பாடல் ஓடிக் கொண்டிருந்தது. வழக்கம் போல், அவர் டேப் ரிக்கார்டரை ஆஃப் செய்யாமல், பாடலை ரசித்துக் கொண்டே என் சமையலையும் ருசித்துக் கொண்டிருந்தார். பாபு சிறிதுநேரம் திரு.திரு வென்று விழித்தான். பின்னர், டக் என்று டேப் ரிகார்டரை ஆஃப் செய்து விட்டு, ''அப்பா, பாட்டு பாவம்! சாப்பிடப் போகட்டும்'' என்று சொன்னானே பார்க்கலாம்! என் கணவர் முகத்தில் அசடு வழிந்தது!

எம். கோமதி முருகன்.

எதிர்காலச் செல்வங்கள்

தீபா — பதிலடி: அவளின் சாமர்த்தியமான பதில்கள் எங்களை ஆச்சரியத்திலும் சந்தோஷத்திலும் மூழ்கடிக்கும். யு. கே. ஜி. படிக்கும் போது பள்ளிக்குக் கொடுக்கும் ஆகாரத்தைச் சாப்பிடாமல் திரும்பக் கொண்டு வந்து அதற்கு ஏதாவது காரணம் கூறுவாள். ஒருநாள் முகத்தைச் சாது மாதிரி வைத்துக் கொண்டு, ''நான் மம்முவைச் சாப்பிட்டுட்டேன். அந்தக் காக்காதான் இன்னும் நிறைய மம்முவை டப்பாவில் போட்டது'' என்றாள். நாங்கள் அசடு வழிந்தோம். தினமும் அவளுக்குப் பிடித்த சாக்லெட்டை ''அந்தக் காக்கா ஒன்றே ஒன்றுதானே போட்டிறது''. என்று சொல்லி வந்தோம். அவளுக்குப் பிடிக்காத மம்முவைக் காக்கா நிறையப் போட்டு விட்டது என்று அவள் சொன்னால் நாங்கள் நம்பத் தானே வேண்டும்? குழந்தை அந்தப் பொய்யை நம்பவில்லை என்றும் தெரிந்து கொண்டோம்.

- ஸரோஜா ஸ்ரீனிவாசன்



''ராத்திரியிலே அதுகிட்டே என்ன? ரெண்டுங்கெட்டான். பேசாமே விட்டுடுங்கோ.''

''சரி சரி, சத்தம் போடாமெ பேசாமெத் தூங்கு.''

''தூங்கிறென்று பாரு. இல்லேன்னு காட்டுப் பூனைகிட்டே ராத்திரி புடிச்சுக் கொடுத்துடறேன்!''ன்னு அந்த முகடு உறுமித்து.

எனக்கு அதைக் கண்டா உள்ளூறப் பயம் தான். அதனாலே வாயை மூடிண்டு படுத்திண்டிருந்தேன். அப்படியே சித்தெக்கெல்லாம் தூங்கியும் போயிட்டேன். ஆனா பொழுது விடிஞ்சு பாத்தா பக்கத்திலே அம்மாவைக் காணோம். நான் சின்னக் கட்டில்லே படுத்திண்டிருக்கேன். நான் தூங்கறச்சே அந்த முகடு தான் என்னைத் தூக்கிப் போட்டிருக்கணும். நான் அதிலிருந்து அந்த மனுஷனோடயே பேசறதில்லே. கொஞ்சறதுக்கு வந்தாக்கூட மூஞ்சியைத் திருப்பிண்டு போயிடுவேன்.

அந்த மனுஷன் வீட்டுலே இல்லாத சமயம் பாத்து அம்மா பழைய மாதிரி கொஞ்ச வருவா, கெஞ்சுவா. எனக்கு அப்பல்லாம் அம்மாவைப் பாத்தா பாவமா இருக்கும். போனாப் போறதுன்னு அவகிட்டே மட்டும் எப்பவும்போல இருந்தேன். உள்ளூற எனக்கும் அவ கொஞ்சறது, கெஞ்சறது எல்லாம் வேண்டியிருக்கே.

ஆனா போகப் போக அவளாலும் பழைய மாதிரி வேலை செய்ய முடியல்லே. வயத்திலே பாப்பா ஒண்ணு வந்திருக்கே. அவள் தள்ளாமையோட எழுந்திருந்து அந்த மனுஷனுக்காக ஒண்ணொண்ணையும் செய்யறதைப் பாத்தா எனக்கு அழுகை அழுகையா வரும். மறுபடியும் பிள்ளையார் கோயிலுக்குப் போய்ச் சுத்தினா என்னன்னு தோணும். எல்லாம் இந்த மனுஷன் வந்ததினாலேதானே — மறுபடியும் டில்லிக்கே போகட்டும்னு கோபமா வரும். ஆனா என்னாலே தனியா எப்படிக் கோயிலுக்குப் போய் வேண்டிக்க முடியும்? அம்மாகிட்டே கூடப் போய்ச் சொன்னேன். அவ சிரிச்சுண்டு, அப்படியெல்லாம் வேண்டிக்கப்படாதுன்னு வரமாட்டேன்னுட்டா.

அம்மா நர்ஸிங் ஹோமுக்குப் போய்விட்டு ஹேமாவையும் எடுத்துண்டு ஒருநாள் வீட்டுக்கு வந்து சேர்ந்தா. அந்த ஹேமா வாய் ஓயாமே கத்தும். அம்மாவுக்கு அதைக் கவனிக்கத்தான் நேரம் சரியாயிருக்கும். யார் இருக்கா என்னைக் கவனிக்கிறதுக்கு? ஒருத்தரும் இல்லே. எனக்கு மனசு வெறுத்துப் போயிட்டுது. வீட்டிலே இருக்கவே பிடிக்கல்லே. எப்பப் பார்த்தாலும் தோட்டத்திலேயே தனியா ஏதாவது விளையாடிண்டு இருப்பேன். ஒரு விதத்திலே எனக்கு அந்த அப்பாவைப் பார்க்கவும் பாவமாத்தான் இருந்தது. ஹேமாக் குட்டி வந்ததிலேருந்து அந்த மனுஷன் பாடும் திண்டாட்டமாகத் தான் போயிட்டுது. அம்மாவுக்கு அவரையும் கவனிக்க நேரமில்லே. எந்த நேரம் பார்த்தாலும் ஹேமா மேலேதான் அவளுக்குக் கண்... மணிப் பிரகாரம் பால் கொடுக்கிறது, கவனிக்கிறது, கொஞ்சறது எல்லாம் ஹேமாவைத்தான். அதனாலே அந்த அப்பா என்கிட்டே வந்தால் நான் இப்ப மூஞ்சியைத் திருப்பிக்கிறதில்லே. சிரிச்சா நானும் சிரிப்பேன். இப்ப அவர்மேலே எனக்கு இருந்த கோபமெல்லாம் போயிட்டுது. அத்தனை கோபமும் அந்தப் புதுக்குட்டி ஹேமா மேலே தான் இருந்தது.

ஒரு நாளைக்கு ஆத்திரம் தீர அதைப் பிடிச்சுக் கிள்ளி விட்டேன். எனக்கு அதை அம்மா அவ்வளவு தூரம் சிலிச்சுண்டு கொஞ்சறதே பிடிக்கல்லே. அதனால் அம்மா இல்லாத சமயமாப் பாத்துக் கிள்ளிவிட்டேன்.

அன்னிக்கு எனக்குப் பளீர்னு விழுந்தது ஒரு அடி. அடி என்னமோ சாதாரண அடி தான். ஆனா அம்மா அடிச்சதுதான் அதிகமா வலிச்சுது. அழுதுண்டே நான் ஒரு ஓரமாப் போய்த் தூங்கிட்டேன் போலிருக்கு.

முழிச்சிண்டு பாக்கிறப்ப என்னை யாரோ அணைச்சிண்டிருக்கிற மாதிரி இருந்தது. அது இதமாவும் இருந்தது. நான் யார்னு திரும்பிப் பார்த்தேன். அப்பா!


எனக்கு எப்படி இருந்தது தெரியுமோ அப்ப? மூச்சுத் திணறித்து. அப்படியே திரும்பி அப்பாவை ஆசையா இறுகக் கட்டிண்டுட்டேன்.

''அஸ்வின்!''

அம்மா குரல்தான். நன்னா கூப்பிட்டுண்டு இருக்கட்டும். அம்மா — கும்மா — தும்மா — சும்மா!

தகவல்

பூவண்ணன்



1

அருண் ஓட்டலுக்கு எதிரேயுள்ள பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தான் ரவி. அவன் காலில் கறுப்பு ஷூ பளபளத்தது. உடலில் வெள்ளையும் காக்கியுமான பள்ளிச் சீருடை மடிப்புக்கலையாமல் பளிச்சென்றிருந்தது. தலையைப் படிய வாரியிருந்தான். முகத்திலே படர்ந்த பவுடருக்கு மேலே நெற்றியின் நடுவில் திருநீற்றுக் கீற்றுத் தெரிந்தது. ஒரு கையிலே பள்ளிப் புத்தகங்கள் அடங்கிய அலுமினியப் பெட்டி தொங்கியது. ரவி பள்ளிக்குச் செல்லும் பஸ்ஸை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

ரவியின் அருகே நாற்பது வயது மதிக்கத் தக்க ஒருவன் வந்து நின்றான். ''இந்தக் காலத்தில் நெற்றியில் லட்சணமாகத் திருநீறு பூசியிருக்கிறாயே. உன் பேரென்ன தம்பி?'' என்று கேட்டான்.

''ரவி'' என்றான் அவன்.

''நல்ல பெயர். எதிரே உள்ள காலனியிலிருந்து வருகிறாயா?''

''ஆமாம்.''

''என் உறவினர்கள் பலர் இந்தக் காலனியில் இருக்கிறார்கள். நீ எந்தத் தெருவில் இருக்கிறாய்?''

''அரங்கராசு தெருவில்.''

''ஓ! அந்தத் தெருவிலா? என் தம்பி, உன் வீட்டு எண் என்ன?''

''ஒன்பது.''

''ஒன்பது நல்ல எண். நீயும் ஒன்பதாவது படிக்கிறாயா?''

''இல்லை. எட்டாவது!'' என்று ரவி சொல்லும் போது அவனுடைய நண்பன் குமார் அங்கு வந்து சேர்ந்தான். ரவியுடன் பேசிக் கொண்டிருந்த ஆள் ''எந்தப் பள்ளியில் படிக்கிறாய்? கிறிஸ்டியன் காலேஜ் பள்ளிக் கூடமா?'' என்று கேட்டான்.

''இல்லை. எம். சி. டி. எம். பள்ளியில் படிக்கிறேன்'' என்று ரவி சொல்லிக் கொண்டிருந்த போதே பதினைந்து—பி பஸ் வந்து நின்றது. ரவி குமாருடன் பஸ்ஸில் ஏறிச் சென்றான்.

2

மணி பத்தரை. இரண்டாவது பீரியட் நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் பாடத்தின் நடுவில் மாணவர்களுக்கு எச்சரிக்கை செய்தார்.

''மாணவர்களே, ஊரிலே ஏமாற்று வேலைகள் பெருகி விட்டன. திருட்டு அதிகம் நடைபெறுகிறது. இப்போது ஒரு புது விதத் திருடன் புறப்பட்டிருக்கிறான். உங்களைப் போன்ற மாணவர்களிடம் பேசி உங்கள் வீட்டு விலாசத்தை வாங்கிக் கொள்கிறான். பிறகு பத்து பதினொரு மணி வாக்கில் அந்த வீட்டுக்குப் போய் உங்க பையன் பஸ்ஸிலே மாட்டிக்கிட்டான், ஆஸ்பத்திரியில் மூச்சில்லாமல் கிடக்கிறான் என்பான். வீட்டில் அந்த நேரத்தில் ஆண்கள் இருக்க மாட்டார்கள். பெண்கள் அலறிக் கொண்டு வெளியே ஓடுவார்கள். வந்தவன் வீட்டில் உள்ள விலை உயர்ந்த பொருள்களையெல்லாம் சுருட்டிக் கொண்டு ஓடுவான். இதுபோல சாஸ்திரி நகரில் நடந்திருக்கிறது. அசோக் நகரில் நடந்திருக்கிறது. அதனால் நீங்கள் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். அந்நியர்களிடம் உங்களைப் பற்றி எந்தத் தகவலையும் சொல்லாதீர்கள்.''

ஆசிரியர் சொல்லிக் கொண்டிருந்த போதே குமார், தன் அருகே உட்கார்ந்திருந்த ரவியிடம், ''ஏண்டா ரவி, காலையிலே பஸ் ஸ்டாப்பிலே நீ யாரோ ஒருத்தனிடம் உன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாயே! அவன் நல்லவனா, தீயவனா?'' என்று கிசுகிசுத்தான்.

ஆசிரியர் ''என்ன அங்கே பேச்சு?'' என்று அதட்டியதும் பேச்சுப் பட்டென்று நின்றது.



அதே நேரத்தில், அருண் ஓட்டலுக்குப் பக்கத்திலிருந்த காலனிக்குள் நுழைந்தான், காலையில் ரவியோடு பேசிய ஆள். முதல் தெருவின் பெயர்ப் பலகையைக் கவனித்தான். 'அரங்க ராகத்தெரு' என்றிருந்தது. அவன் அந்தத் தெருவில் சென்றான்.

தெருவில் ஆள் நடமாட்டம் இல்லை. அதைக் கண்டு திருப்தியடைந்த அவன், வீட்டு எண்களைப் பார்வையிட்டவாறு நடந்தான். ஒன்பதாம் நம்பர் வீட்டின் முன் நின்றான். சிறிய பங்களா. தனி வீடு, கதவு மூடப்பட்டிருந்தது. இவையும் அவனுக்குத் திருப்தியளித்தன.

கதவை அவன் மெள்ளத் தட்டினான். தாழ் திறக்கும் ஓசை. கதவு திறந்தது; உள்ளே ஒரு பெண்மணியிருந்தாள்.

அவன் உள்ளே சென்று ''இது ரவி வீடுதானே...'' என்று கேட்டான்.

''ஆமாம்.'' என்றாள் அவள். அவள் முகத்தில் கவலை படர்ந்தது.

''அம்மா! நான் அவன் பள்ளிக்கூடத்துப் பியூனுங்க... முதல் பீரியட் முடிஞ்சதும் எதுக்காகவோ வெளியே வந்தான். அப்போ வேகமா வந்த லாரி அவன் மீது மோதி...''


அவன் முடிப்பதற்கு முன்னமே, அவள் 'ரவி' என்று அலறினாள்.

3

மூன்றாவது பீரியட் நடந்து கொண்டிருந்தது.

எதிர்காலச் செல்வங்கள்

'Adjective என்றால் என்ன அப்பா?' என்று கேட்டாள் என் பெண். நானும் பதிலுக்குக் கேள்வி கேட்டேன். தமிழில்தான். 'நீ எப்படிப்பட்ட பொண்ணு நல்ல பொண்ணு!" தொடர்ந்து கேட்டேன்: "இந்தப் பென்சில் எப்படிப் பட்ட பென்சில்? சின்ன பென்சில்." இப்படித் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கும் போது அவளுக்குப் புரிந்து விட்டது adjective என்றால் என்ன என்று. "Muchக்கும் Moreக்கும் என்ன வித்தியாசம்" என்று கேட்டாள் அவள். வழக்கம் போலவே நான் கேள்வி கேட்டேன், "அம்மா மேலே உனக்கு எத்தனை பிரியம்? 1 கிலோவா, 2 கிலோவா" என்று. "அதெப்படி பிரியத்தை Weighபண்ணமுடியுமா என்ன" என்று கேட்டாள் பதிலுக்கு. "அதனாலே உனக்கு அம்மா மேலே Much பிரியம்" என்று சொன்னவுடன் அவளுக்குப் புரிந்தது. எதை அளவிட முடியுமோ அங்கே "more" ஐயும், முடியாத இடத்தில் 'much' ஐயும் உபயோகப் படுத்த வேண்டுமென்று விளக்கினேன். பிறகு அவள் இதை மறக்கவே இல்லை.



பொறுப்புக்களை நினைக்கும் போது அப்பாவாகவும் குழந்தைகளைப் புரிந்து கொள்ளக் குழந்தையாகவும் நாம் இரண்டு வேடம் போட்டுக் கொள்ள வேண்டும். குழந்தைகளைப் 'பிரச்னையாக' நோக்காதீர்கள். குழந்தை வளர்ப்பு உண்மையிலே ஒரு கலை. பயிற்சி செய்யச் செய்ய, பெருகேறும்.

- எஸ். ராமதாஸ்.

தலைமை ஆசிரியரும் போலீஸ் இன்ஸ்பெக்டரும், இன்னொரு போலீஸ் அதிகாரியும் எட்டாம் வகுப்புக்குள் நுழைந்ததும், ஆசிரியர் பாடத்தை நிறுத்தி எழுந்தார். மாணவர்களும் எழுந்து நின்றனர். 'உட்காருங்க' என்று கூறிக் கையமர்த்தி மாணவர்களை, உட்கார வைத்த தலைமை ஆசிரியர் 'ரவி' என்று அழைத்தார்.

ரவி எழுந்து நின்றான்.

'இங்கே வா ரவி' என்றார் தலைமை ஆசிரியர். ரவி அவர் அருகே சென்றான்.

"ரவி, இந்த இன்ஸ்பெக்டரை உனக்குத் தெரியுமாமே! இன்னொருவர் அசிஸ்டெண்ட் போலீஸ் கமிஷனர். உன்னை நேரில் பாராட்டுவதற்காக வந்திருக்கிறார்" என்றார்.

அஸிஸ்டெண்ட் போலீஸ் கமிஷனர் ரவியின் முதுகில் தட்டிக் கொடுத்தார். 'ரவி, உன் சமயோசித அறிவால், சாஸ்திரி நகரிலும், அசோக் நகரிலும் திருடின திருடனைப் பிடித்து விட்டோம். இரண்டு இடங்களிலும் திருடு போன பொருள்களையும் கைப்பற்றி விட்டோம். உனக்கு என் பாராட்டு" என்று ரவியின் கையைப் பற்றிக் குலுக்கினார்.

வகுப்பு ஆசிரியர், "ரவி என்ன செய்தான்? கொஞ்சம் விளங்கச் சொல்லுங்களேன்" என்று கேட்டார்.


"நீயே சொல் ரவி" என்றார் தலைமை ஆசிரியர்.

ரவி காலையில் பஸ் ஸ்டாப்பில் தன்னிடம் பேசிய ஆளைப் பற்றிக் குறிப்பிட்டான். "அவன் நீ எந்தத் தெருவில் இருக்கிறாய் என்று கேட்டதும், செய்தித்தாளில் சாஸ்திரி நகர், அசோக் நகர் திருடு பற்றிப் படித்தது நினைவுக்கு வந்தது. என்றாலும் தெருப் பெயரைச் சொல்லி விட்டேன். வீட்டு எண்ணையும் அவன் கேட்டான். அப்போதுதான் அந்த ஆள் திருட்டோடு சம்பந்தப்பட்டவனாக இருப்பான் என்று நிச்சயம் செய்தேன். என் வீட்டு எண் பத்து. ஆனால் நான் ஒன்பது என்று சொன்னேன். ஒன்பதாம் எண் வீட்டில் இதோ இங்கிருக்கும் இன்ஸ்பெக்டர் குடியிருக்கிறார்" என்றான் ரவி.

"மேலே நான் சொல்கிறேன்" என்ற இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார்.

"ரவி பள்ளிக் கூடத்திலிருந்து எனக்கு போன் செய்து, சந்தேகத்துக்குரிய ஒரு ஆளிடம் என் வீட்டு எண்ணைக் கூறியதைக் கூறினான். நான் என் மனைவியிடம் விஷயத்தைச் சொல்லி அவளைத் தயார் செய்தேன். வெளியே மாட்டியிருந்த என் பெயர்ப் பலகையைக் கழற்றி உள்ளே வைத்தேன். பிறகு என் அறைக்குள் காத்திருந்தேன். பத்தரை மணிக்குக் கதவு தட்டப்பட்டது. என் மனைவி கதவைத் திறந்தாள். உள்ளே வந்தவன் ரவி விபத்தில் சிக்கிக் கொண்டான், என்றதும் என் மனைவி 'ரவி' என்று மிக நன்றாகக் கத்தினாள். நான் அதேசமயம் வெளியே வந்து ஆளைப் பிடித்துக் கொண்டேன். போலீஸ் காரர்களை வரவழைத்தேன். ஐந்து நிமிஷ விசாரணையில் எல்லா உண்மைகளையும் கக்கி விட்டான். விஷயத்தை அஸிஸ்டெண்ட் கமிஷனருக்குச் சொன்னேன். அவர் ரவியை நேரில் பாராட்ட வந்து விட்டார்" என்றார் இன்ஸ்பெக்டர்.

தம் மாணவனின் புகழைக் கேட்டு வகுப்பு ஆசிரியர் பூரித்துப் போனார்.



அறிவியல் அற்புதங்கள்!

— கௌசிகன் —

"மின்சார விளக்கை வாயினால் ஊதி அணைக்கலாம்...!"

"கோவிலின் முன்னால் உள்ள பலி பீடத்தில் குடத்தைக் கொளுத்தினால் கர்ப்பக் கிருஹத்தில் விளக்கு எரியும். மூர்த்தம் தெரியும்!"

"அரியும் சிவனும் ஒண்ணு என்பதை நிரூபித்துக் காட்டுகிறார்கள்!"


"ஒரு குவளை மட்டுமே கணக்காகக் குழாயில் தண்ணீர் வரும். குவளை நிரம்பியதும் தானாகக் குழாயில் நீர் வருவது நின்று விடும். அதுவும் அக்குவளை விளிம்பு வரைதான்!"

"குழந்தைகள் கைநீட்டினால் மிட்டாய் வந்து விழுகிறது கையிலே...!"

இதெல்லாம் என்ன? எங்கே நடக்கும் அற்புதங்கள் என்று திகைக்கிறீர்களா? — இவையும் — இவைபோல் இன்னும் எத்தனை எத்தனையோ அதிசயங்களையெல்லாம் வியப்பூட்டும் வகையில் வரிசைப் படுத்திக் காட்டினார்கள். அதுவும் யார்? சின்னஞ் சிறுவர்கள். பள்ளி மாணவர்கள், மாணவிகள்! எங்கே? திருச்சி பாய்லர் தொழிற்சாலை நிறுவனம், சர்வதேசக் குழந்தைகள் ஆண்டுக்கான தனது அன்புக் காணிக்கையாக ஓர் அறிவியல் கண்காட்சியை நடத்தியது பிப்ரவரி மாதத்தில். வழக்கமான கண்காட்சிகளிலிருந்து முற்றிலும் வித்தியாசமாக — எலெக்டிரானிக் யுகத்தின் அளப்பரிய சாதனைகளை விளக்கும் வகையில் அமைந்திருந்தது இக்கண்காட்சி. காட்சி ஸ்டால்களில் அறிவியல் அற்புதங்களை விளக்கிக் கூறியவர்கள் மாணவ மாணவிகள். கண்டு களிக்க வந்ததோ பள்ளி மாணவ மாணவியரின் வெள்ளம். திருச்சி தஞ்சை மாவட்டங்களைச் சேர்ந்த கிராமங்களிலிருந்தெல்லாம் தேர்த் திருவிழாவுக்குப் போவதைப் போல் கட்டுசாத மூட்டையுடன் கண்காட்சியைக் காண வந்து குழுமினார்கள்.

குழந்தைகளுக்கு விருந்தாக — அறிவுக்கு விருந்தாக — ஒரு கண்காட்சி நடத்துவது என்று முடிவு செய்தார்களாம் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சங்கரும், மற்றும் உயர் அதிகாரிகளும். BHEL நிறுவனத்தின் இயக்குனர் திரு ப. தீனதயாளு இவர்களுக்கு ஊக்கமளித்து ஆக்க ரீதியில் அதைச் செயல் படுத்தித் தர முன் வந்தார். தன் சகாக்களுடன் வேலை செய்தார். ஒன்றரை மாதத்தில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் பிரமிப்பூட்டும் ஒரு கண்காட்சியை உருவாக்கிக் கொடுத்தார் திரு தீனதயாளு.

இந்த அறிவியல் கண்காட்சியில் 25 உயர் நிலைப் பள்ளிகளும் 8 ஆரம்பப் பள்ளிகளும் அறிவியல் அரங்கங்களை அமைத்து, வந்து குழுமிய குழந்தைகளுக்கு வியப்பும் பிரமிப்பும் ஊட்டும் விஞ்ஞான சாதனைகளை வேடிக்கை போலவும் விளையாட்டுக்களாகவும் இயக்கிக் காட்டினார்கள். மிகமிக எளிய, சாதாரணமான சாமான்களையும் பாட்டரியின் மின்சாரத்தையும் வைத்துக் கொண்டு என்னென்ன



வித்தைகளெல்லாம் செய்து காட்டினார்கள்! வேடிக்கையானாலும் அதன் தத்துவத்தையும் புரியும்படி மாணவர்களே விளக்கியது பெரியவர்களுக்கும் பிரமிப்பூட்டுவதாக இருந்தது.

அழும் பொம்மைகள், இயந்திர மனிதன், மாயாவியின் எழுத்துக்கள், மாயப்பெட்டி இப்படிப் பலப்பல — எலெக்ட்ரானிக் யுகத்தின் சாதனைகளை எளிமையாக விளக்கும் எத்தனையோ காட்சிகள் இடம் பெற்றிருந்தன. மருத்துவ உலகின் அற்புதங்கள், பெரிய யந்திரங்கள் இயங்கும் முறை, இப்படியாக அறிவியல் கண்காட்சி என்பதை நூற்றுக்கு நூறு அங்கு மெய்யாக்கி இருந்தார்கள்.

பிறந்த தேதி, நேரம் ஆகிய குறிப்புக்களைக் கொடுத்தால் அவருடைய ஜாதகத்தையே கணித்துக் கொடுக்கிறது கம்ப்யூட்டர். அது மட்டுமா? கம்ப்யூட்டர் கதையே சொல்லுகிறது. அது கேட்கும் வினாக்களுக்கு நாம் பதில் கூறினால் முடிவில் அது ஒரு கதையையே எழுதிக் கொடுத்து விடுகிறது! பொழுதுபோக்கு அம்சங்களான நாடகம், மெல்லிசை, மாஜிக், பொம்மலாட்டம், ராட்டினம், உல்லாச ரயில், திரைப்பட நிகழ்ச்சிகளும் உண்டு. ஒரு மிருகக் கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

கண்காட்சி மைதானத்தில் புல்வெளியில் ஜம்மென்று ஒரு குட்டி விமானம் உட்கார்ந்திருந்தது அதாவது புஷ்பக விமானம். விமானிகளின் பயிற்சிக்காகப் பயன்படும் 'புஷ்பக்' என்ற டுளீட்டரைத்தான் இப்படிக் கொண்டு வந்து வைத்திருந்தார்கள். விமானத்தின் அருகே நெருங்கி, தொட்டுப் பார்த்து — உள்ளே ஏறி உட்கார்ந்து மகிழ்ந்த குழந்தைகளின் ஆனந்தத்தை வார்த்தைகளில் எழுத முடியாது.

கண்காட்சி மைதானத்தைச் சுற்றிப் பார்த்துக் களைத்துப் போகும் மக்களுக்குப் பசிக்குணவு வழங்கும் பணியை BHEL நிறுவன மாதர் சங்கம் ஏற்றுத் திறமையுடன் மலிவு விலையில் சுவையான சிற்றுண்டிகளைச் செய்து குவித்துச் சேவை செய்தது.

பெல் நிறுவனத்தாரின் இந்த அறிவியல் கண்காட்சியைக் கண்ட பிறகு இதுபோன்ற கண்காட்சிகள் ஒவ்வொரு நகரிலும் நிரந்தரமாகவே அமைந்தால் குழந்தைகளுக்கு எவ்வளவு பயனுள்ளதாய் இருக்கும் என்ற ஏக்கம், பெருமூச்சாக வந்தது.



மழலைப் பருவ மறக்க





ஸ்ரீதேவி: நான் என் அப்பாவின் செல்லப் பெண். சின்ன வயதில் எங்கே போனாலும் அப்பா உடன் வரவேண்டும் என்று அழுது அடம் பிடிப்பேன். அவுட்டோரில் படப்பிடிப்புக்கும் கூட அப்பா வரவேண்டும்! வேறு வழியில்லாமல் என் அப்பாவும் வருவார். வண்டியில் ஏறிக் கொண்டு அது புறப்பட்டதும் ''நீ தூங்கு'' என்று அம்மா என்னிடம் கூறுவாள். ''நான் தூங்க மாட்டேன். நான் தூங்கினா அப்பா போய் விடுவார்'' என்பேன். கொஞ்சம் கொஞ்சமாக எனது பிடிவாதத்தைத் தகர்க்க என் அம்மா ஒரு வழி கண்டு பிடித்தாள். நான் அடம் பிடித்து 'ஆ'வென்று வாய் பிளந்து கத்தும் போது வாயை அடைக்க ஒரு ஐஸ்ப்ரூட் வந்து நிற்கும். ஐஸ்கிரீம் என்றால் எனக்குக் கொள்ளை ஆசை. இப்பொழுது நினைத்தால் இப்படி நடந்து கொண்டோமே என்று சிரிப்பாகத்தானிருக்கிறது.



கமலஹாசன்: ''களத்தூர் கண்ணம்மா'' படப்பிடிப்பு. ஸ்டுடியோவில் படப்பிடிப்பின் இடைவேளையில் ஆசிரியரிடம் ஒற்றை விரலைக் காண்பித்து விட்டு வெளியே ஓடும் பள்ளி மாணவனின் நிலை எனக்கு ஏற்பட்டது. அவசரமாகச் சென்றேன். இடுப்பில் கட்டியிருந்த அகலமான நாடாவை இழுத்து இழுத்துப் பார்த்தேன். முடிச்சு அவிழ்க்க வரவில்லை. அவசரத்தில் இழிந்தாலும் இழியட்டும் என்று வேகமாய் இழுத்தேன். பாதி திறந்தும் திறவாத நிலை. ஆடை நனைந்து விட்டது. வெளியே எப்படி வருவது? எனக்கு வெட்கமாய்ப் போய் விட்டது. என்னுடன் வந்திருந்த என் அண்ணா சந்திரஹாசன், எம். எஸ். விஸ்வநாதனுடன் ரிகார்டிங் ரூமில் உட்கார்ந்திருந்தார். ''அண்ணா'' என்று கூவிக் கொண்டு அப்படியே அவர் எதிரே போய் நின்றேன். நான் இப்படி ஓடி வரும் வழியில் இப்பொழுது டைரக்டராயிருக்கும் எஸ். பி. முத்துராமன் ''மெல்ல மெல்ல'' என்று எச்சரித்தார். என்னை அந்த நிலையில் பார்த்த என் அண்ணாவுக்கும் சொல்லி முடியாத வெட்கமாகப் போய் விட்டது. இந்த நிகழ்ச்சியை நான் மறந்தாலும் எஸ். பி. முத்துராமன் இன்றைக்கும் நினைவுபடுத்தி மானத்தை வாங்குவார்! இப்போது உலகறிய நானே சொல்லி விட்டேன். இனி அவர் என்ன செய்வார் பார்க்கலாம்!



முடியாத நிகழ்ச்சி!





ஷோபா: மூன்றாவது வயதிலேயே "தட்டுங்கள் திறக்கப்படும்" என்ற படத்தில் நான் முதல் முதலில் நடித்தேன்.

குடும்பத்தில் நாங்கள் எல்லாரும் சேர்ந்து தான் சினிமா பார்க்கப் போவது வழக்கம். (நான், அப்பா, அம்மா). ஒருசமயம் எனது பெரியம்மாவின் ஐந்து குழந்தைகளும் விடுமுறைக்கு எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார்கள். அப்பொழுது வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருந்த "அன்பே வா" படத்தைப் பார்க்க எல்லோரும் கிளம்பினோம். எல்லாரது தலைகளையும் எண்ணி டிக்கட் வாங்கினார் என் தந்தை. தியேட்டரின் உள்ளே நுழையும் பொழுது அங்கு வைக்கப் பட்டிருந்த அழகான புகைப்படங்களை நின்று ரசித்துப் பார்த்து விட்டுத் திரும்பினேன். யாரையுமே காண வில்லை! துக்கத்தில் எனக்கு நெஞ்சை அடைத்தது. இதனிடையில் உள்ளே நுழைந்த என் குடும்பத்தார் அவரவர் இடத்தில் உட்கார்ந்து விட்டனர். என் அம்மா தலைகளை எண்ண ஆரம்பித்தாள்! ஒரு தலை குறைவது தெரிந்தது. அது ஷோபா தான் என்று புரிந்து கொண்டு அப்பாவும் அம்மாவும் வெளியே வந்தனர். நான் அழ ஆரம்பிக்கவும், அவர்கள் என்னிடம் வரவும் சரியாக இருந்தது. அன்றிலிருந்து ஃபோட்டோ அட்டைகளை எங்கு பார்த்தாலும் அந்தச் சம்பவம் நினைவுக்கு வந்து சிரித்து விடுவேன்!



ரோஜாரமணி: பாட்டு, நடனம், பள்ளிப் படிப்பு இம்மூன்றையும் நான் ஒருசேரக் கற்றுக் கொள்ள வேண்டுமென்பது என் தாயாரின் விருப்பம். போதாக் குறைக்கு நான் ஏதாவது ஒரு வாத்தியத்தையும் வாசிக்கக் கற்க வேண்டும், பல மொழிகளையும் கற்க வேண்டும்! எனக்கு அலுப்பாய் இருக்கும். ஒருமுறை நடன ஆசிரியர் மாலையில் வருவதாக இருந்தார். எனக்கோ வெளியே சென்று தோழிகளுடன் விளையாட வேண்டுமென்று ஆசை. தெருக் கோடியில் நடன ஆசிரியரைப் பார்த்தவுடனேயே நேரே உள்ளே சென்று அம்மாவிடம் "தலையை வலிக்கிறது" என்றேன். 'மருந்து எடுத்து வருகிறேன். நீ படுத்துக் கொள்' என்று கூறிச் சென்றாள் அம்மா. அப்போது உள்ளே நுழைந்த அப்பா, "என்ன உடம்பு சரியில்லையா?" என்று கேட்டார். "ஆமாம் அப்பா!" என்றவள் ஞாபகமில்லாமல் "வயிற்றை வலிக்கிறது" என்று கூறி விட்டேன். "டாக்டரிடம் போய் வரலாம்" என்று கூறியபடியே சென்றார் அப்பா. அப்போது நடன ஆசிரியரும் வந்து, "என்ன படுத்துக் கொண்டிருக்கே" என்று கேட்டார். "ஜுரம் மாதிரி இருக்கு" என்றேன் நான். நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டே அப்பாவும் அம்மாவும் வந்தார்கள். மூவரிடம் மூன்று விதமாகப் பேசவே என் குட்டு வெளிப்பட்டு விட்டது. வந்த கோபத்தில் நடன ஆசிரியர் டான்ஸ் க்ளாஸ் எடுத்தார்!

பேட்டி : ருக்மிணி ராமசந்திரன்



எல்லாம் எனக்குத் தெரியும்

— மா.கி. இரமணன்

(பூவுலகில் அக்கிரமங்கள் அதிகரித்து விட்டன. எனவே கிருஷ்ண பரமாத்மாவை அழைத்துப் போக வேண்டும் என்ற நோக்கில் சில குழந்தைகள் – போராட்டக்காரர்கள் வைகுண்டம் வருகிறார்கள்.)

சாஸ்தா: கிருஷ்ண பரமாத்மாவை இங்கேயிருந்து எப்படியாவது தள்ளீட்டுப் போகணும்...

கிரிதர்: ஆமாம்... இந்த வைகுண்டத்திலேந்து கிருஷ்ணனை எப்படியாவது பூலோகத்துக்கு அழைச்சிட்டுப் போயே தீருவோம்...

அலமேலு: ஆமாம்... எப்படிக் கூப்பிட்டா கிருஷ்ணர் வெளியிலே வருவார்?

கிரிதர்: மிஸ்டர் கிருஷ்ணன்... மிஸ்டர் கிருஷ்ணன்... மிஸ்டர் கிருஷ்ணன்...அப்படீன்னு கூப்பிடணும்...

ராம்சரண்: மூஞ்சியைப் பாரு... இப்படி மூணு தடவை கூப்பிட்டா கோர்ட்டுக்கே மனுஷன் வரமாட்டேங்கறான்... கோகுலத்திலேந்து கிருஷ்ணன் எப்படி வருவான்?

பிரசாத்: வைகுண்டத்து வாசல்லே காலிங் பெல் இருந்தா அமுக்குவோம்...

ஸ்ரீவித்யா: போதும்! போதும்! உங்களுக்கெல்லாம் கொஞ்சமாவது 'புத்தி' இருக்கா... அல்லது 'பக்தி'தான் இருக்கா .... பகவான் கிருஷ்ணனுக்கு ஸ்தோத்திரம் ரொம்பப் பிடிக்கும். தன்னை யாராவது புகழ்ந்து பாடினா...

பிரசாத்: மகுடி கேட்ட நாகம் போல... மயங்கிப் போய் வெளியே வருவாரு...

சாஸ்தா: அப்படியே மடக்கிடுவோம்...

ஸ்ரீவித்யா: அதுதான் நல்ல ஐடியா. பகவத் கீதை ஸ்லோகம் சொல்லுவோம். பிறகு பஜனை செய்வோம்.

(அனைவரும் சொல்லல்)

''பரித்ராணாய ஸாதூனாம் விநாசாயச
துஷ்க்ருதாம்
தர்மஸம் ஸ்தாபனார்த்தாய சம்பவாமி
யுகே! யுகே!!''

கோவிந்த கோபால மாதவா
கோகுலா யாதவா கேசவா
காளிங்க நர்த்தனா வாமனா
கோபியர் சோதரா ஸ்ரீதரா!

சாஸ்தா: (பகவான் வராதது கண்டு) இப்படியெல்லாம்பாடினா பகவான் வரமாட்டார்.

கிரிதர்: அடிச்சாதான் அம்மி நகரும்...

ராம்சரண்: மயிலே மயிலே இறகு போடுன்னா போடாது...

பிரசாத்: பூலோகத்திலேயிருந்து வந்தீங்களே! கொஞ்சமாவது கூடவே புத்தியைக் கொண்டு வந்தீங்களா... இந்தக் காலத்திலே... பேச்சு வார்த்தை... கோரிக்கைன்னா யாரு கேப்பா... கோஷம் போடணும்.

கிரிதர்: கொடி புடிக்கணும்...

ராம்சரண்: 'வாழ்க' 'ஒழிக'ன்னு சத்தம் போடணும்..."

சாஸ்தா: ஆர்ப்பாட்டம் பண்ணினாத்தான் அவர் வருவார்....

கிரிதர்: கோகுல கிருஷ்ணா!

அனைவரும்: குறைகள் தீர்க்க வா...

ராம்சரண்: வெண்ணெய் கண்ணா.

அனைவரும்: வெளியே ஓடி வா...

சாஸ்தா: கண்ணா! கண்ணா! கண்ணா!

அனைவரும்: வா! வா! வா!

(கிருஷ்ணன் அவசரமாக ஓடி வருகிறான்)

பிரசாத்: கண்ணன் கண்ணன்!

அனைவரும்: வாழ்க! வாழ்க!

ராம்சரண்: கிருஷ்ணனுக்கு!

அனைவரும்: ஜிந்தாபாத்!

கண்ணன்: இங்க அமைதியான வைகுண்டத்தில் வந்து ஆவேசமாகக் கோஷம் போடும்



எதிர்காலச் செல்வங்கள்

என்னுடைய மூத்த மகன் குருமுருகனை, அருகிலுள்ள கடைக்கு அனுப்பி நூறு என்று எண்ணி முடிப்பதற்குள் அன்றையச் செய்தித்தாளை வாங்கி வரச் சொன்னேன். இல்லாவிட்டால் அவன் ஆர அமர நேரங் கழித்து வருவான். அவனை அனுப்பி விட்டு அடுத்ததாக உள்ள எனது புதல்வி செல்வஜெயந்தி (இரண்டாம் வகுப்பு மாணவி) யிடம் 'நூறு' வரை எண்ணச் சொன்னேன். என் மகள் ஒன்றிலிருந்து சொல்லிக் கொண்டே வந்து தொண்ணூற்றொன்பது



தொண்ணூற்றொன்பது என்று சொல்ல ஆரம்பித்து விட்டாள். நான் என் மகளிடம் "என்னம்மா தொண்ணூற்றொன்பதுக்கு அடுத்து நூறு சொல்ல வேண்டாமோ?" என்றேன். அதற்கு என் மகள் என்னிடம் "பேசாமல் இருப்பா! அண்ணன் வந்ததும் நூறு சொல்கிறேன்" என்றாள். எனக்கு ஒரே பிரமிப்பு. அண்ணன் அடிபடக் கூடாது என்பதற்காக அந்தப் பிஞ்சு உள்ளம் சாமர்த்தியமாகச் செயல் பட்டிருப்பதைக் கண்டு வியந்தேன்.

தங்க. குஞ்சிதபாதம்

நீங்களெல்லாம் யாரோ?

(அனைவரும் விழுந்து வணங்குகிறார்கள்)

அலமேலு: உன் அபிமான பக்தர்கள் கண்ணா!

கண்ணன்: எங்கிருந்து வருகிறீர்கள்?

ஸ்ரீவித்யா: பூலோகத்திலிருந்து வருகிறோம்...

கண்ணன்: ஏன் இவ்வளவு அவசரம்?

சாஸ்தா: பூலோகத்தில் அக்கிரமம் மிகுந்து அநியாயம் மலிஞ்சு, தர்மம் அழிஞ்சு, நீதி நாசமாகும் போது வந்து உங்களைக் காப்பாத்தறேன்னு சொன்னியே?

கண்ணன்: ஆமாம்... கீதையிலே அப்படித் தான் சொல்லியிருக்கேன்...

கிரிதர்: கீதையிலே வர்றேன்னு சொல்லிட்டு, பாற்கடலிலே பவ்யமாப் படுத்துத் தூங்கறியே இது ஞாயமா?

பிரசாத்: தர்மத்தைக் காத்து நிலைநிறுத்த நீ ஏன் வரல்லே கண்ணா...

கண்ணன்: நான் வர வேண்டிய காலம் இன்னும் வரல்லியே...

பிரசாத்: பொய்... பொய்... பொய்... எங்கு பார்த்தாலும்... எல்லோரிடத்திலும்...எப்போதும்... பொய் தானே என் வாழ்க்கையில உண்மையைப் பேசினதுமில்லே... கேட்டதுமில்லே... கேள்விப் பட்டதுமில்லே... இது மட்டும் உண்மை...

கண்ணன்: பொய்... (ஏளனமாகச் சிரித்துக் கொண்டே) பொய் சொல்வதில் என்ன தவறு?... நல்லதுக்காக நானே பலதடவை சொல்லியிருக்கேனே...

கிரிதர்: திருட்டு... திருட்டு... பிக்பாக்கெட்...பகல்திருட்டு...பேங்க் கொள்ளை...

கண்ணன்: திருட்டா.. (சிரித்தல்) கோபியர் உள்ளங்களைத் திருடினேன்... வெண்ணெயைத் திருடினேன்... என் திருட்டுக்குப் பாராட்டுக் கிடைத்ததே...

அலமேலு: கண்ணா! பூலோகத்தில விக்கிற விலைவாசிகளைப் பார்த்தா... ஒண்ணும் வாங்கற மாதிரி இல்லே... வாழற மாதிரியும் இல்லே... வாயில மண்ணை அள்ளிப் போட்டுக்க வேண்டியதுதான்..

கண்ணன்: இதில் என்ன கஷ்டம்?...

யசோதை எவ்வளவோ தடுத்தும் நான் மண்ணை அள்ளிப் போட்டுக்கொண்டேனே!

கிரிதர்: கிருஷ்ணா! பூலோகத்தில் கடத்தல் அதிகமாகி விட்டது... பெண்களைக் கடத்தல்... தங்கக் கடத்தல்... விமானங்களைக் கடத்தல்...

கண்ணன்: நான்... கோபிகைகள் நீராடும் போது... அவர்களது ஆடைகளைக் கடத்திச் சென்று விளையாடியவன். ருக்மிணியைக் கள்ளத் தனமாகக் கடத்திச் சென்று மணந்தவன் என்று உங்களுக்குத் தெரியாதா?...

ஸ்ரீவித்யா: கொலை... கொலை... கொலைகள் மலிந்து விட்டன கண்ணா!

கண்ணன்: நானும் கூட ஹிரண்யனைச் சம்ஹாரம் செய்தேன். நரகாசுரனைக் கொலை செய்தேன்... அக்கிரமக் காரர்களை அழித்துத்தானே ஆக வேண்டும்...

சாஸ்தா: நாங்கள் நிம்மதியாக வாழ முடியவில்லையே கண்ணா... வீட்டுச் சண்டை... தெருச் சண்டை... ஊர்ச் சண்டை.

கண்ணன்: இதெல்லாம் என்ன? நான் போட்ட பாரத யுத்தத்தை விடவா நீங்கள் பெரிதாகப் போர் புரிந்து விடப்போகிறீர்கள்?...

பிரசாத்: எதைச் சொன்னாலும்.. நான் செய்யாததில்லே... செய்யாததில்லே... என்று வறட்டுப் பெருமை பேசி எங்களை விரட்டப் பார்க்கிறாயா கண்ணா... 'ஸ்டிரைக்' — வேலைநிறுத்தம் என்ற புதிதாக நாங்கள் கண்டு பிடித்துள்ளோமே தெரியுமா?...

அலமேலு: வேலைநிறுத்தத்தால் பலியான குடும்பங்கள் ஒன்றா? இரண்டா? மூடி வைக்கப்பட்ட கம்பெனிகள் பத்தா? நூறா?...

கண்ணன்: வேலைநிறுத்தம்... 'ஸ்டிரைக்' இதுதான் புதுமையா...? இது உங்கள் கண்டுபிடிப்பா?... (சிரிப்பு)

சாஸ்தா: ஆமாம்! இதை நாங்கள் தான் கண்டுபிடித்தோம்...


கண்ணன்: பாரதப் போரில் அர்ஜுனன் கண்டறிந்து ஆரம்பித்து வைத்ததல்லவோ இந்த 'ஸ்டிரைக்'! அர்ஜுனன் செய்யாத 'ஸ்டிரைக்கா?...'

பல்லாயிரம் வீரர்கள் முன்னிலையில் இனி நான் வில்லையே தொட மாட்டேன் என்று கீழேபோட்டு 'டூல் டவுன் ஸ்ட்ரைக்' செய்தானே... அவன் ஸ்டிரைக்கை முறியடிக்க நான் கீதை சொன்னேனே...

பாவம் ஒன்றுமில்லாத விஷயத்துக்கெல்லாம் கொடி பிடித்துக் கோஷம் போட்டு எல்லோரையும் ஏமாற்றுவது போல் என்னையும் ஏமாற்றலாம் என்று வந்தீர்கள்?... எப்போது அங்கு நான் வர வேண்டும் என்பது எனக்கே தெரியும்! எனக்கே புத்தி சொல்ல வேண்டாம்! எல்லாம் எனக்குத் தெரியும்!

(இந்நாடகம் ஜவாஹர் வானொலி சிறுவர் சங்கத்தில் அரங்கேறியது. கண்ணனாக நடித்த சிறுவன் பெயர் முருகந்தன். மற்றக் குழந்தைகளின் பெயரும் நாடக பாத்திரங்களின் பெயர்களும் ஒன்றே.)

குழந்தைகளுக்கு ஒரு போட்டி!




அன்பார்ந்த குழந்தைகளே!

ஜாய் டாய் மாமா பற்றிய சுவையான கட்டுரையை முன் பக்கத்தில் படித்தீர்கள்.


சர்வதேசக் குழந்தைகள் ஆண்டினையொட்டி அவர், கல்கி வாங்கும் குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கெல்லாம் ஒரு போட்டி அறிவிக்கிறார்.

இந்தப் போட்டியில் அண்ணன் — தம்பி, அக்கா — தம்பி, அல்லது அக்கா — தங்கை என்று இப்படி ஒத்துழைத்து இருவர் இருவராக ஈடுபட வேண்டும். உங்கள் குடும்பத்தில் நீங்கள் ஒரே செல்லக் குழந்தைதான் என்றால் கவலைப்பட வேண்டாம். பக்கத்து வீட்டு நண்பன் அல்லது பள்ளித் தோழியைத் துணை சேர்த்துக் கொள்ளுங்கள்.



என்ன ஜோடி சேர்ந்தாயிற்று?

சரி, இப்போது உங்களில் ஒருவர் சுருக்கமாக ஒரு கதை அல்லது கட்டுரை எழுத வேண்டும். மற்றொருவர் அதற்குப் படம் போட வேண்டும். படம் போட கிரேயான் அல்லது இந்தியன் இங்க் அல்லது வாட்டர் கலர் வர்ணங்களைப் பயன்படுத்துங்கள். பென்சில்கள் வேண்டாம். கதை அல்லது கட்டுரை நகைச்சுவையாகவோ அல்லது வேறு எப்படி வேணுமானாலும் இருக்கலாம். எதைப்பற்றி வேணுமானாலும் கட்டுரை எழுதலாம். நீங்கள் இருவரும் பன்னிரண்டு வயதுக்கு மேற்படாத குழந்தைகள் என்ற உறுதி மொழியை மட்டும் மறவாமல் உங்கள் விலாசத்துடன் அனுப்புங்கள்.



முதல், இரண்டாவது, மூன்றாவது பரிசுகளை ஆறு பேருக்கும் ஜாய் டாய் மாமா ஸ்ரீ கே. வி. சீனிவாசன் வழங்குவார்.

முதல் பரிசு:

யானை உருவில் டிரான்சிஸ்டர் ரேடியோக்கள் இரண்டு

இரண்டாம் பரிசு:

அழகான "ஜாக் அண்டு ஜில்" பொம்மைகள் 2 ஜதை

மூன்றாம் பரிசு:

"ஸ்விட்டி" பொம்மைகள் இரண்டு

இவை தவிர ஆறுதல் பரிசுகளாக, இருட்டிலும் எழுதக்கூடிய "பென்லைட்"டுகள், பத்து!



பரிசு பெறும் கதை கட்டுரைகள், படங்கள் கல்கியில் பிரசுரமாகும். சிறந்த ஒரு வண்ணப்படம் கல்கி மேலட்டையிலும் இடம் பெறும். இவற்றுக்குக் கல்கி காரியாலயம் தரும் வழக்கமான அன்பளிப்பும் உண்டு!

எங்கே உங்கள் திறமையைக் காட்டுங்கள் பார்க்கலாம்!

முடிவு தேதி மே 15உ

உறையின்மேல் குழந்தைகள் போட்டி என்று குறிப்பிடவும்

கடிதப் போக்குவரத்து கிடையாது. பிரசுரத்துக்கு பயன் படாதவற்றைக் திருப்பி அனுப்ப இயலாது.



இவர்களையும் சற்றுக்



மீனு :

நான்கு சிறிய குழந்தைகள் சிரித்துக் கொண்டும் சைகைகளைக் காட்டிக் கொண்டும் பள்ளிக்குச் செல்கின்றனர். அவர்களுள் கடைக்குட்டியான சிறுமி மீனுவைப் பார்க்கிறேன். நல்ல அழகான முகம், முத்துப் பல் சிரிப்புக்கு ஏற்ற பேசும் கண்கள். பார்த்தாலே அள்ளி அணைக்கத் தோன்றும் இந்த ஐந்து வயது மீனு, பிறந்த உடனேயே கேட்கும் சக்தியையும், பேசும் சக்தியையும் இழந்தவள். இவளது ஆசிரியையான ரீடாமேரி என்னைப் பற்றிச் சைகை மூலம் இவளுக்கு விளக்க சந்தோஷத்தால் கைகூப்பி வணங்கினாள்.

'வணக்கம்' என்று சொல்ல ஆரம்பிக்கும் போதே 'வ' என்ற சொல்லுக்கு மேலே அவளால் பேச முடியவில்லை. காது கேட்கும் கருவியை அணிந்து கொண்டால்தான் உலகத்திலும் ஓசை என்று ஒன்று உள்ளது என்பதை மீனுவால் அறிய முடியுமாம்.

மீனு அவளது வகுப்பில் எல்லாவற்றிலும் முதல் மார்க். மற்றத் தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருந்த மீனுவின் கையில் மிட்டாய்களையும் பிஸ்கட்டுகளையும் திணித்தேன். மெல்லத் திரும்பியவள் தன் தோழிகளுக்கும் அவற்றைப் பகிர்ந்து கொடுத்த பிறகு அவர்களோடு சேர்ந்து சாப்பிடத் தொடங்கினாள்.

''நீ என்ன படிப்பு படிக்கப் போகிறாய்?'' என்று நான் கேட்டதை ஆசிரியை சைகையால் விளக்க அதற்கு மீனு அருகிலிருந்த நாற்காலியின்மேல் ஏறி நின்று கொண்டு ஒரு கையை உயரே தூக்கி எம்பிப் பெரிய படிப்பு படிக்கப் போவதைச் சைகையால் காட்டினாள். அவளது நண்பர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

அவளது ஊமைப் பள்ளியை விட்டு நான் வெளியேறிய போது கை அசைத்துக் கண்களில் நீர் மல்க எனக்கு விடை கொடுத்தாள்.

வீராசாமி :

லிட்டில் ஃப்ளவர் குருடர் பள்ளியைச் சேர்ந்த குட்டி மாணவன் வீராசாமிக்குப் பிறவியிலேயே கண் பார்வை கிடையாது. சகோதரி லியா என்னை அறிமுகப்படுத்த, தட்டித் தடவியவாறே என் கைகளைப் பற்றிக் குலுக்கினான். வீராசாமிக்குப் பிடித்தமான தின்பண்டம் லட்டும், பிஸ்கட்டும்தான். ''ரோஜாப் பூவை எனக்கு ரொம்பப் பிடிக்கும். மெத்தை போன்று மென்மையாக இருக்கும் இந்தப்பூ ரொம்ப அழகாக இருக்குமாமே, அப்படியா அங்கிள்?'' என்று என்னிடம் கேட்டவன் தொடர்ந்து, ''என் உறவுக் காரங்க யாரும் என்னைப் பார்க்க வரமாட்டேங்கறாங்க அங்கிள், நான் எல்லாப் பாடமும் நன்றாகப் படிக்கிறேனே. பின்பு ஏன் பார்க்க வர இல்லை?'' என்று புரியாமல் வினவினான். பிறகு தான் நன்றாகப் படிப்பதை நிரூபிப்பவன் போல ப்ரெயில் புத்தகத்தில் உள்ள வார்த்தைகளைப் படித்துக் காட்டினான். ''அம்மா, அக்கா, பட்டொளி, கடவுள்'' என்று படித்தவனைச் சில விநாடிகள் தயங்கி நிற்கச் செய்த வார்த்தை: ''கண்''. சொல்லும் போதே தலையைக் கவிழ்த்துக் கொள்கிறான். ''எனக்கு நிச்சயம் பார்வை வரும் அங்கிள், நான் பெரியவனாகி டாக்டருக்குப் படிக்க எல்லோரையும் காப்பாற்றப் போகிறேன்'' என்று உறுதியோடு சொல்கிறான் வீராசாமி. இவனுக்கு வயது ஐந்து.




கவனியுங்கள்

ஜெயப்பிரகாஷ் :

ஆறு வயதுச் சிறுவன் ஜெயப்பிரகாஷ் பிறப்பிலேயே மூளை வளர்ச்சி குன்றியவன். சமீப காலமாகத்தான் பேசக் கற்றுக் கொள்கிறான். வகுப்புக்கு வந்தால் பாடங்களில் மனம் ஈடுபடாது கோபமாக ஓரிடத்தில் உட்காருவான். இவனுக்குக் கோபம் அதிகமாக வரும். அந்தக்கோபத்தில் யாரையாவது அடித்துவிட்டுப் பின்பு கண்ணீர் விட்டுப் பெரிதாக அழுவான். அது மட்டுமல்லாது அவர்களின் காலில் விழுந்து மன்னிப்பும் கேட்பான். இவனுக்குத் தினமும் உடற்பயிற்சி அளிக்கப் படுகிறது. பயிற்சிகளை அவன் சரியாகச் செய்யாமல் எதையாவது நினைத்துச் சிரித்துக் கொண்டிருப்பான். யாராவது கண்டித்தால் அவர்களைக் கடித்து விடுவான். இப்போது அவனுக்கு ஃபிசியோதரபி சிகிச்சை அளிக்கப் படுகிறது. இவனது கண்காணிப்பாளர் இவனைப் பற்றிய தகவல்களைச் சொல்லி வரும்போதே சீவப்படாத தலையுடன், கண்கள் எதையோ வெறித்து நோக்க ஓர் ஓரத்தில் உட்கார்ந்து தனக்குள்ளே சிரித்துக் கொள்கிறான்.





சபீதா :

சென்னை பாலமந்திர் அனாதை நிலையத்தைச் சேர்ந்த குழந்தை சபீதா. பிறந்த பதினைந்து நாட்களுக்குள் இவள் இங்கு வந்து விட்டாள். பெயரிடப்படாத குழந்தைக்கு நிலையத்தைச் சேர்ந்தவர்கள் பெயரிட்டார்கள். பெற்றோர் இல்லாத இந்த அனாதைக் குழந்தைக்கு விடுமுறை நாட்களில், மற்றக் குழந்தைகள் போல வெளி இடங்களுக்குச் செல்லமுடியாது. பட்டுப் பாவாடை போன்ற பல வகை உடைகள் அணியும் அதிர்ஷ்டம் கிடையாது. பாலமந்திரைச் சேர்ந்தவர்கள் அவளுக்கு எந்தக் குறையும் தெரியாமல் வளர்க்கிறார்கள். இருந்தாலும் அண்ணா, அக்கா, பெற்றோர் கொண்ட குடும்பத்துக்காக இந்தப் பிஞ்சு உள்ளம் ஏங்கத்தான் செய்கிறது.

இவளது உலகம் இவளோடு பழகும் அனாதை நண்பர்களோடும், பள்ளியோடும் முடிந்து விடுகிறது.

பேட்டி: "சிக்கி"
படங்கள்: உத்ரா




புதுடில்லி கன்னாட் பிளேசில் பிளாட்பாரத்தில் நியூஸ்பேப்பர் விற்கிறான் முருகேஷ். இவனுக்கு வயது ஆறு. நம் நாட்டில் இப்படி எதிர் நீச்சல் போடும் மூன்று கோடி சிறுவர்களில் இவனும் ஒருவன். இவனுடைய இப்போதைய குறிக்கோள் 'ஒரு ஜதை டிராயர், ஒரு ஸ்வெட்டர், ஒரு ஜோடி செருப்பு வாங்க வேண்டும்' என்பதுதான்.

'இந்தியா டுடே' - நன்றி



Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600032. Editor: K. Rajendran

துணிக் கடைகளுக்குப் புதிய விற்பனை சாதனம்!



ஆம், அது அத்தனை எளிது...உங்கள் கடையில் சரியான வெளிச்சம் இருப்பதால்! சரியான வெளிச்சம் எத்தனை அவசியம் என்பது, உங்களைப் போன்ற அனுபவமிக்க விற்பனையாளருக்குத் தெரிந்த விஷயம்தானே. பிரகாசமும், கவர்ச்சியும் மிக்க கடை, வாடிக்கையாளர்களை வசீகரிக்கும். அந்த வண்ண வண்ணக் குவியல்களை மீண்டும் பார்க்கத்



தூண்டும். உங்கள் கடையில் மேலும் கொஞ்ச நேரம் செலவிடச் செய்யும்.

கவர்ச்சி—அதுவே ரகசியம். உங்களுக்கு விடை பிலிப்ஸ் காம்ப்டாலக்ஸ். எளிய, ஆயின் ஒளிமிகு விற்பனை சாதனம்.

அற்புதக் கவர்ச்சித் தோற்றம் விற்பனை பெருக அதுவே ரகசியம்.

இப்போது காம்ப்டாலக்ஸ் அதைத்தான் செய்கிறது. எடுப்பாகக் காட்டுகிறது எல்லாவற்றையும். அதன் விசேஷ கண்ணாடிப் பூச்சு, கூர்மையான ஒளிக்கற்றையைப் பிரதிபலிக்கச் செய்கிறது. அதனால் உங்கள் அலங்கார வரிசையை அழகுறக் காட்டி, துணிகளின் சிறப்பை எடுப்பாகக் காட்டுகிறது.

அது சிக்கனமானது கூட. ஒரு 150 வாட் காம்ப்டாலக்ஸ், ஒரு சாதாரண 300 வாட் பல்ப் உபயோகிக்கும் மின்சக்தியில் பாதிதான் உபயோகிக்கிறது. ஆயின் அதனைக் காட்டிலும் அதிக வெளிச்சம் தருகிறது தேவையான இடத்தில் பொருத்துவதோ மிக எளிது. பிலிப்ஸ் காம்ப்டாலக்ஸை இருக்கின்ற எந்த ஹோல்டரிலும் பொருத்தலாம். விளக்கு பட்டனைத் தட்டுவீர். விற்பனை பெருகும் விந்தையைக் காண்பீர்.





பிலிப்ஸ்

பிலிப்ஸ் காம்ப்டாலக்ஸ்

எழிலான பொருளை மேலும் எடுப்பாகக் காட்டுவது.

PHL-3537

PHILIPS

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசியக் காசு

குழந்தைகளே!

இங்கே மறைந்துள்ள புதையலைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

இவை வெறும் பொம்மைகள் என்று தானே நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. ஒவ்வொன்றும் ஒரு புதையலாகவோ, பணக்குவியலாகவோ மாறலாம். நீங்கள் நினைத்தால். கேளுங்கள் ரகசியத்தை. பார்வைக்கு பொம்மை போல் தோன்றும் இவைகளுக்கு தவறாமல் தினமும் உணவு அளியுங்கள். கொஞ்சகாலம் கழித்து இந்த சமர்த்துப் பொம்மைகள் கைம்மாறாக உங்களுக்கு கை நிறையப் பணம் தரும். யானையைக் கட்டித் தீனி போடுவதா என்று மயங்காதீர்கள். செட்டியாரின் தொந்தியைக் கண்டும் பிரமிக்காதீர்கள். மிக்க எளியதானது இவைகளின் உணவு. பிரதி தினமும் ஒரு சின்னக்காசு. அவ்வளவுதான்! ஒரு 10 பைசா, அல்லது 25 பைசா காசு என்று வைத்துக் கொள்ளுங்களேன். யானையின் முதுகிலும், செட்டியார், ஆனந்தராயன் இவர்கள் வாயிலும் காசு போடத் தகுதியான துவாரம் இருப்பதைக் கவனியுங்கள். அதன் உள்ளே காசைப் போட்டுவிடுங்கள். மாத இறுதியில் பொம்மையின் அடியிலுள்ள திறக்கும் கதவைத் திறவுங்கள். பொல பொலவென்று கொட்டும் காசு! புதையலைப்போல்!! உங்களுக்கென்று ஒரு கணக்கு ஆரம்பித்து, அதை அருகாமையிலுள்ள பாங்கியில் கட்டுங்கள். கையில் கிடைக்கும் காசுகளை வீண் செலவடிக்காமல் இம்முறையில் சேமியுங்கள். உங்களுக்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது.

உங்கள் சிறு சேமிப்புகளைத்தான் கைத்தொழில் அபிவிருத்திக்காக பாங்கிகள் வழங்குகின்றன. ஜாய் டாய் நிறுவனமே இதற்கு தக்க சான்று. ஜாய் டாயின் வளர்ச்சிக்கு எமது பாங்கி — ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா — பெரிதும் உதவியுள்ளது.

விபரங்களுக்கு எழுதுங்கள்:



ஜாய் டாய் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

31 எல்டாம்ஸ் ரோடு, மதறாஸ் 600 018.

— குழந்தைகளுக்கு ஆனந்தம் அளிப்பதோடு அறிவையும் வளர்க்கும் அரிய சாதனங்கள் படைப்பவர்கள்.

1979—சர்வ தேசக் குழந்தைகள் ஆண்டு

SPA/69 (R)